T. 1319.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம் (தடை)

என்னும்

சர்வ சந்தேக நிவாரணம்.

(முதற்பாகம்)


சர்வமதாதீத

சுத்தாத்வைத சத்திய தரிசன

சித்தாந்தசைவப்பிரசாரக

மா. நீலகண்ட சித்தாந்தியார்

இயற்றி வெளியிட்டது.



கலி(ருதுஙஉ) ஆங்கிரச ஷு

மார்கழிமீ

1932.

PRINTED AT THE KABEER PRINTING WORKS TRIPLICANE


*All rights reserved.*] [விலை அணா 6.

# விஷய அட்டவணை


பக்கம்

(க) பிறர் கூற்றை யெடுத்துரைத்தல் 1

(உ) சமாதானம் 3

(ங) தீண்டாமை உலக முழுவது முளது என்பது 4

(ச) அரசியல்வாதிகள் செய்யவேண்டியகடமை 11

(ரு) சண்டாளர் முதலாயினார் ஆலயப் பிரவேசஞ் செய்யக் கூடாது என்பதற்குச் சிவாகம மேற்கோள். 12

(சு) விஷ்ணுவும் பாஞ்சராத்திராகமத்திற்கூறல் 15

(எ) காந்தி முதலாயினார் சாஸ்திரங்கட்குக் கட்டுப் பட்டொழுக வேண்டுமெனல் 17

(அ) காந்தியைப் பின்னும் கண்டித்தல். 20

(கூ) சிவாகமம் சத்தியமே போதிக்குமெனல் 24

(கய) சண்டாள பதந்தீண்டாதாரையே குறிக்குமெனல் 27

(கக) சண்டாளர் என்போர் யார் என்பது 34

(கஉ) வேதத்திற் சண்டாளபதப் பிரயோகம் 36

(கங) தமிழிலுஞ் சண்டாளபதம் புலையன் முதலியோரைக் குறிக்குமெனல் 37

(கச) கண்ணன் உபதேசத்திற்குங் காந்தியின் கூற்றுக்கும் பெரும் பேதமெனல் 37

(கரு) தேவர்களுள்ளும் நான்கு ஜாதிகளுண்டென்பது 54

(கசு) சண்டேசுர நாயனார் ஆனிரை போற்றினமை 55

(கஎ) நந்தனார் விஷயம் 61

(கஅ) முள்ளிச் செடிக்கு முத்திகொடுத்த உமாபதிசிவம் 64

(ககூ) மூஷிக விஷயம் 65

(உய) முடிவுரை. 65

சிவமயம்

அன்பர்காள் !

மூன்று வருடங்கட்குமுன்னர் தீண்டாதார் ஆலயப் பிரவேசஞ் செய்ததால் ஈரோடுச் சிவாலயம் அடைபட்டுப் பூசையின்றிக் கிடந்தபோது, "யார் சிவாலயத்துள் நுழையக்கூடாது" என்கிற பத்திரிகையினை வெளியிட்டேம். மூன்று மாதத்திற்குமுன்பு காந்தி புனாவில் "தனித்தொகுதி கூடாது கூட்டுத் தொகுதியே வேண்டும்," என்பதை வற்புறுத்துவதாகக் கூறித் தீண்டாதார் பக்கல் பரிந்து பேசி அது காரணமாக உண்ணாவிரதமிருக்கிறேனென அவர் கூறியதால் அரசியல் விஷயந் தானே என்று வாளாவிருந்து விட்டேம். ஆனால் அது ஒருவாறு முடிவுற்ற பின்னர் உடனே அவர், "தீண்டாதார் ஆலயப் பிரவேசஞ் செய்ய அனைவரும் அநுமதித்தல் வேண்டும். இன்றேல் குருவாயூர் விஷயமாக உண்ணாவிரதமிருப்பேன்" என்னுங் கிளர்ச்சியை யெழுப்பினதோ டமையாது, "தீண்டாமைக்குஞ் சாஸ்திரத்தில் ஆதாரமில்லை," "தீண்டாதாரை ஆலயத்துள் விடக் கூடாதென்பதற்கும் ஆதாரமில்லை," என்று பல அறிக்கைகள் வெளியிட்டனர். எத்தனையோ பண்டிதர்கள் சமாதானங் கூறினும் அவர் கட்டுப்படவில்லை. ஆண்டாண்டுக் கலகமுங் கல்லடியு மாரம்பித்தன. ஆகவே, "நிறுத்திடவலான மலனூனெறியை யென்று மறுத்திடவலான வலமார்க்க மயலுற்றே நிறுத்திலன் மறுத்திலனெனிற் கரிசன் நேசமறுத்தவனை மாய்க்கை கரிசல்லவறமாமே," என்று ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் அகத்தியனார்க்கு ஆதி காலத்திற் றிருவாய் மலர்ந்தருளிய சிவதருமோத்தரத்திற் கட்டளை பிறந்துள்ளதாதலின் அக்கட்டளையைச் சிரமேற் றாங்கிச் சாதுக்கள் சந்தோஷிக்குமாறு "தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம்" என்னும் இந்நூலைப் பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம் என்னும் பிரமாணத் திரயங்கொண்டு ஆட்சேப சமாதானத்துடன் இயற்றியுள்ளேம். முற்கூறிய திருப்பாசுரப்படிச் சிவாகம தூஷணை, சிவாலய தூஷணை முதலியவற்றைக் கண்டிக்காது கேட்டுக்கொண் டிருப்பவனைக் கொல்லல் பாவமாகாது புண்ணியமே யென்பது பசுமரத்தாணி யறைந்தாற்போல் நன்கு நாட்டப் பட்டிருத்தலின் அக்கட்டளைக்குப் பயந்தே இச்சாஸ்திரத்தினை யியற்றினேமாதலின், அன்பர்கள், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினு மப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு," என்னும் நாயனார் வாக்குக்கிணங்கச் சித்த சமாதானத்துடன் இந்நூலைப் பன்முறை யாராய்ந் தமைதி பெறுவார்களென எல்லாம் வல்லஇறைவனடி வழுத்துகின்றேம். இன்னும் 80 பக்கம் அச்சிடவில்லை.

இங்ஙனம் :

**மா. நீலகண்ட சித்தாந்தியார்.**

[redacted]

# பரிசோதன பத்திரம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 13 | சண்டாளன் | சண்டாளன் வண்ணுன் |
| 15 | 14 | சண்டாளன் | சண்டாளன் வண்ணுன் |
| 26 | 26 | கிருத்தியம் | கிருத்தியம் |
| 42 | 4 | வேலும் | மேலும் |
| 44 | 29 | கின்றனருல் | கின்றன ரென்ருல் |
| 46 | 38 | குஞ்சதிகார் | குஞ்சதிகாரி |
| 46 | 39 | கண்டீரி | கண்டீர் |
| 47 | 1 | யோகற்தித் | யோகத்திற் |
| 48 | 32 | காஞவித | நாஞவித |
| 49 | 9 | படுகிறேன் | பாடுகிறேன் |
| 55 | 37 | கிதாகாசத்திற் | சிதாகாசத்திற் |
| 59 | 21 | பெருமாஞற் | பெருமாஞர் |
| 59 | 27 | கட்சு | சட்சு |
| 59 | 39 | அவத்ரை | அவரைத் |
| 64 | 20 | பணித்தணர் | பணித்தனர் |
| 28 | 21 | ஷிரா த | ஷிரா த்ர |
| 28 | 21 | தூா ஆ ஊ | தூா ஆ உ |
| 28 | 25 | யதெதாயம் த | யதெதாயம் த |
| 28 | 26 | க்ஷிவதெ | க்ஷிவதெ |
| 28 | 28 | வுஜா | வுாஜா |
| 28 | 30 | பிரஜா | பிராஜா |
| 29 | 6 | பிரஜா | பிராஜா |
| 29 | 9 | ஹாணவ ஸ ய | ஹாணவ ஸ ய |
| 29 | 10 | ஸெஅவ | ஸெஶ்வ அ |
| 30 | 21 | ஶ வ | ஶ வ |
| 30 | 21 | அ உ | அ ஊ |
| 30 | 28 | பிரஜா | பிராஜா |
| 31 | 29 | வாய | வாய |
| 31 | 30 | ஸெமாஶியட்ந | ஸெமாஶியட்ந |
| 31 | 32 | பிரஜா | பிராஜா |
| 31 | 34 | வாய | வாயி |
| 31 | 35 | வுஜாவ | வுாஜாவ |
| 31 | 35 | அஸெஶ்க | அஸெஶ்க |
| 31 | 35 | அுஂ | அுஂ |
| 31 | 35 | ஶியட்நஂ | ஶியட்நஂ |
| 17 | 7 | கசகு $\frac{1}{2}$ | ககுகு $\frac{1}{2}$ |

உ

சிவமயம்

# தீண்டாதார் ஆலயப்பிரவேச நிக்ரஹம்

உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந் தோங்கி
யிலகுஞ் சிவனெம் மிறை.

## (க) (பூர்வ பட்சம்)

அல்வது

## பிறர் கூற்றை எடுத்துரைத்தல்

ஆதிகாலந்தொட்டு இப்பரத கண்டத்திற்முன் தீண்டாமை என்னும் பேய் தாண்டவமாடுகிற தென்றும், இதர தேசங்களில் இத்தீய வழக்கம் கிடையவே கிடையாதென்றும் ஆதலின் இப் பேயைத் துரத்தியடிக்க வேண்டுமென்றும் ஆலயத்துள் தீண்டாதா ரெனப்படுவோர் நுழைவதற்கு ஒருவருந் தடை செய்யலாகா தென்றும், எல்லோரும் கடவுளாற் படைக்கப் பட்டமையின் அனை வரும் அவருக்குப் புத்திரர்களாதலின் அவர் முன்னிலையில் எல் லோருஞ் சமமேயென்றும், அக்காரணம்பற்றி மானுட ஜென்ம மெடுத்த நாமனைவரும் சகோதரத்துவம் பேணியொழுகாது நம்முள் ஒரு பகுதியினரை மாத்திரம் புறக்கணித்துக் கோயிலுட் புக விடாமைகொடும் பாதகமே யென்றும், அவ்வாறு புரிதல் ஆண்ட வன் திருவுளப் பாங்கிற்கு முழுவிரோத மென்றும், ஆதலின் அவ் வாறு செய்வோரனைவரும் நரகம் புகவேண்டி வருமென்றும், அத் தீண்டாதாரை ஆலயத்துட் புகவிடாவிடில் அங்கே கடவுளுமிரா ரென்றும், ஒவ்வருவருங் கடவுளம்சமாதலின் ஒருவரை விடா விடின் கடவுளையே தடைசெய்தது போலாமென்றும், பண்டைக் காலத்துப் பாமரர்கள் யாரோ குருட்டுத் தனமாய் ஏற்படுத்திய கபோதிக் கதையாகிய கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்துப் பழைய வழக்கம் பழைய வழக்கமென உளறிக்கொண்டு நவீன நாகரீகமிக் குற்ற இக்காலத்தும் பிடிவாதஞ் செய்வோர் மூடர்களே யெனவும், ஆதலின் மூடர்களுக்குப் புத்திபுகட்டும் பொருட்டுக் கோயிலின் வாயிலில் உண்ணுவிரதம் பூண்டு சத்தியாக்கிரகஞ் செய்து உட்

புகுதல் வேண்டுமென்றும், அவ்வாறு செய்யின் அந்நிய அரசாங்கந் தலையிட்டுச் சத்தியாக்கிரகஞ் செய்வோரைக் கலகக்காரர்களென அப்புறப் படுத்துகின்றனராதலின், சட்டசபையிலேயே "தீண்டாதாராலயத்துட் புக அநுமதியாதவரைத் தண்டிக்குமாறு ஓர் புதிய சட்டம் வெகுதுரிதமாக இயற்றல் வேண்டுமென்றும் தீண்டாதாரைச் சண்டாளர், பறையர், புலையர், சக்கிலிகள், தோட்டிகள், மாலவாள்ளு, மாதிகா, அவர்ணர், தீயர், நாயாடி, நாம சூத்திரர், எனப் பலவாருக இழித்துக் கூறி அவரிடத்திற் சமத்துவம், சகோதரத்துவம் பாராட்டாது, தீண்டாமையே வெகுவாகப் பாராட்டி அவர்களைச் சேரியிலோர்புறமாக வொதுக்கி வைக்கும்வரையிற் சுயராஜ்யமுஞ் சுதந்திரத்துவமும் பகற்கனவும் முயற்கொம்புமாய் முடியுமெனவும், நந்தனாரா தியரைக் கோயிலுள் விடவில்லையா வென்றும் இன்னோரன்ன பிறவற்றையுங் காந்தியவர்களும் அவரைப் பின்பற்றும் பல்வகைப் பட்ட குழுவினரும் பகர்கின்றனர். மதவிஷயத்திற் பற்றுடைய மாளவியாவும் அவ்வாறே உறுதியாகக் கூறுகின்றனரென்றும், விவேகானந்தரும் ஜாதிபேதம் பாராட்டாது அமெரிக்காவில் ஆர்யமதப் பிரசாரஞ்செய்து அறிவின்மிக்க அமெரிக்கரும் அங்கீகரிக்குமாறு செய்தனரென்றும், கிருஷ்ண பரமஹம்சரும், பிரம்ம சமாஜத்தாரும் ஆரிய சமாஜத்தாரும் அவ்வாறேயென்றும் இவர்களனைவருஞ் சீர்திருத்தக்காரர்களாதலின் எனையோரும் அவர்களைப் பின்பற்றி மதசீர்திருத்தமும் சமூகசீர்திருத்தமுஞ் செய்தல் வேண்டுமென்றும் பல்லாற்றானும் பறையறைகின்றனர்.

அஃதன்றியும் "33 கோடி இந்துக்களில் 4 கோடியினராகிய அத்தீண்டாதாரை நாம் ஒதுக்கி வைத்தால் அவர்கள் கிறிஸ்தவ பௌத்த மகம்மதிய மதங்களில் நாளுக்குநாள் சேர்ந்து விடுகின்றனர். பிறகு நம்மிந்துக்களுடைய தொகைகுறைந்து பலஹீனமடைகிறது. முதலில் தீண்டப்படாதாரா யிருந்தோர் இதரமதப் பிரவேசம் செய்தான பின்னர், கைகுலுக்கி அவர்களைத் தீண்டிக் கொள்ளுகிறோம். இது மதிஹீனந்தானே" என்பரோர் சாரார். ஆலயத்துள் ஆடுமாடு நாய் நுழையவில்லையா? மனிதன் அவைகளைவிடக் கீழ்ப்பட்டவனு என்பர் மற்றோர் சாரார். அதோடமையாது விக்ரகங்களின் தலையில் எலி ஏறவில்லையா என்பர் பிறிதோர் சாரார். அதுமட்டுமா! ஐயோ, சமபந்தி போஜனஞ் செய்யவேண்டுமென்பர் இன்னுமோர் சாரார் (சமபந்தி போஜனமும் சில விடங்களில் நடந்தும்விட்டது). அதோடமையாது அத்தீண்டாதாரோடு கலப்பு விவாகமும் நடைபெற வேண்டுமென்பர் கடைச்சாரார்.

## (உ) சித்தாந்தம் (சமாதானம்)

அன்னாரனைவருக்கும் பலவகைச் சமாதானங்களைக் கரதலாமலகம் போலெடுத் தெடுத்துப் புகட்டினும் உத்தமர்களையும் உத்தம மார்க்கத்தினையும், "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் பொய்யா மொழியினர் கட்டளையையும் சிரமேற்ருங்காது தூஷிப்பதே பூஷண மாகக் கொண்ட பிடிவாதக்காரர்களாதலின் சாதுக்கள் சந்தோஷிக்கு மாறு ஒவ்வோர் விஷயத்தினையும் பூர்வ பட்சமாக நிறுத்திக் கண்டித்து எமது சித்தாந்தத்தினை யெடுத்துரைக்கப் புகுகின்ரும். சித்த சமாதானத்துடன் ஆதியோடந்தம் ஆழ்ந்தாராய் வாராக. பிறகு "யார் மூடர்கள். யார் விசால நோக்குடையவர்கள் யார் முற்போக்காளர்கள்" என்பதை அறிஞர்கள் அறிந்துகொள் வாராக. "ஆட்டுக் குட்டியும் ஓநாயும்" என்ற கதைக்கிணங்க ஆத்திரமடையாதிருப்பாராக. வைத்தியமோ, நீதிச்சட்டமோ, வர்த்தகமோ, இயந்திரமியற்றலோ, விவசாயமோ உயிர்நூற் புலமையோ, ககோள பூகோள சாஸ்திர விற்பன்னமோ, இன் னும் சுஷ கலைஞானமோ பிறவோ இவற்றுளேதேனுமொன் றிற்றேர்ச்சிபெற விரும்புவோர் அற்றுறையின் மிக்காரையடுத்து விஷயத்தினைச் சந்தேக விபரீத மயக்கமறக் கற்றுத் தேர்ந்தன்ரே வெளியிற் றலை காட்டல் மரபு? அறையிலாடி யன்றே அம்பலத் தாடல் வேண்டும்! அதை விட்டு ஈண்டுக் காட்டப்பட் டவை யனைத்தும் பெரும்பாலும் அழிதன் மாலையவாய உடலோம் பற் பொருட்டுப் போதிக்கும் நூல்களாதலின், சிறப்பாக என்று மழியா ஆன்ம லாபம் பெறும்பொருட்டும் பொதுவாக உடலோம் பற் பொருட்டும் ஆயுள் கால பரியந்தம் ஆன்ரோர்களை யடுத்து அறிதற்பாலதாய மகத்தான மத விஷய நூல்களை நன்கு ஆராயா மலே முழுச் சோம்பேறிகளாய் விளையாட்டுச் சிறுவர்போல் "கொடிறும் பேதையுங் கொண்டது விடாது" என்பதுபோல், விதண்டாவாதம் பேசுமவர்க்கியாமென்னெனன் றெடுத்துரைப்பது!

அம்மம்ம அது பெருங் கஷ்டமே!

மேலும் அன்னர் "வைதீகப் பித்த மூடர்களுக்கென்ன தெரியும். நாம் கலாசாலைகளிற் பதினைந்தாண்டு பயின்று பட்டம் பெற் றுப் பின்னும் பல்வகைப்பட்ட பரீட்சையினுந் தேர்ந்துளோம். நாலாயிரம் ஐயாயிரம் சம்பாதிக்கின்றேம். வைதீகர் பத்து ரூபா யேனும் சம்பாதிக்க வழியற்றிருக்கின்றனர்" என இறுமாப்புறு கின்றனர்.

ஆனல் ஆரிய மத விஷயத்தினை நூறாண்டு ஆராய்ச்சி செய்யி

னும் இன்னும் அரிய பெரிய விஷயங்கள், அநேக பிறவிகளிற் "கோடி ஜன்மார்ஜிதை : புண்யைஸ்ஶிவேபக்தி : ப்ரஜாயதே" என்று சிவகீதை செப்பியதுபோன்றும், "பல்லூழி காலம் பயின்ற ரனை யர்ச்சிக்கில் நல்லறிவுசற்றேநகும்" என்று ஔவைப் பிராட்டியார் தம் ஞானக் குறளிற் றெரித்தாங்கும், புண்ணியப் பேற்றினுலேயே அறிய வேண்டியதொன்ருமாதலின் ஒன்றும் ஆராயாமலே தான்ருேன்றித் தம்பிரான் மார்களாய் மனம் போனபடியெல்லாம் பிதற்றும் பித்தர்களிவர்களே யென்பதனைத் தெளிவாய் எடுத்துக் காட்டுவேம். 'முற்றுமுணர்ந்தவரில்லைமுழுவதூஉங்கற்றனமென்றுகளியற்க", "கற்றதுகைம்மண்ணளவுகல்லாததுலகளவு", "தொட்டனைத்தூறுமணற்கேணிமாந்தற்குக்கற்றனைத்தூறுமறிவு" "தான் கற்றநூலளவேயாகுமாம் நுண்ணறிவு," என்னு மான்ருேர் வாக்கியங்களைக் கடைப்பிடிப்பாராக.

பர சிவாஞ்ஞையாகிய வேதாகமாதிகட்குப் பயந்து கூடியவரையில் தம் சக்தியநுசாரம் அவற்றின் விதிவிலக்குப்படி யொழுகுபவரை வைதீகப் பித்தர், மூடர் எனத் தூஷிக்கின்றனராதலால் அவர்கள் அவ்வைதீகரைத் தமக்குத் தெரியாமலே உயர்த்திக் கூறிவிட்டமை கீழ்க்கண்டவற்ருல் நன்குஸ்தாபிக்கப்படும். அதாவது வித் என்னுந் தாதுவிற்கு ஞானம் என்பது பொருள். ஞான விஷயத்தினைப் போதிப்பது வேதம். எனவே வைதீகர் என்ருல் ஞானவிளக்க வேதத்தினைப் பின்பற்றுவோர் என்பது திரண்ட பொருள். வைதீகப் பித்தர் என்ருல் ஞான விஷயத்தில் பித்தமேறினவர் என்பது பெறப்பட்டு அவர்களைத் தூஷிப்போர் அவைதிகப் பித்தர், அதாவது அஞ்ஞான விஷயத்தில் பித்தமேறின பாஷாண்டிகளாகிய முழுமூடர் என்பது தானே போதரும். ஆகவே இவர்கள் கிளைப்ப தொன்றும் பிதற்றுவது மற்றென்றுமாய் முடிதல் காண்க. "கற்றவரை யொருநாளும் பழிக்க வேண்டாம்" என நீதி பிறந்திருப்பதையுங் கற்காமல் ஞான விஷயத்தினைக் கற்கும் பெரியோர்களை ஏனோ தூஷித்துப் பாவ மூட்டை கட்டிக்கொண்டு நரகலோக யாத்திரை செய்ய வேண்டும்? அந்தோ கலியின் கொடுமை!

## ௩. தீண்டாமை பரதகண்டத்தின் மாத்திரமன்று உலக முழுவதுமுளது என்பது

அநுவாத பூர்வபட்சம் :—"ஆதி காலந்தொட்டு இப்பரத கண்டத்தின் மாத்திரமே தீண்டாமை என்னும் பேய்பிடித்தாட்டுகிறது. அதைத் துரத்தி யடிக்கவேண்டும்."

சித்தாந்தம் :—நம் பரதகண்டத்தின் மாத்திரமன்று.

உலக முழுவதுமே தீண்டாமையுளது. சுருதி, யுக்தி, அநுபவம் என்னும் பிரமாணத்திரயத்துள் அநுபவத்திற்கும் யுக்திக்கும் எட்டா விடயத்திற்கன்றோ சுருதியைத் தேடல் வேண்டும். மேலும் இக்காலத்தினர் பெரும்பாலும் சுருதி தம் புத்திக்கெட்டாத சுருங்கிய மதியினராதலினாலும் காட்சியளவையெனும் பிரத்தியட்சப் பிரமாணமாகிய அநுபவமொன்றனையே முக்கியமாய்க் கைக்கொள்வோராதலினாலும் இவ் விஷயத்தினைத் தாபிக்க நூலளவை அதாவது சுருதிப் பிரமாணத்தை ஈண்டு யாந்தேடேம். பிரத்தியட்ச விஷயத்தினைக் (Practical knowledge) கொண்டே நிலைநிறுத்துகின்றேம். முதலாவது, ஐந்தாம் ஜார்ஜ் மன்னராகிய ஆங்கிலேய சக்ரவர்த்தியினையே உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அவருக்குச் சுமார் இருபது மந்திரிகளுளர். அவ்வமைச்சருள் எவரேனும் அன்றிப் பிரதானியேனும் மன்னரைக் காண வேண்டியிருப்பின் அதற்கேற்ப ஓர் காலம் வரையறுக்கப்பட்டு அக்காலத்தில் மன்னர் பேட்டியளிக்கின்றனர் எனப் பன்முறையும் பத்திரிகையிற் காண்கின்றாம். அவ்விருவரும் வார்த்தையாடுங் காலத்திற் பிரதானியாயிருப்பினும் மன்னரை நோக்கி, "ஹே, ஜார்ஜே! நான் சொல்வதைக் கேளும். இந்தியாவில் மகம்மதியர்களுக்கும் இந்துக்களுக்கும் பிடிக்காது. இந்துக்களுக்கும் தீண்டாதாருக்கும் பிடிக்காது, மகம்மதியர்களுக்கும், இந்துக்களுக்கும், பார்ஸிகளுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் ஒருவரோடொருவர் மதவிஷயமாய்ப் பிடிக்காது. அவ்வித்தியாசமுள்ளவரையில் நாம் அவர்களுக்குச் சுயராஜ்ய மளிக்க முடியாது" என்று மன்னரை அடிக்கடி தோட்டுத் தோட்டுப் பேசக்கூடுமோ? அவரைத் தட்டித் தட்டிக் கேட்கக்கூடுமோ? இவ்வொரு விஷயத்தினை யோசித்துப் பார்ப்பாராயின் அது ஒன்றே தீண்டாமைக்குச் சமாதானம் எடுத்தறையும். இவ்வாறே, அமெரிக்கா கண்டத்தக்கிராசனாதிபதி, பிரான்சு, ஜெர்மனி, சீனா, ஜப்பான் முதலிய தேசாதிபதிகளிடத்தும் மந்திரிகளாய கீழுத்தியோகத்தினர் மன்னரை மேல் விழுந்து எருமைபோலுராயாமல் சற்றுத்தூரத்திலிருந்தே மரியாதையாகவும் அடக்கம் ஒடுக்கமாகவும் உரையாடல் பிரத்தியட்சம். அரசர், பிரதானியையேனுந் தம் சிம்மாசனத்திற் பக்கத்தில் நெருங்க உட்கார வைத்துக் கொள்வரோ? ஓர்முறை வைகவுண்ட் கோஷன் சென்னைக் கவர்னராய் இருந்தவமயத்து வைத்தியசாலைகளிலுள்ள தாதிகளுக் (நரசுகளுக்) குதவவேண்டி (Nurse's Fund) அக்கவர்னரது தோட்டத்திலேயே சில வேடிக்கைக் காட்சிகளுக்கு எற்பாடாயிருந்தது. அதற்குஉட்பிரவேச கட்டணம் அரை ரூபாய். யாமுஞ் சென்றிருந்தோம். கவர்னரும் மனைவி சகிதம் வந்திருந்தார். அந்தரங்க காரியதரிசியும் பின்றொடர்ந்

தார்: பனகால் மன்னர் முதலாயினோரும் வந்திருந்தனர். ஆனால் கவர்னர் கோப்பைத் தட்டுகளைக் குறிவைத்தடித்தல் முதலிய ஆங்கிலேய விளையாட்டுக்களைத் தாமே தமது கையால் வேடிக்கை யாக விளையாடிய பின்னர்க் கூட்டத்தினின்றும் பிரிந்து தம்மில்லத் திற்கேகுந்தறுவாயில் அந்தரங்க காரியதரிசியிடம் ஏதோ சில விஷயங்களைக் கூறிக்கொண்டே சென்றார். அதற்குப் பதிலாக அந்தரங்க காரியதரிசி "அவ்வாறே யாகட்டும். அப்படியே செய் கிறேன்" என்று கவர்னரைத் தீண்டாமலே சற்றுத் தூரத்தி லிருந்தே இரு கைகளையுங் கட்டிக்கொண்டு மரியாதையாக அடக்க வொடுக்கமாக உரையாடிச் சென்ற காட்சியை யாங் கண்ணாரக் கண்டேம். இது பொய்யன்று. அவ்வளவு தூரம் போவானேன்? இங்கு ஓர் உத்தியோகசாலையில் ஐம்பது ரூபாய் சம்பளத்தமர்ந் துள்ள ஓர் சிறிய தலைவனை அவன் கைக்கீழுத்தியோகம் புரியும் ஏனையோர் தீண்டித்தீண்டி "தலைவனே நான் சொல்வதைக் கேள்" என்று அதனப்பிரசங்கித்தனமாய்ப் பேசும் வழக்கமின்று. தூரத்திருந்தே மெதுவாகவும் அமரிக்கையாகவும் வசனிக்கக் காண்கின்றோம். ஆகவே இத்தீண்டாமை என்னும் வழக் கம் உலக முழுதும் இவ்வாறே இயல்பாகவே யமைந்துளது. ஒரு வர் தூண்டி வந்ததன்று. ஆனால் ஈண்டெடுத்துக் காட்டிய விஷய மனைத்தும் உயர் சம்பளம் பெறும் காரணத்தினைப்பற்றி யெழும் அந்தஸ்திற்குத் தக்க தீண்டாமையாகும். இதைத் தன மதமென்றே கூறினு மிழுக்காது. இம்மட்டோ அமெரிக்காவிலும் பலவகைச் சாதியின ரிருப்பதாகவும் அங்கும் தீண்டாமையுளதென்றும், நீகி ரோவர் முதலாயினரை வெகு கஷ்டப்படுத்துகின்றனரென்றும் இங்கிலாந்திலும் (Lords, Commons) பணக்காரப் பிள்ளைகள் ஏழைப் பிள்ளைகளோடு சேர்ந்து வாசிக்க விடுவதில்லையென்றும், ஜபான் அரேபியா முதலிய விடங்களில் ஓர்வகைச் சாதியினரைத் தீண்டுவதில்லையென்றும் பன்முறையிலும் பத்திரிகையிலும் வாசித் துள்ளேம். இம்மட்டோ, தனவந்த னொருவன் தன்னெருங்கிய உறவினன் ஏழையா யிருப்பின் அவனைத் தன் பந்துவென்று சொல்ல மறுப்பதையும் அவ்வேழைத் தன் வீட்டிற்கு வரினும் அவனை முகாலோபனமும் பண்ணுமலும் அவனிடம் உரையாடாம லும் இறுமாப்படைந்திருத்தலைப் பலவிடத்துங் காணலாம். இதே வழக்கம் இங்கிலாந்து முதலிய எந்நாட்டுமுளது. இதனை ஒருவரும் மறுக்க முடியாது. இது ஒரு பெருந் தீண்டாமை யன்றோ? இவை யனைத்தும் பணக் கொழுப்பினு லுண்டாகுந் தீண்டா மையே.

இது நிற்க இன்னொருவகைத் தீண்டாமையுளது. அதாவது இங்கிலாந்திலோ இந்தியாவிலோ மற்றெவ்விடத்திலோ ஒரு தந்

தைக்குத் தன் மகனது நடத்தையிலோ குணத்திலோ பிடிக்காவிடில் "என் முகத்தில் விழிக்காதே. என் முன்பாக நில்லாதே ஓடிப் போ," என்கிறான். சிலவேளை அவனது மைந்தன் தகாதவர்களோடு கூடிக்கொண்டு தாய் தந்தையரை வைது அடித்து வீட்டிலுள்ள சொத்தையெல்லாம் வீண் வழியிற் செலவு செய்வானாயின் உடனே தந்தை தன் மனைவியைப் பார்த்து அவனை வீட்டு வழி சேர்க்காதே. அவனால் நம்முயிருக்கே மோசம் விளையும்போலிருக்கிறது. ஆதலின் அவனுக்குச் சாப்பாடும் போடாதே. போட்டால் தின்று கொழுத்துத் தீங்கு விளைவிப்பான்" என்கிறான். அம்மட்டோ! "என் மகன் என் புத்தி கேட்காமல் தன்னிஷ்டப்படி வீணரோடு சிநேகித்து வீட்டிலுள்ள பணத்தையெல்லாம் வீண் செலவு செய்கிறான். ஆதலின் ஒருவரும் அவனுக்குக் கடன் கொடுக்க வேண்டாம். கொடுத்தால் நான் உத்தரவாதியாக மாட்டேன்" என்று விளம்பரஞ் செய்து விடுகிறான். சில சமயம் தகப்பனுக்கும் மகனுக்குங் கடும்போர் நிகழ்கின்றது. மல்ல யுத்தம் புரிகின்றனர். சிலவேளை ஒருவரையொருவர் தீண்டாமலே கத்தியாலோ கட்டையாலோ குத்தியோ அடித்தோ நீட்டி விடுகின்ற கதையைப் பத்திரிகையிற் படிக்காதார் யாரே! சகோதரருள்ளும் நில விஷயமாகவோ பண விஷயமாகவோ பெண் விஷயமாகவோ மனஸ்தாபமேற்பட்டு ஒருவர் வீட்டுக்கு மற்றொருவர் சுபா சுப காரியங்களிலுங்கூடப் போகாமல் விலகி யிருப்பதை இவ்வுலகம் அறியாதா? மிராசுதார்கள் ஒருவரை யொருவர் ஆள் விட்டடிக்குங் கதை அறிவாளிகளறிந்த தொன்றே. ஈண்டெடுத்துக் காட்டிய விஷயங்களெல்லாம் ஒருவரை யொருவர் தீண்டக்கூடாத மனக் கசப்பையே காட்டுகின்றன.

மற்றோர் வகையான தீண்டாமையைக் காட்டுகின்றோம், கவனிப்பாராக. ஓர் தீண்டாதார் வீட்டிலேயே அமாவாசையோ கிருத்திகையோ வந்துவிடில் அன்றைய தினம் ஓர் பெண்ணோ ஆணோ குளித்து மூழ்கிச் சுத்தமாயிருந்தால் அவனோ அவளோ, குளிக்காத மற்றோரைப் பார்த்துக் குளித்துவிட்டுவா கற்றாழை நாற்றம் கொத்தோடே வீசுகிறது என்னைத் தீண்டாதே. கோயிலுக்குப் போக வேண்டும் சுவாமி கும்பிடவேண்டும்" என்று சொல்வதைக் காணலாம். இதே வழக்கம் பிராமணர், சைவர், இதர ஜாதியினருள்ளும் உண்டு. இது ஓர் மேலான தீண்டாமை.

இன்னுமோர் தீண்டாமை யுண்டு. ஒருவன் கொஞ்சம் நல்ல உடுபாவனை யுடையவனாயிருந்தால், வேர்வை நாற்றம் வீசி அழுக்கு அடையடையாய்ப் பிடித்த ஒருவனை விலகிப்போ என்கிறான். உதாரணமாக ஓராச்சரியமான விஷயத்தை யெடுத்துக் காட்டுகின்றோம்.

ஒருநாள் ரெயில் வண்டியிலேறித் திருமுல்லைவாயிலுக்குச் சென்று கொண்டிருந்தோம். ஏறுங்கால் வண்டியில் ஒருவருமில்லை. ஆனால் பிறகு கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த வெள்ளைப் புடவையும் வெள்ளையிரவிக்கையு மணிந்து சற்று வயது முதிர்ந்த ஓர் ஸ்திரீ கோப்பைத்தட்டில் சாத முதலிய வற்றை வைத்து ஓர் வெள்ளைக் குட்டையாற் கட்டிக்கொண்டு அதே வண்டியிலேறினாள். பிறகு பேசின்பிரிட்ஜ் ஸ்டேஷன் சமீபித்த போது ஓர் வன்னியகுல மாது அதே வண்டியிலேறினாள். அவள் முன்னேறினவள் பக்கத்தில், ஸ்திரீகள் என்ற முறையினால் போயுட்கார்ந்தாள். இருவரும் கறுப்பாய்த்தா னிருந்தார்கள். முன் னவளோ கிழவி, தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்தவள், ஆனால் வெள்ளைப் புடவையும் வெள்ளையிரவிக்கையு மணிந்து சோற்றுப் பொதிக்கு வெள்ளைக் குட்டையுங் கட்டி, யாருக்கோ சோறெடுத் துக்கொண்டு போனவள். பின்னவளோ இளம் பருவமுடையாள். தேகக்கட்டு முடையாள், வன்னியகுல மாது. இருப்பினும், தலை சீவாமலும் இரவிக்கை யணியாமலும் முரட்டுப் புடவை யணிந்தும் ஓடிவந்த வேர்வையுடனுங் காணப்பட்டாளாதலின் அத்தீண்டா வகுப்பைச்சேர்ந்த ஸ்திரீ அந்த வன்னிய மாதைக் கோபப் பார்வை யாக நோக்கிக் கடுமையான வார்த்தையால் "தூரப்போய் உட் காரு, கிட்டே வந்து உட்கார்ந்துட்டே" என்றாள்.

ஆனால் அந்த வன்னிய மாது ஓர் நாட்டுப்புற ஸ்திரீயாத லின் ஒன்றும் பதில் சொல்லாமல் வெட்கிப்போய்ச் சற்றுத் தூர மாய் உட்கார்ந்தாள். பிறகு இருவர்களுடைய வார்த்தையாலும் அவர்களின்ன ஜாதியென்பது தெரியலாயிற்று. கிழவி பிரம்பூர் ஸ்டேஷனிலிறங்கிப் போய்விட்டாள். வன்னிய மாது குறட்டூருக் குப் போய் விட்டாள். இது, எந்த ஜாதியாயிருப்பினும் சற்று மேலுக்குச் சுத்தமாயிருக்குங் கீழ்ச்சாதியும் மேலுக்குச் சுத்த மாய்த் தோன்றாத தனக்கு மேம்பட்ட ஓர் மேல் சாதியையும் தீண் டாத விஷயத்தினைக் காட்டுகின்றது.

இன்னொரு விஷயம்:—முதியவர்களோ ஆணேனும் பெண் ணேனும் தங்களுக்குள் மனஸ்தாபமோ சச்சரவோ நேரிட்டால் சாகும் பரியந்தமோ வெகு நாள் வரையிலோ ஒருவரை யொருவர் பாராமலும் வீதியிற் பார்க்க நேரிடினும், முகத்தைத் திருப்பிக் கொண்டுந் தீண்டாமலும் ஒர்புறம் ஒதுங்கிப் போய் விடுவதைக் காண்கின்றோம். சிறு பிள்ளைகளும் அவ்வாறே. இது உலக இயல்பு.

இங்கிலாந்தில் மாண்டேகு என்பார் இந்தியா மந்திரியாய் இருந்த காலத்து அவர் இந்தியாவின் சார்பாய்ப் பேசினதினால் அன்

ஞரைப் பிரதானியும் ஏனைய மந்திரிகளுஞ் சேர்ந்து வேலையை விட்டுத் தங்கள் குழுவினின்றும் பிரிந்துபோகச் செய்தமை அரசியல் வாதிகளுக்குத் தெரிந்ததொன்றே. மேலும் இங்கிலாந்திற் பல கட்சிகளுள. ஓர் கட்சிக்கும் மற்றோர் கட்சிக்கும் விரோதமேற்படின் ஒருவர் மற்றொருவரை வைதுங் குறைகூறியும் மந்திரித்துவத்தினின்றும் நீக்க வழி தேடுகின்றனர். இந்தியாவிலும் அதே பாடந் தான். சென்னையிற் பொப்பிலி மன்னரைச் சேர்ந்தோருக்கும் முதல் மந்திரியாயிருந்த முனிசாமி நாயுடுவுக்கும் நேர்ந்த மனக் கசப்பை அரசியலுலகம் நன்கறியுமே! மேலும் அவ்விங்கிலாந்து முதலான விடங்களிற் தொழிலாளர் முதலாயினோர் தாங்கள் வேலைசெய்யும் நேரம் கூலி முதலியவற்றைக் குறித்துப் பிணக்கு ஏற்படில் தூரத்தினின்றே செருப்பை அதிகாரிகளின் மேல் அடிக்கடி வீசி யெறிவதும் நீதிபதிகளின்மேல் குற்றவாளிகள் அவ்வாறெறிவதும் சகஜமாய்ப் போயிற்றே. இதுவுந் தீண்டாமையைக் காட்டவில்லையா!

ஹார்னிமென் என்பார் இந்தியாவிற்குச் சாதகமாய்ப் பேசுவதும் எழுதுவதுமா யிருந்ததால் ஆங்கிலேய அரசாங்கத்தினர் தங்களோடு அவர் சமானமாய் உட்கார்ந்து வாதிக்க மறுத்தது பெருந் தீண்டாமை யன்றோ.

இவ்விந்தியாவிலும் தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த ஓர் நீதிபதியேனும் தன் பக்கத்தில் விருட்டி வண்டிக்கார னொருவனைச் சமமா யமர்த்திக் கொள்வரோ? அன்றி ஓர் தோட்டிச்சியை யமர்த்திக் கொள்வரோ கூறுமின்!

ஓர் கூட்டம் நடக்குங் காலத்தும் கவர்னர் அக்கிராசனாதிபதியாய் அமர்வரேல் அவருக்குச் சமீபத்தில் இன்னின்ன அங்கத்தின்ரும் மந்திரிகளும் ஏனையோரும் இன்னின்ன விடத்தில் அவரவர்களுடைய அந்தஸ்திற்கேற்றவாறு அமர்வது கண்கூடே. இங்கிலாந்தினுஞ் சர்வகட்சி மகாநாடுகளிலும் அவ்வாறே மந்திரியின் வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் அந்தஸ்திற் கேற்றவாறு அமர்கின்றனர். இஃது ஏனைய தேசத்திற்கும் ஒக்கும். அதைவிட்டு ஓர் தோட்டியோ தோட்டிச்சியோ கவர்னர் பக்கத்தில் போயமர்வதென்றால் இயலுமா? இத்தகைய தீண்டாமையை ஏன் கவனிக்கக் கூடாது? சட்டசபைகளிலும் வட்டமேஜை மகாநாட்டிலும் ஏற்படும் விதிகளைக் கவனிப்பாராக.

மற்றுமோர் விஷயம், மடாதிபதிகளெல்லாம் எவ்வளவோ வைதீகமாய்ப் பூசை முதலியவற்றை முடித்துக்கொண்டு ஆசனத்

தமர்கின்றனர். அப்போது மற்றோர் பிராமணனேனும் அவரை யச்சமின்றித் தொட்டுக் கொள்வதுமில்லை, தீண்டித் தீண்டிப் பேசுவதுமில்லை. அவர் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரிக்கின்றார்கள். அவ்வாறிருக்க அவரைச் சேர்ந்த எந்தப் பிராமணனாவது அவராசனத்தில் அவரோடு உட்கார முடியுமோ? அன்றி அவரில்லா வேளையிலாவது அவ்வாசனத்திலமர்த்லொல்லுமோ? அன்றியும் மடாதிபதிகள் சிவிகை யூர்ந்து செல்கின்றனர். அச்சிவிகையி லவரோடு எப்பிராமணனேனும் உடனமர்ந்து செல்வனோ? பிராமணனே செல்லக் கூடாதென்றாற் சுடுகாடு காக்கும் வெட்டியான் அப்பல்லக்கில் அவருடன் அமர்ந்து செல்லலாமென்றால் அது எவ்வளவு அழகு? அது பெருங் குருத்துரோகமாயன்றோ முடியும்!

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் இந்துக்களை ஒரே ரயில் வண்டியிலோ, மின்சார வண்டியிலோ தம்மோடமர விடுவதில்லையென்றும், காந்தியையே இரு முறையோ மும்முறையோ சில வெள்ளையர்கள் சாதாரண வண்டியிற்கூட தமமோடு சமமாய் இருக்கவொட்டாது காலாலெற்றினரென்றும் அன்னாரே தமது ஜீவிய சரித்திரத்தில் வரைந்து வைத்துளாரே. ஐரோப்பியர் அத்தகையினரென்பது ஈண்டு நடக்கிற பிற விடயங்களிலிருந்து விகசிதமா யெடுத்துக் காட்டிப் பல விடயங்களையு மவர் மனதில் வைத்துக்கொண்டன்றோ சுயராஜ்யத்தினை விழைகின்றார். இந்தியாவிலும் ரெயில் வண்டிகளில் ஐரோப்பியருக்கென்று பிரத்தியேக வண்டிகள் ஏற்பட்டிருக்கிறதன்றோ?

இன்னும் ஆப்பிரிக்கா முதலானவிடங்களில் ஐரோப்பியர் வசிக்குந் தலத்திற்கு வெகு தூரத்தில் இந்துக்கள் வசிக்க நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றதன்றோ! இது நிற பேதத்தா லேற்பட்ட தீண்டாமையன்றோ? இத்தகைய பலவுள. விரிவஞ்சி விடுத்தாம். அவரவர்களே யோசித்தும் வாசித்தும் அறிந்து கொள்வாராக.

ஆகவே ஈண்டுச் சுட்டிக்காட்டப்பட்ட மன்பதைக்குச் சுபாவமான பல்வகைப்பட்ட தீண்டாமையை யடியோ டகற்றுவதெனின் மகமேருவை மட்டமாக்குவது போலன்றோ முடியும்!

எனவே தீண்டாமை யென்னும் பேயைத் துரத்தியடிக்க வேண்டுமென்பது விஷயத்தை யாய்ந்தோய்ந்து பாராத அறிவிலிகள் கூற்றேயாமென்க. மேலும் பேயானது ஆணையேனும் பெண்ணையேனும் மர முதலியவற்றையேனும் பற்றித் தீண்டிக் கொண்டேயிருக்கும். அப்பொழுதுதான் அதைப் பூசாரி யோட்டுவான். அப்பேய் ஒருவரையுந் தீண்டாம லோர்புற மொதுங்கிக் கிடக்குமாயின் யாரே அதைத் தடிகொண்டோட்ட முயலுவன்? ஆகவே தீண்டும் பேயைத்தான் ஓட்ட வேண்டுமேயன்றித் தீண்டா

திருந்தால் முயற்சி யெற்றிற்கோ ? அற்றன்று, "நீங்கள் முன்னே யெடுத்துக்காட்டிய பலவித தீண்டாமையைப்பற்றி யாங்கள் ஆலோசிக்காமற் போய் விட்டோம். ஆயினும் பிராமணர் முதலாயினோர் பறையர் முதலாயினாரைத் தீண்டாதிருத்தற் கூடாதென்றே யாங்கள் கூற முன் வந்துளோம்" என்பாராயின் அச்சங்கையினை யொழித்தற்கன்றே புற்றினின்றும் ஈசல் கிளம்பல் போன்றும், புதைபாணம் ஒன்றன் பின்னொன்றாய்க் கிளம்பல் போன்றும் பின்னாற் பிரகரணங்கள் பல எழுந்தனவென்க.

## ச. அரசியல் வாதிகள் இனிச் செய்யவேண்டிய கடமை

ஆகவே, அரசியல் வாதிகள் முன்னர் விளக்கமா யெடுத்துக் காட்டப்பட்ட மந்திரி அரசனைத் தொட்டுத் தொட்டுப் பேசாமை முதலியவற்றை ஆங்கிலேயருக் கெடுத்துக்காட்டி, உலக முழுவதுந் தீண்டாமையிருப்பதையு மெடுத்துக்காட்டி, இந்தியாவிலும் அவ்வாறே உயர்ஜாதி ஹிந்துக்களுக்குந் தீண்டாதாரெனப்படுவோருக்கும் பின் காட்டப்படுங் காரணத்தாலேற்பட்ட மத விஷயமான தீண்டாமை பண்டைய காலந்தொட்டே யேற்பட்டுளதென்றும், அது பணச்செருக்கினாலும் ஏனைய இறுமாப்பினாலும் ஏற்பட்டதன்றென்றும் கடவுளாஞ்ஞாப்பிரகார மேற்பட்ட நீதியோடு கூடிய தீண்டாமையேயென்றும் ஆதலின் அரசியல் விஷயத்தில் மத விஷயத்தினை யிடையே இழுத்துக்கொண்டு வந்து போட்டுக் கொண்டு நொண்டிச் சாக்குக் கூறிக்கொண்டிருப்ப தடாதென்றும், பலவித செருக்குப்பற்றி யுண்டாகும் வீண் தீண்டாமை யுலகின் கண் ணொழிந்தால் மத சம்பந்தமா யேற்பட்ட அத்தியாவசியக மாகிய இத்தீண்டாமையும் இந்தியாவில் தானாகவே வொழிந்து விடுமேன்றும், அவைகள் ஒழியாவிடின் இதுவு மொழியாதென் றும் விகசிதமாய்க் காட்டிவிட வேண்டும். அத்தகைய தீண்டாமை இருப்பதால்தான் பரதகண்டம் உயர்ந்ததென்றும் இவ்விஷயம் ஆய்ந்தோய்ந்து பாராத பகற் குருடுகளுக்குத் தெற்றெனப் புலப்படவில்லையென்றும் அறியக் கிடக்கின்றது. மத விரோதமாகிய சுயராஜ்யம் வேண்டியதேயில்லை. அது வாராவிடினுஞ் செத்துப் போவா ரொருவருமில்லை. "தீண்டாமை கூடாது, தீண்டாதாரையும் ஆலயத்துள் அனுப்ப வேண்டும், தோட்டிகளுக்குப் பதிலாகப் பிராமணர் முதலாயினோர் மலம் வாரல் வேண்டும், 'சக்கிலிகளுக்குப் பதிலாகத் தோல் பதனிடல் வேண்டும். இன்னும் இன்னோரன்ன பிற இழி தொழில்களையுஞ் செய்தல் வேண்டும்" என்று இவ்வாறு வேதாகம விரோத விஷயமாகிய அநு

சிதங்களை வற்புறுத்துஞ் சுயராஜ்யம் வந்து பெரிய அவமானத்திற் குட்படுவதைவிட இப்போதிருக்கும் அவமானம் பெரிதன்று; ஆதலின் அத்தகைய சுயராஜ்யத்தால் பெருங் கலகமே விளையுமென்பதை இப்போதே பலவிடங்களில் நடக்கும் விஷயமே சூசிப்பிக்கின்றது. ஆதலின் இங்கிலாந்தில் சர்வகட்சி மகாநாட்டிற் பல தகராறுகளேற்படுவதும் ஈசன் செயலேயாமென்க. தான் சாக எவனேனும் மருந்துண்பானா? ஆனால் மத விஷயத்திற்குச் சற்றேனும் விரோத முண்டுபண்ணாத சுயராஜ்யத்தினை யளித்தால் அது அனுமதிக்கத் தக்கதே. அப்பொழுதுங்கூட ஒன்றுங் கிடைக்காத இப்போதே இவ்வளவு கிளர்ச்சி செய்யும் அரசியல் வாதிகள் பலவித அடாத செய்கைகள் செய்யப் பின்னடையார்களென்பதை அரசாங்கத்தார் யூகிக்க வேண்டும்.

## (ரு) சண்டாளர் முதலாயினோர் ஆலயப் பிரவேசஞ் செய்யக்கூடாது என்பதற்குச் சிவாகம மேற்கோள்.

இதுகாறும் பிரத்தியட்சப்பிரமாணம் என்னுங்காட்சி யளவை, யுக்தி அல்லது அநுமானப்பிரமாணமென்னுங் கருதலளவை ஆகிய இரண்டிற்கும் பொருத்தமுறப் பல விஷயங்களை யெடுத்துக் காட்டினோம். ஆயினும் பண்டிதோத்தமர்கள் ஆகமப் பிரமாணமே வலியுடைத்தென்ப ராதலின் ஆகமப் பிரமாணமாகிய உரையளவையுங் காட்டி விடுகின்றோம். ஏனெனின் சிவாகமம் சிவபெருமானுற்றிருவாய் மலர்ந்தருளப்பட்டதென்பதை எல்லாப் பிராமாணிகர்களும் யோக்கியதையுடன் ஒப்புக்கொள்வர். சிவாகமமின்றிச் சிவமுமில்லை. சிவாலயமுமில்லை. ஆதலின் ஆலய விஷயத்தில் ஆகமமே பிரமாணம்.

உஅ-கோடி கிரந்தங்களாய் விரிந்துள்ள சிவாகம மகோததியில் ஒருவன் வீழ்ந்து கஷ்டப்பட்டு ஆராய்ந்தால் அடியிற் கண்ட இரத்தினங்களாகிய சுலோகங்கள் நன்கு பெறப்படும், (உஅ) சிவாகமங்களுட் பிரதமமாகிய காமிகாகம உத்தரபாகப் பிராயச் சித்தவிதிப்படலத்துள் சண்டாளப் பிரவேச பிராயச் சித்தம் வருமாறு:-

**கபிகுக்குடகாகைச்ச கபோதை: ஸூகரை: ச்வபி: ।**
**உலூக க்ருத்ரகாகைச்ச ருதுஸ்த்ரீ சோர கர்த்தபை: ॥ ௩௩**

குரங்கு கோழி முதலியன, புறா, பன்றி, நாய், கோட்டான், கழுகு, காக்கை, ருது ஸ்திரீ, திருடன், கழுதை.

**பதிதை: ஸூதகைச்சாபி பாஷண்டகைஸ்ததா । மத்**
**யபை: பாபரோகார்த்தை: ப்ராயச்சித்த விஹீனகை:**

பதிதர்கள், மரணு சௌசமுள்ளவர்கள், பாதகர்கள், பிறவித் தீட்டுள்ளவர்கள், மறைவாகப் பிறந்தவர்கள், கெட்ட ரோகிகள், கர்மங்களை விட்டவர்கள், ப்ரதிலோமக் கல்ப்பினுல் பிறந்தவர்கள்.

ம௱வ௨ரா௯ெ ஜ்ராஹஸ௰ய௱ெக்ைதஃ. தீக்ஷாஹீெநெ௯௨ஜாதிஹிஃ ।

அத௱ஷ்ராெஶௌரயா்ைநெ்ருமுவக்ஷிஹிஶுஸவீஸரௌவெஃ ॥ ௩௫

குரு முதலியவர்களுக்குத் துரோகம் செய்தவர்கள், தீக்ஷை யற்ற பிராமணர்முதலிய மூன்று வர்ணத்தார்கள், மற்ற நாற்கால் ஜெந்துக்கள், பக்ஷிகள் பாம்புகள்.

ஹீநஜாதிஹிரைெந்ருவ௨ாநரைெதீ௨க்ஷாஞரஷ்ஷிைதஃ ।

ஶிஷ்ஹிஃ வாணஅணூாஞுரஜகாெந்ூரயாவீவா ॥ ௩௬

மற்றத் தாழ்ந்த ஜாதிகள், வேறு தீக்ஷைபெற்ற மனிதர்கள், சிற்பிகள், பாணர்கள், சண்டாளர்கள், வண்ணுன் முதலியவர்கள்.

ஸூரஷெவீெம௰ஶிஂைமவாபெரரா௨ளமஹ௨ிெமஹகெ ।

வூஷிஷெவாயவஶிவெ௨த௱ ஜணவெவுதிஶாஹூயெ ॥ ௩௭

இவர்களால் பீடமாவது இலிங்கமாவது, விக்கிரகமாவது தொடப் பட்டாலும், கர்ப்பகிருகம் அல்லது பிரதிமா மண்டபம் நுழை யப்பட்டாலும், (இதுவரையிற் சிவலிங்கம் அல்லது மற்ற விக்கிர கங்கள் தொடப்பட்டாலும் கர்ப்பக்கிருகம். பிரதிமா மண்டபம் நுழைபப்பட்டாலும் என்று கூறப்பட்டது.)

வரிவாரரயெவாஞ௨௨ணவெவா௯தீயகெ ।

மஶஜெஃ வாவரொமாெதெ௨ஃ வூாைெதூவ௨ாவுதிரொஜ-

ஜெஃ॥ ம௱வ௨ரா௯ெ ஜ்ராஹஸ௰ய௱ைகெஃதீக்ஷாஹீெநெஃ௯ஜாதிஹிஃ

அல்லது மறைவாகப் பிறந்தவர்கள், கெட்ட ரோகிகள், கர்ம ப்ரஷ்டர்கள், ப்ரதிலோமக் கலப்பினுற் பிறந்தவர்கள், குரு முத லானவர்களுக்குத் துரோகஞ் செய்தவர்கள், தீக்ஷையற்ற பிரா மணர்முதலிய மூன்று வர்ணத்தார்கள் இவர்கள் பரிவார தேவதா லயத்திலாவது உள் மண்டபத்திலாவது இரண்டாவது மண்டபத் திலாவது நுழைந்தால் (பிராயச்சித்தம் செய்யவேண்டியது.)

இதுவரையிற் பொதுவிதி திருவாய் மலர்ந்தருளினுர். இனிச் சிறப்பு விதி கூறுகின்றுர்.

அணூாஞுவாணகாெந்ூஶெஹ்ராஞிக௨௨ாயிகஂநயெக ।    ௪௦௪½

சண்டாளன் பாணகன் முதலானேர் நுழைந்தால் அதிகமாகச் சாந்தி செய்யவேண்டியது.

[illegible]

[illegible] ௪௰௫½

குரங்கு கோழி முதலியவைகள் கர்ப்பகிருஹத்தில் நுழைந்தால் ஸம்புரோக்ஷணமில்லாமல் திருமஞ்சனமும் சாந்தி ஹோமமுஞ் செய்ய வேண்டியது.

[illegible]

[illegible]

இருது ஸ்திரீ பாதகம் செய்தவர்கள் இவர்கள் கர்ப்ப கிருஹத்தில் நுழைந்தால் முன் சொன்னபடி ஸம்புரோக்ஷணம் மாத்திரஞ் செய்யவேண்டியது.

[illegible]

[illegible] ௪௰௭½

சண்டாளன் முதலானவர்கள் கர்ப்பகிருஹத்தில் நுழைந்தால் சாந்தி ஹோமத்துடன் ஸம்புரோக்ஷணமுஞ் செய்யவேண்டியது. இந்த மாதிரி முறையே பிராயச்சித்தம் மூவகைப்பட்டிருக்கும்.

[illegible]

[illegible]

[illegible] ௪௰௬

முற்சொன்ன மூவகைப்பட்டவர்கள் அர்த்த மண்டபத்திலாவது முதல் மண்டபத்திலாவது இரண்டாவது மண்டபத்திலாவது நுழைந்தால் கிரமமாக சாந்தி ஹோமத்தையுந் திக்குஹோமத்தையும் ஸம்புரோக்ஷணத்தையுஞ் செய்ய வேண்டியது.

[illegible]

[illegible] ௪௰௬½

ருது ஸ்திரீகள் தொட்டால் அல்லது உள்ளே நுழைந்தால், சண்டாளர்கள் இக்காரியங்களைச் செய்தாலென்ன ப்ராயச்சித்தஞ் சொல்லப்பட்டதோ அதையே செய்யவேண்டியது.

[illegible]

[illegible]

முன் சொன்ன மூவகைப்பட்டவர்களும் பிரதிமா மண்டபத்

தில் நுழைந்தால் கிரமமாகச் சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், திக்கு ஹோமம் இவைகளைச் செய்யவேண்டியது.

𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌹𑍀𑌨𑍈𑌃 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌂𑌸𑍍𑌤𑍁 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌨𑌰𑌾 𑌯𑌦𑌿 ।

𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌲𑌯𑌾𑌵𑍇𑌶𑍇 𑌚𑍈𑌤𑌦𑍇𑌵 𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௪௧௧½

பிராமணர்களையும் மற்ற தீக்ஷை பெற்றவர்களையுந் தவிர மற்றவர்கள் தீக்ஷையின்றிப் பரிவார தேவதைகளில் ஆலயத்திற்குள் நுழைந்தாலும் இதே பிராயச்சித்தஞ் செய்யவேண்டியது.

𑌕𑌪𑍋𑌤𑌕𑌾𑌕𑌸𑌰𑍍𑌪𑌾𑌦𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑍇 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌦𑍋𑌷𑌦𑌾𑌃 ॥ ௪௧௨

இந்தப் பரிவார தேவதைகளின் ஆலயத்திற்குள் புரு, காக்கை, பாம்பு முதலியவைகள் நுழைந்தாலுந் தோஷங் கிடையாது.

𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌰𑌜𑌕𑌾𑌦𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍇𑌷𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑍇 ।

𑌕𑍃𑌤𑌂 𑌚𑍇𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌹𑍋𑌮𑍋 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌕𑍇 ॥

சண்டாளன் முதலானவர்கள் உள் மண்டலத்திற்குள் நுழைந்தால் மூர்த்தி ஹோமமும் இரண்டாவது மண்டலத்தில் நுழைந்தால் சாந்தி ஹோமமுஞ் செய்யவேண்டும்.

𑌗𑍋𑌮𑌯𑌾𑌲𑍇𑌪𑌨𑌾𑌦𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁 ।

𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌲𑌯𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌮𑌹𑌾𑌨𑌸𑍇 ॥ ௪௧௪

எல்லாப்பிராயச்சித்தங்களிலும் பசுவின் சாணியினால் மெழுகுதல் முதலானவைகள் பொதுவானவை. பரிவார தேவதையின் ஆலயத்திற்குச் சொன்ன பிராயச்சித்தமே சமயலறைக்கும் வைத்துக்கொள்ள வேண்டியது.

## (௬) இனி விஷ்ணுவும் பாஞ்சராத்திராகமத்திற் கீழ் வருமாறுரைத்தல் காண்க.

### பாஞ்சராத்திரம் ஜயாக்ய ஸம்ஹிதை. ௨௮௪-ம் பக்கம்.

𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑌮𑍍 ।

𑌸𑌂𑌤𑍍𑌯𑌜𑍇𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑌯𑌾𑌮𑍁𑌸𑌰𑍍𑌵𑌾𑌮𑍁𑌹𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌾𑌰𑌿𑌣𑌾 ।

𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍𑌰𑌸𑍍𑌥𑌃 𑌕𑌵𑌚𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 ।

𑌶𑌤𑌾𑌨𑍍𑌯𑌷𑍍𑌟𑌾𑌷𑍍𑌟𑌶𑌤𑍇𑌨 𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑍍𑌯𑌤𑌿 ॥

(இ - ள்) ஹே ரிஷியே, சண்டாளன் முதலியவர்களுள் எவ

ஞூவது கோயிலில் நுழைந்தால் அங்குள்ள மட் பாண்டங்களை யெல்லாம் எறிந்துவிட்டு மற்றப் பாத்திரங்களை அஸ்திர மந்திரத் தாற் புரோக்ஷித்து ஸ்நானஞ் செய்து அங்கே நின்றுகொண்டு கபில மந்திரத்தை ஆயிரத்திருநூறு முறை ஜெபித்துக் கோயில் முழு வதுஞ் சுத்தி செய்ய வேண்டியது.

## பாஞ்சராத்திரம். ஈச்வர ஸம்ஹிதை.

ஶூரளா அவஹீஉஷுந-ொெஜெஃ உஹாவாதகிஹிந-ூஜெரஃ ।
அணாஜெரஃ ஸஂவிகொடிகூாஜெஷ்ஜெஹவ-ூாவ-ஸூஷாஹிஹிஃ ॥
தெராஜு-உணவாஹூஷஃ வூஶாவாரணெவிவா ।
வூவெஶெஷாஉஸஂஶ-ஜிஂவூாமக கூாஹாஉ-நீஸூராஃ ॥ கசக

முனீச்வரர்களே! தீட்டுள்ளவர்களாவது, மஹா பாதகங் களைச் செய்பவர்களாவது, சண்டாளர்களாவது, பிரசவித்த ஸ்திரீ களாவது, மாதவிடாய் பெற்ற ஸ்திரீகளாவது, மிலேச்சர்களாவது, புல்கஸர்களாவது, முதல் மண்டபத்திற்குள்ளேனும் முதல் ஆவ ரணத்திலேனும் நுழைந்தால் ஆலயத்தை முற்கூறியபடி சுத்தஞ் செய்து,

ஶயஜொதஉஉாமெ-ூணஹ்ராவயெக வ-ர-ஷொதஉஂ । கசுஉ
விதீயாவூதிஉாரஹ்ரயூாவாரணவஸிஉஂ ।
தெராஷஃ ஸஂவூவிஷெத-கூஹாருயவிஶொயநஂ ।
ஶயஉாயஉஉாமெ-ூண தெவஂஸஂஹ்ராவயெகஜீஜாஃ ॥ கசுந

அதமோத்தமப்படி முற்கூறியவாறு புருஷோத்தமனுக்கு அபி ஷேகஞ் செய்ய வேண்டியது. முற்கூறப்பட்டவர்கள் இரண்டாவது ஆவரண முதல், வீதி ஆவரணம்வரையிலுள்ள இடங்களில் நுழைந் தால் ஆலயத்தைச் சுத்திசெய்து அதமாதமப்படி பகவானுக்குத் திருமஞ்சனஞ் செய்விக்க வேண்டியது.

ஸவ-ூதூஶாஷிஹொஉஂஅக-ய-ூாக ஜூாஹணஹொஜநஂ। கசுந½

முற்கூறிய சந்தர்ப்பங்களிற் சாந்திஹோமஞ் செய்து பிரா மணர்கட்குப் போஜனஞ் செய்விக்க வேண்டியது.

அணாஜெரஃ ஶவதெவ-ூாவிவூஉாஉாக விஷ-உஂஜிரெ ।
நிராஷரஂ கூதெவாஸெஉாஸஜெகஂஉ-நீஶாராஃ ॥ கசுச½
உூகவா தாணிவஷிதூஜூஸஂஉாஜூ-ூஹமவகமூஹஂ ।
மொஉயெநொவஷி வூாயவய-ூஜிகரணஂஅரெக ॥ கசுரு½

ஹே ருஷீஸ்வரர்களே சண்டாளர்களாவது சக்கிலிகளாவது தெரியாமல் விஷ்ணுவாலயத்தில் ஒரு மாதம் வரையில் வசித்து விட்டால் மட் பாத்திரங்களை யெறிந்துவிட்டு ஆலயத்தைச் சுத்தி செய்து பசுவின் சாணத்தால் மெழுகிப் பிறகு முழுவதும் அக்கினியினுற் சுத்தி செய்யவேண்டியது.

வ¬ணஷ்ராஹம்வாஅயித்வாயவெ ராக்ஷயெகவம்அமவ்யகெ: ।

ஹொமணம்வாஸயெக்தஸ்ஸவஷொஷவ்ஸாஙயெ ॥ கசசு ½

வாஅயித்வாஉஹாஸாஞிம்ஸ்ராஹ்ஹணெவெஉவாரரமெ: ।

ஹொஜயித்வாவ்ஜாம்ஸ் த்ததெஹ்யாஉஊஷ்ாத்த¬உக்ஷிணாம் ॥ ககள ½

பிறகு புண்யாஹவாசனஞ் செய்வித்துப் பஞ்ச கௌவியத்தினுல் ஆலய முழுதும் புரோக்ஷித்துப் பிறகு தோஷங்களைப் போக்குவதற்காகப் பசு மந்தையை ஆலயத்தில் இருக்கும்படி செய்ய வேண்டியது. வேதங்களை நன்கு கற்றுணர்ந்த பிராமணர்களால் மஹா சாந்தி மந்திரத்தை ஜெபிக்கச் செய்து, பிராமணர்கட்குப் போஜனஞ் செய்வித்துத் தக்ஷிணை கொடுக்க வேண்டியது.

ஊவம்ஊஸம்த¬ஊஸாய ஃம்ஸத்வம்அத்ஷ்ஹம்த¬வா । கசுஅ

க்ருத்வாஸ¬ஷிம்ஊம்ஷிரஸ்ஷ்பிம்பாஙாம்மொவஸ்ரமெதை: வ¬ரா ।

க்ருத்வாஹிஷெஅஙம்வ்ராமக ஸம்வெராக்ஷணஉயாஅரெக ॥ ககுகு

இம்மாதிரி ஒரு மாதமாவது (கரு) தினங்களாவது, ஏழு, ஐந்து, அல்லது மூன்று தினங்களாவது செய்ய வேண்டியது. பிறகு மறுபடியும் ஆலயத்தைச் சுத்திசெய்து பிம்பத்திற்குப் பசு நெய்யால் அபிஷேகஞ் செய்வித்துக் கிரமப்படி சம்புரோக்ஷணஞ் செய்ய வேண்டியது.

அஹ்ராஷஸ¬திகொஉக்ஷ்ாஷ்ரஷாஅாஸவஉ¬ஷிதாக ।

க¬வாக ஸஉ¬ஷ்ரமெதஷொயெ: க்ரதெஉவஸ்வ¬ஜஙெ ।

உத்தொத்தஉஊமெஃணஸ்வயெக வ¬ரர¬ஷொ த்தம் ॥

சண்டாளன், பிரஸவித்த ஸ்திரீ, ருதுஸ்திரீ இவர்கள் தொட்ட அல்லது பிணம் விழுந்து கெடுக்கப்பட்ட கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஜலத்தினுல் ஸ்வாமிக்குப் பூஜை செய்யப்பட்டால் உத்தமோத்தமமாக ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்துவைக்க வேண்டியது.

## (எ) காந்தி முதலாயினுர் சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டொழுக வேண்டுமெனல்.

ஆகவே இன்னுமா பிரமாணம் வேண்டும்! சிவாகமம் பாஞ்

சராத்திராகமம் ஆகிய இரண்டினின்றும் சாதுக்கள் சந்தோஷிக்குமாறு நன்கு பிரகாசப்படுத்தித் தீண்டாதார் ஆலயப் பிரவேசஞ் செய்யக் கூடாதென்று வஜ்ஜிர ஸ்தம்பம்போல் நன்கு நாட்டி விட்டோமாதலின் வைரிகள் வாக்கு இனி எவ்வாற்றானும் ஈடேறாதென்க. "இதுகாறும் அபௌருஷேயமாகிய ஆகமப் பிரமாணம் யாரும் எடுத்துக் காட்டவில்லையேயென் றேங்கிக் கிடந்தார்க்கீது மூவாமருந்தாயும் பெருவிருந்தாயும் முடியுமென்க.சகலாகம பண்டிதர்போல், சர்வாகமங்களுங் கரைகண்டவர்போல் ஆகமத்திற் சாற்றப்படவேயில்லையென்று கூறின குமதி வாசகம் குணப்படாதொழிந்தமை கண்டு அவ்வாறு கூறியோர் நாணமுறுவாராக. உண்மையாகக்கடவுளுக்குப் பயந்து அவரது கிருபைக்குப் பாத்திரராகவேண்டுமென்கிற அவா வுடையராயின் அவரது திவ்யாஞ்ஞைக்குக் கட்டுப் பட வேண்டிய தாவசியகமன்றோ? சிவாலய விதிக்குக் கட்டுப் படாமற் சிவாலயம் புகுதலாற் போந்த பயன் யாதோ? பயன் நரகப் பிராப்தியேயாமென்பது யாமெடுத்துக் கூறவும் வேண்டுமோ? குளிக்கப் போய்ச் சேறு பூசிக்கொள்ளும் புத்திமானெவனோ? இது, "அரசனைக் கண்டால் கும்பிடுவேன். அவனதரண்மனையில் நுழையவும் பார்ப்பேன், ஆனால் அவனது சட்ட திட்டங்கட்குப் பயப்படேன்" என்று ஒருவன் அஞ்சாது வீண் தைரியங் கொண்டு கூறுவதுபோலன்றோ முடிகிறது! அவ்வாறு கூறுவோனுக்குச் சிறைத் தண்டனை முதலாயின கிடைத்தற்போல சர்வலோகங்கட்கும் நாயகனாகிய நடராஜப் பெருமான் வாக்கை மீறி நடந்தாற் சிவகோபம், சிவாபராதங்கட்கு எத்தகைய வெகுமானங் கிடைக்குமென்று நடுக்குற்று அடாத காரியஞ் செய்ய அஞ்சுவாராக. சக்கிரவர்த்தியின் சட்டத்தை மீறி நடந்ததாலன்றோ காந்தியும் அவருக்குத் துணைபோய சுமார் 24000 ஆண்களும் பெண்களும் சிறைபுக்குக் காசம், க்ஷயம், சந்நிவாதம், கப சுரம், கால் வயிறு போஜனம், கால் வீக்கம், உண்ணாவிரதம், உதை, குத்து, பிரம்படி, தடியடி, சாயத் தண்ணீர் வீச்சு, மூர்ச்சை, மரணம், சிறை யதிகாரிகளுடன் சச்சரவு முதலாயினவற்றிற்காளாகிக் கடு நரக வேதனையைப் பிரத்தியட்சமாயனுபவிக்கின்றனரென்றால் கடவுளாஞ்ஞையை மீறினால் எவ்வளவு தண்டனை கிடைக்குமெனக் காந்தியும் வேதாகம விதிகட்கு இனி யேனுங் கட்டுப் பட்டொழுகுவாரா? கடு நரக வேதனைக்குள்ளாவரா? "சத்தியத்தை யாங் கடைப்பிடிப்போம்" எனப் பன்முறையும் பறைபறையுமிவர், பஞ்சமா பாதகத்திற்கும் எத்தனையோ மடங்கு கொடியதாகிய அதி பாதகமெனுஞ் சிவாபராத மாகிய சிவாகம தூஷணையானது ஒருவனைப் பல்லூழி காலம் மகா ரௌரவம், கும்பீபாகம் முதலிய நரகப் படுகுழியிற் றள்ளிமேலெழ விடாமற் படாத பாடுபடுத்தும் என்னுஞ் சத்தியத்தைக் கடைப்

பிடிப்பரா? நரகப் படுகுழியில் வீழ்ந் தவஸ்தைப்படுங் காலத்து வீண் சுயராஜ்யத்திற்கு நரி ஊளையிடும் அவரினத்தைச் சேர்ந்தவர்களெவரேனும் அவரைக் குழியினின்றும் எடுத்துவிடல் முடியுமா? அவர்களுந் தானே அவ்வாறவஸ்தை யுறப் போகின்றனர்! தங்களைத் தாங்களே மீட்டுக்கொள்ள முடியாதவர்கள் தங்கள் தலைவரை எவ்வாறு மீட்கப்போகின்றார்கள்? எம தூதர்களை நீக்க இவரோ வல்லுநர்? ஆகவே அஞ்சுமின் அஞ்சுமின் உய்மின் உய்மின். ஒருவேளை, காந்தி ஐரோப்பிய விடுதியில் ஏ வகுப்பில் வீற்றிருக்கின்றனராதலின், பீ. வகுப்பு சீ வகுப்புக் கைதிகளின் கஷ்டம் பத்திரிகையில் வாசிக்கின்றனரே யன்றி நேராயனுபவித்திலர் போலும். அரசியல் கைதிகள் இதர கைதிகளைவிடக் கஷ்டமனுபவிக்க அவர்களது எண்ணிறந்த பெண்டு பிள்ளைகளும் ஓலமிட் டழச்செய்வது ஹிம்சையன்றி அஹிம்சையோ? மறியல்காரர்கள் முற் கூறியவாறு உதை குத்து முதலியவற்றிற்குட்படச் செய்வது ஹிம்சையோ அஹிம்சையோ? செய்கை வகையானன்றிக் கருத்து வகையால் அது அஹிம்சையே யெனக் கூற முந்துவரேல் அப்போது கண்ணன் வாக்காகிய பகவத்கீதையில் யுத்தஞ் செய்து வீர சொர்க்கமடைவதும் அஹிம்சையென்றன்றே கொள்ளல் வேண்டும். அந்த இரகசியத்தினை நல்லாசிரியர் பாலாராயாது மனம்போனவாறே அபசித்தாந்தப்படுத்தினால் அவர் கண்ணன் வாக்குக்கே கட்டுப்பட்டவரன்றென்றே நன்கு தொனிக்கிறது. மேலுஞ் சாத்திரத்திற்குக்கட்டுப்பட்ட வைதீகர்களை வம்புக்கிழுத்து அவர்கள் இரவும் பகலும் உறக்கங் கொள்ளாதிருக்க அவர்கள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் மஹா ஹிம்சையிலிறங்கி விட்டவர் மகாத்மாவாவரோ? பெருங் கலகக்காரரே கண்டீரிவர்! அவ்வாறே 29-11-32-ல் வெளியாகிய சுதேசமித்திரனில் காந்தி, "தீண்டாமையை ஹிந்து மதத்தின்மேல் ஏற்றுவதால் அது குருகிய திருஷ்டியுடையதாகி விடுமாகையால் நான் கலகஞ் செய்கிறேன், என்னுடைய உயிரைக் கொடுத்து இந்த மாசை அகற்றக் கூடுமானால் என்னுடைய உயிர் அதித விலையுள்ளதென்று நான் மதிக்க மாட்டேன்", எனக் கூறியதாக வெளியாயிருக்கிறது. மொழிபெயர்ப்புத் தப்பாயிருக்குமோவென்று சந்தேகித்து அதே தேதியில் வெளியாகிய (Hindu) "இந்து" பத்திரிகையிலு மாராய்ந்தோம். அதிலும் அவ்வாறே, "It is because the super-imposition of untouchablity would mak eHinduism a narrow creed, that I have rebelled against it. I would count my life to be a cheap price to pay for the removal of that blot," என்றே காணப்பட்டது. இவ்விரண்டு இங்கிலீஷ் வாக்கியங்கட்கும் முன்னர்க் காட்டிய மொழிபெயர்ப்பு முற்றும் பொருத்த

முடைத்தென அவ்விரு பாஷா வல்லுநரும் அரசாங்கத்தாரும் அறிந்து கொள்வாராக. ஆகவே இவர் சாதாரண உலக சட்டத்திற்குங் கீழ்ப்படியாமற் சத்தியாக்கிரகஞ் செய்கிறேன் என்று கூறுவதே போன்று அப்பழக்க வாசனையாற் சர்வலோக நாயகனது சட்டமாகிய சாஸ்திரங்கட்குங் கட்டுப்படாமற் பெரிய அசத்தியாக்கிரகியாய்ப் பெருங் கலகஞ்செய்து, தான்கெடுவதுமன்றி ஏனையோரையுங் கெடுத்து "வாருங்கள் நாமெல்லோருங் கைகோத்துக் கொண்டு ஆனந்தமாய் நரகலோக யாத்திரை செய்து நரகலோகத்திற் சுயராஜ்யத்தை யனுபவிக்கலாம்", என்று கூறத் துணிவோராய் முடிதல் காண்க. "அவ்வாறு நான் கூறவில்லையே"யென்றால் அப்போது கலகஞ் செய்யாமற் சாஸ்திரங்கட்குக் கட்டுப்பட்டுய்வாராக. மேலும், காந்தி தாம் பண்டிதரல்லவெனப் பன்முறையும் ஒத்துக்கொள்ளுகிறாரேனும் அவ்விஷயம் 16-11-1932 புதன் கிழமை வெளிப்போந்த சுதேசமித்திரனிற் காட்டப்பட்டிருத்தலின், அதுவும் ஆங்கிலத்திற்கேற்ற மொழிபெயர்ப்பாதலின், சாஸ்திரங்கட்கும் இவர்க்கும் வெகு தூரமென்பது நன்கு அறியக்கிடக்கின்றது. சாஸ்திர பண்டிதரல்லாதவர் சாஸ்திர சம்மதமாய தீண்டாமையும் ஆலயப்பிரவேச விஷயத்தினையும், இடையே இழுத்து வந்து போட்டுக்கொண்டு வீண் கலகஞ் செய்வானேன்?

## (அ) காந்தியைப் பின்னுங் கண்டித்தல்

முற்கூறிய ஆகம விஷயம் முதலியவற்றைக் கற்றறியாமலே, கற்றோரை யடுத்துக் கேட்டறியாமலே காந்தி முதலாயினோர், தங்கள் வயிற்றுப் பிழைப்பிற்கே சுமார் பதினைந்து பதினாறாண்டு ஆங்கிலங் கற்பதிலேயே காலத்தை வீணாகக் கழித்து ஏதோ வாரிக் கொள்ளலாமென்று இங்கிலாந் தேகி ஆங்கிலேயரையடுத்துச் சட்ட விஷய முதலாயினவற்றைக் கற்றுத் தென்னாப்பிரிக்கா சென்று ஆங்கிலேயரது அடித்தல், உதைத்தல் முதலிய உபத்திரவத்தைப் பொறுக்கலாற்றாது இந்துக்களுக்காகப் பரிந்து பேசி இவ்வாறான விஷயங்களிலும் அரசியல் விஷயங்களிலுமே காலத்தைக் கடத்திப் பலவகைப் பத்திரிகைகளைப் படிப்பதிலேயே பகல் இரவு முழுதும் போக்கி அளவற்ற சாஸ்திர சமுத்திரத்தைப் பார்க்கவும் புண்ணியமற்றதோ டமையாமல், சாஸ்திரங்களைக் கற்றறியாக் குறையாலேயே, "கோயில்கள் விபசார விடுதிகள்" என்றும், அதற்கு நேர்விரோதமாக "ஹிந்து பால்யர்கள் விதவா விவாகஞ் செய்யலாம்," என முன்பின் முரண்பட உரைத்தும், "உருதிமதி விவாகமே சீரியது கன்னிகா விவாகம் கல்வியைக் கெடுக்குங் கசடுள்ளது" என்னுஞ் சாரதா சட்டத்திற் கனுமதியளித்தும், "தீண்டாதார் விடப்படா ஆலயத்திற் கடவுளிரார்" எனக் கழன்

றும், விசுவாமித்திரர் திரிசங்குவைத் தூக்கி மேலெறிந்து தேவர்களுக்கும் வசிஷ்டருக்கும் விரோதமாகத் திரிசங்கு சொர்க்கம் ஏற்படுத்தியதுபோல், அத்தீண்டாதார்பொருட்டு உண்ணாவிரதமிருந்து நேராக அவர்களைச் சொர்க்கம் புகுவிப்பவர்போல் "ஆலயத்துள் நுழையுங்கள்" என உஞற்றி அவர்களை நரகப்படுகுழியிற் றள்ளியும், சாஸ்திர வல்லுநர் ஏதேது சமாதானங்களை எத்தனையோ முறை இடித்திடித்துரைத்தும் செவிடன் காதிற் சங்கூதியதுபோற் சனங்களொன்று சொன்னாற்செவிடன் மற்றொன்றுசொல்லல்போல் செவிடு செவிடு என்றாற் குருடு குருடு என்னல்போல் பத்திரிகைகளில் ஏதாவதொன்றைப் பதில் கூறுதிருந்தாற் குறைவென்றெண்ணிப் பொருத்தமற்ற விஷயங்களை ௧,௨,௩,௪,௫,௬,௭,௮,௯ என்றிலக்கமிட்டு வீணறிக்கைகளைவெளியிட்டுவீண்பிடிவாதஞ்செய்தும், "பகவத்கீதை யொன்றே அங்கீகரிப்போம், வேறு சாஸ்திரம் வேண்டியதில்லை, அதெல்லாம் பொருத்தமற்ற புத்தகம்" என்று அர்த்தவாதம், விதிவாதம், துதிவாதம், வர்ணனை, செம்பொருள், குறிப்புப் பொருள், முக்கியப் பொருள், கவுணப்பொருள், இலட்சணை, நவரசாலங்கார முதலிய காவிய லட்சணமாகியவற்றை ஈதென்றுணராமலே அவரது அ-ம் அறிக்கையிற் சாஸ்திரம் பொருத்தமற்றதெனச் சாஸ்திரார்த்த முரைக்கும் பண்டிதராய் நடித்தும் பகவத்கீதைக்கே தாமே ஏதேதோ தப்பபிப்பிராயங் கொண்டு கண்ணபிரான் கூற்றுக்கே கட்டுப்படாமலும், நான்கு ஜாதிக்குமே யில்லையென்று கூறி அக்கூற்றைக் கண்டித்த பல புலவர் போதனைக்குச் சற்றுஞ் செவிசாய்க்காமலும், பரசிவத்தின் திருவுள்ளக்கிடை இன்னதென் றறியாமலே பந்துக்களை எவ்வாறு மாய்ப்பது என்று வீண் அஹிம்சா தருமங் கொண்ட பார்த்தனது மயக்கம் போக்கும்பொருட்டு பகவத்கீதையைக் கண்ணன் உபதேசித்து "ஒவ்வொருவரும் அவனவன் கர்மாவையே செய்தல் வேண்டும், க்ஷத்திரியன் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்தல் வேண்டு"மென்று போதித்து விசுவரூபங்காட்டி அவ்விசுவரூபத்தில் எல்லா எதிரிகளும் வந்து வீழ்ந்து மாய்வதையுங் காட்டி அருச்சுனது வீண் பிரமையைப்போக்கி முடிவிற் பதினெட்டு அக்குரோணி சைனியத்தையுமாள்வித்து, யுத்த காலத்தில் அஞ்சா நெஞ்சம் படைத்து ஆண்மையோடு போராடி மாய்வோர் வீர சொர்க்கஞ் சேர்தல் சத்தியமென்பதையும் நிதரிசனப்படுத்தியதையுங் கூர்ந்து பாராமலே ஏதோ மனம் போனவாறு அஹிம்சா தருமங் கற்பித்துப் பாமரரை வஞ்சித்தும், அதனாலநேகம் பேர் முற்கூறிய பலவித ஹிம்சைக்குட்படச் செய்தும், இன்னோரன்ன பிறவற்றையுஞ் செய்வித்தும் செய்தும் முறையே ஆலய தூஷணை, ஆலய புனித நிக்கிரகம், அந்தியச நரகப் பிரவேசம், சத்தியப் பிரவசன நிராகர

ணம், சாது ஹிம்சை, வேதாகம தூஷணை, வர்ணாஸ்ரம தூஷணை, பகவத்கீதா தூஷணை, இன்னும் மேற் காட்டப்பட்ட பலவகை ஹிம்சைகளை இழைக்கும் போலி அஹிம்சாதருமம் முதலிய வற்றை மேற் கொண்டொழுகுதலின், விசால புத்தியும் நுண்மா ணுழைபுல முடையாரும் அக்காந்தி முதலாயினருடைய துற்புத்தி மதியைப் பொருட்படுத்தா ரென்க. "யாரா ரெனக்கென்ன போதித்து மென்னவென் னறிவினை மயக்க வசமோ" என்னுந் தாயுமானாரது சுபோதத்தையே பின்பற்றுவ ரென்க.

நிற்க, டால்ஸ்டாய் என்பாரையே காந்தி குருவாய்க் கொண் டதேயன்றி, மதகுரு இவருக்கு ஒருவரும் வாய்ந்தில ராதலின் சாஸ்திர நுட்பங்க ளறியாதவராயினர். யாரென் செய்வது? பூர்வீக புண்ணியத்திற் கேற்றவாறு தானே குருவாய்ப் பர்! சநாதன தர்மிகளது கட்சியைப் பரிசீலனை செய்யத் தனக் கேற்றவாறு தாளம் போடும் பண்டிதர்களைக் கேட்டு விட்டிருக்கிறு ராம்; ஆயினும் இவர் மனதிற்கேற்றவாறு அவர்க ளபிப்பிராயப் பட்டால்தான் ஒத்துக் கொள்வார். இல்லாவிடிற் கலப்புச் சாஸ் திரமென்றே கதறுவார். ஆகம விஷயத்தைப் பிரசித்திப்படுத்தி விட்டோமாதலின் இனி ஓர் ஆசங்கைக்கு மிடமின்று. பண்டிதர் களைக் கேட்க வேண்டிய ஆவசியகமுமின்று. "உலகத்தாருண் டென்பதில் லென்பான் வையத்தலகையா வைக்கப்படும்" என் னும் பொய்யா மொழியார் வாக்கும் ஈண்டுப் பொன்னேபோற் போற்றத்தக்கது. ஈண்டு உலகத்தாரென்பது உயர்ந்தார் மேற்று, கற்று வல்ல முதியோரவராதலின்: அதுவன்றிச் சாமானியர்க ளாகிய உலகில் நிறைந்துள்ள சாஸ்திரக் கல்வியற்ற சழக்கர்களைக் குறித்ததன்று, விதிவிலக்கவ றறியாராதலின்: அதுபற்றியே "தீவினை யாரஞ்சார் விழுமியா ரஞ்சுவர் தீவினையென்னுஞ் செருக்கு" என்ற படி பழிபாவங்கட்கு அவர்களஞ்சாராதலின் ஆலயப் பிரவேச விஷ யத்தில் அவர்களுடைய வாக்கெடுத்தலுஞ் செல்லாது. அது குடி யர்கள் குழுமிய கூட்டத்திற் குடியாமையைக் குறித்து வாக்கெடுத் தலையே மானும். மேலும் மறியல் செய்யும் பொருட்டுக் காந்தியின் கூட்டத்தார் சம்பளமின்றி வேலைசெய்பவர்கள் (Volunteers) என்று சொல்லி அநேகங் கூலிக்காரர்களை யமைத்து அளவற்ற முறை அடி உதை குத்து வாங்கிக்கொள்ளும் பெரிய ஹிம்சைக்குட்படுத்துவது போல், ஆலயப் பிரவேச விஷயத்திலுஞ் செய்து அநேகரைத் தூண்டுதல் செய்யப் பின்வாங்காராதலின் பொதுஜன வாக்குஞ் சற்றும் அங்கீகரிக்கற்பாலதன்றென் றறிவாராக. ஆகவே யாண் டும் (majority majority) பெருந் தொகை பெருந் தொகை என ஓயாது ஒப்பாரி பாடுதல் ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. ஆயினுந் தீண்டாதார் ஆலயப் பிரவேசம் செய்யக் கூடாதெனப்

பெரும்பாலார் வாக்களித்துவிடின் அது சம்மதிக்கத் தக்கதே, சாஸ்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் ஒத்திருத்தலின். ஆனால் அப்போதுகூடக் காந்தியும் அவர் சீடர்களும் விடார் போலும். நெடுங்காலமாய் அனாதி தொட்டு வழங்கிவருஞ் சம்பிரதாயத்தினை, "இது ஏன் இவ்வாறு வழங்கி வருதல் வேண்டும்", எனத் தாமுங் கூர்ந்தாலோசியாதும், அடிப்பட்ட சான்றோர்பால் ஆய்ந்தோய்ந்து பாராதும், தன்னுனென்றைக் கருதிக்கொண்டு தான்றோன்றித் தம்பிரானுய் அவசரப்பட்டுக்கொண்டு ஆத்திரத்துடன் செய்யுங் காரியமெல்லாம் அனர்த்தத்திலேயே வந்து முடியுமென்பது சத்தியம். ஒருவன் புதிய வீடு கட்டப்புகுந்து அதற்காகச் சுவரெழுப்புங்கால் அண்டை வீட்டுக்காரன் ஜன்னல்களடைபட்டுக் காற்றின்றிக் காலன் கையில் அகப்படவேண்டி வருமென்று அவ்வண்டை வீட்டுக்காரன் புது வீட்டுக்காரனைத் தடைசெய்து "என் வீடு கட்டிப் பன்னிரண்டு வருஷத்திற்கு மேலாய் விட்டது. இப்போது புதிதாய்ச் சுவரெழுப்பி எங்கள் ஜன்னலை யடைக்கக்கூடா"தெனக் கூறியும் அதற்கு மேலுந் தடைக்கஞ்சாது சுவரெழுப்புவனேல் நஷ்டஈடு கொடுப்பதுடன் கட்டின சுவரையும் இடிக்க வேண்டி வந்து 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று பாண்டியன் மகளார் கூறியதுபோல், சிருஷ்டிகால முதல் ஆலயப்பிரவேசஞ் செய்யாதார் இப்போது செய்வாராயின் செய்வோருந் தூண்டினோரும் உதவியோரும் அபராதங் கொடுக்க வேண்டி வருவதோடு ஒவ்வொரு சம்புரோட்சணைக்குங் குறைந்தது ஐந்நூறு ரூபாய் பிடிக்குமாதலின் அதையும் ஆலயத்தாருக்குக் கட்டும்படி அரசாங்கத்தார் ஆக்ஞை செய்வார்களென நம்புகிறோம். ஆனால் முதல் முறை தெரியாமற் செய்து விட்டாலே பிராயச்சித்தாதிகள் செய்யவேண்டியிருத்தலின் ஒருமுறை கூட உள் நுழையாதபடி பாதுகாப்பது அரசாங்கத்தார் கடனேயாம். ஆனால் உள் நுழைய இப்போது மூவர் மசோதா கொண்டுவந்து சட்டமாக்கப் பார்க்கின்றாராதலின் அது பழிபாவத்திற் கஞ்சாது சுவரையெழுப்பி அண்டை வீட்டுக்காரன் ஜன்னல்களையடைத்து அவனை மூச்சுத்திணற வைத்துச் சாகச்செய்வதேபோல் முடிதலின் வைதீகர்களுக்கும் சாஸ்திரங்கட்குமோவ்வாத அத்தகைய அடாத விஷயத்தினைச் சட்டமாக்கக் கவர்னரும் இராஜப்பிரதிநிதியும் அநுமதியளிக்கமாட்டாரெனப்பெரிதும்நம்புகிறோம்.முதலாவதுமதவிஷயத்திற் பிரவேசித்தலேகூடாதாதலின்இராஜப்பிரதிநிதியும்கவர்ணரும்இத்தகையமசோதாகோண்டுவரவொட்டாதுஆரம்பத்திலேயே அடித்துப் போடுதல் அவர்கள் கடனேயாம். அவ்வாறே கொச்சி ராஜாங்கத்தில் நடந்தது மெச்சத்தக்கதே. ஏனெனின் ஆதிகாலத்தில் ஆங்கிலேய வியாபார தந்திரக்காரர்கள் ஆழ்ந்தாலோசித்த

தால் விக்டோரியா மகாராணியாரும் ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியும் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியும் மத விஷயத்திற் றலையிடோம் என்று கூறிய உறுதிமொழியைக் காப்பாற்றுவிடிற் கஷ்டமாய்த்தான் முடியுமென்பதை நினைப்பூட்டுகிறோம். மூன்று சக்கரவர்த்திகளது வாக்குறுதியை இடையே மாற்ற எவருக்கும் அதிகாரமில்லை. மாற்றினால் ராஜத்துரோஹமாயும் (Treason,) மதத்துரோகமாகிய பெருங்கலகமாயும் (Sedition, Riot) முடிவதிற் றடையில்லை. இஷ்டப்பிரகாரம் மதவிஷயத்தில் எப்பொழுது வேண்டுமென்றாலுஞ் சரி சட்டத்தைத் திருத்துவதென்றால், ஓர் வரையறைக்குட்பட்ட அரசாங்கம் (Limited monarchy) என்ற பெயர் எடுபட்டுப் போய், இட்டதே சட்டம் எனப்படுகிற ஏதேச்சாதிகார ராஜாங்கம் (Absolute monarchy) என்ற பெயர் ஸ்திரப்பட்டுப் போமென்க. ஏனெனின் முன்னமேயே உருதுமதி விவாகத்திற்கு அரசாங்கம் அநுமதித்து விட்டதே சாஸ்திர விரோதமாயிருக்கிறது. விதவா விவாகத்தைத் தடுக்காததுந் தப்பாய் முடிகிறது. அதோடு ஆலயப்பிரவேச விஷயத்தையும் அங்கீகரித்து விட்டால் தானிட்டதே சட்டமென நடந்த ருஷ்யா தேசத்தரசன் (Czar of Russia) கதையாகவே முழுவிரோதமாய் முடியுமென்க. இன்னும் விவாகரத்து மசோதாவுந் தலைகாட்டுகிறது. இத்துஷ்டபாம்பையுந் தலை நசுக்காவிடிற் பரதகண்டம் என்ற பெயரே அடியோடு மாய்ந்து நரககண்டம் என்ற பெயர் சித்திப்பதிற் றடையில்லையென்க. ஏனெனின் பரதகண்டமாகிய இந்தியாவினது சநாதன தர்மம் வேறு. இங்கிலாந்து முதலிய நாடுகளின் நவ நாகரிகம் வேறு. இந்தியாவினது பூர்வீக நோக்கம் ஆன்மார்த்தமாகிய சரியை கிரியை யோக ஞானங்களைச் செய்து முடிவு காணகில்லாப் பேரின்பத்தினை நுகர்தலேயாம். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா முதலான நாடுகளின் நோக்கம் யோனிக்குந்தினிக்குமே யழுதலாகிய உடலோம்புதலுஞ் சிற்றின்பத்தை யனுபவிக்க முயற்சித்தலுமேயாம். இதைக் குறித்துப் பின்னால் விஸ்தாரமாய் விவரிப்போம்.

## (கூ) சிவாகமம் சிவ வாக்காதலின் பரிபாகிகள்பொருட்டுச் சத்தியமே போதிக்குமெனல்.

சிவாகமம், சண்டாளர்கள் ஆலயத்துள் நுழையக் கூடாதென்று விதித்தல்போல், தூர ஸ்திரியும் உள் நுழையக் கூடாதென்றும், கோழி, புறா, குரங்கு, பக்ஷிகள், பாம்புகள், கழுதை, பன்றி, நாய் முதலியனவும் நுழைந்து விட்டாற் பிராயச்சித்தஞ் செய்யவும், சிவ தீக்ஷை பெற்ற ஆதிசைவர் தவிர சிவ தீக்ஷை பெற்ற, பெறாத இதர பிராமணர் முதலாயி

ஞோர் கூடக் கர்ப்ப கிருகத்திற் செல்லக்கூடாதெனவும், சிவலிங் கம், மற்றைய விக்கிரங்களைத் தொடக் கூடாதெனவும், தொட்டுப பூசிக்கக் கூடாதெனவும் விதித்தலின், சிவாகமம் மேலாகிய சத்திய விஷயத்தினையே போதிப்பதல்லாது பட்சபாதமாக ஒன்றுங் கூறு தென் றோர்ந்து கொள்க. ஆகவே விதி விலக்குகட்குக் கட்டுப் பட்டு நடக்க, திருமூல நாயனாருந் திருமந்திரத்தில் திருக்கோயி லழிவு என்னுந் தலைப்பின்கீழ்.

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றனை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே,"

எனக் கூறுகின்றார்.

இப்பாசுரத்தில் 'பேர்கொண்ட பார்ப்பான்' என்றது ஆதிசை வப் பிராமணனல்லாத ஏனைய சிவ தீக்ஷைபெற்ற பிராமணனாகிய மகா சைவனையுஞ் சிவதீக்ஷைபெறாத சாமானியப் பிராமணனையுமே குறித்தற் சிவாகம விதியாற் காண்க.

இனிச் சிவாகம விஷயத்தினைத் திரட்டி வெண்ணெயுருண்டை போற் றமிழிற் சைவர்க்கு நுகர்விக்குஞ் சைவ சமய நெறியென் னும் நூலின்கண் மறைஞான சம்பந்த நாயனாரும்,

"இட்டமுடன் றந்த மிலக்கிடும்போ திற்பாரேல்

கட்டநாய் நீசர்கரம்" என்றார். இதன் பொருள் பிரீதி யோடு தந்த சுத்தி செய்யும்போது மலத்தையும் நாயையும் நீசரை யும் கழுதையையும் பாராதே." என்பதே. பல் விளக்கும்போது கூடப் பாராதே யென்றால் ஏனைய விஷயங்கட்குக் கேட்பானேன்! இன்னும் அப்பெருமானார், "உண்ணேலுடலி லுறுப்பற்றார் சோறந் திய சர்வண்ணார் முதலோர் மனை," என்று கூறுகினார். அதன் பொருள்:-" அங்கக்கீனர், புலையர், வண்ணார் முதலாயினருடைய வீட்டி லன்னத்தைப் புசியாதே", என்பதாம். வீண் விஷயத்திற்கு உண்ணாவிரதம் பூண்டு பாவ மூட்டையைச் சுமப்போர் சத் விஷயமாகிய இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்வாராக. சம பந்தி போஜனக் கூச்சலிடுவோருங் கவனிப்பாராக. இதுமட்டுமா! இன்னுங் கூறுகின்றார். "ஈனர் புலையரிருதுமதி நாய் பன்றி யேனை யவும் பாராவிடத்து." "இருந்தாகுதிசெய்யிவற்றொன்று பார்க் கிற் சொரிந்திடக் கக்குண்ட கறி சோறு" இவற்றின் பொருள் வரு மாறு:-" ஈன சாதியாரும், புலையரும், இருதுமதியும், நாயும், பன்றி யும், பிறவும் பாராதவிடத்தில் இருந்து போசனம் பண்ணு. இவற் றுள் ஒன்றுபார்க்குமாயின் உண்ட பதார்த்தம் சோறு இவற்றைச்

சொரியும்படி கக்கு" என்பதே. இது திருஷ்டி தோஷத்தைக் காட்டலறிக. ஸ்மிருதியிலும் இவ்வாறே கூறப்படுகின்றது. காரணம் என்னவெனின் கண்ணில் ஒளி யிருக்கின்றது. அது அக்கினி யம்சம், கண்ணொளியின் சக்தி சேய்மைக் கண்ணுள்ளதாய சூரிய சந்திர நட்சத்திரங்களையுஞ் சென்று காணுந் தன்மைத்து. மற்றைய செவி முதலான இந்திரியங்கட்கு இவ்விதத் தன்மையில்லை. தங்களிடத்து வந்த சத்தம், ஸ்பரிசம் (ஊறு), ரசம் (சுவை), கந்தம் (வாசனை அல்லது நாற்றம்) ஆகிய இவற்றினையே யுணரும். கண்ணொளி அக்கினி ஸ்வரூபமாகையினாலே சென்று சுடுந் தன்மையும் வாய்ந்தது. "இவன் கண் கெட்ட கண்" என்று சொல்வதும் உலக வழக்கு. "யார் கண்பட்டதோ," "எப்படிப் பார்க்கிறான் பார்" என்றுஞ் சொல்வார்கள். ஆகையினால் புலையர் முதலியோர் பார்க்கப் புசிக்கக் கூடாதென்றார். மேலும், மீனுக்குக் கண்ணில் ஓர் அரிய சக்தி வாய்ந்திருப்பதால் தன் சினையை நோக்கின மாத்திரத்தே அவையெல்லாம் பொரிந்து குஞ்சுகளாக வெளிப்படுதலுங் காண்க. இதனால் மீனாட்சி யென்றபோது மீனைப்போன்ற கண்ணுடையாள் என்பது பெறப்பட்டு எண்ணிறந்த ஆன்மாக்களுடைய கன்மத்திற் கேற்றவாறு அவர்களைப் பலவாறாகச் சிருஷ்டி செய்து சுக துக்கங்களில் அழுத்திக் காத்தல், அழித்தல், மறைத்தல் என்ற (ச) கிருத்தியங்களைச் செய்பவளென்றும், விசாலாட்சி என்றபோது விசாலமுற்ற கண்களையுடையாளென்பது பெறப்பட்டுப் பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகம் என்னும் ஐந்தாவது தொழில்புரிந்து மோட்சத்தினை யருளுகின்றவளென்றும், காமாட்சி யென்றபோது சிவபெருமானிடம் ஆசையுற்ற கண்ணை யுடையாளென்பது பெறப்பட்டு அப்பெருமானுக்கு அபேதமாகிய அபார சக்தி (வல்லமை)யாயிருந்து பஞ்சகிருத்தியம் நிகழ்த்தும் பராசத்தியாயிருப்பவளென்பதும் பெறப்பட்டவாறு காண்க. ஒருவன் தனக்கு அபேதமாகிய சத்தியில்லாமல் ஒரு காரியமுஞ் செய்ய முடியாததுபோற் சிவமுந் தனக்கு அபேதமாகிய சத்தியை யொழிந்து ஒரு காரியமுஞ் செய்யாரென்க. இதனானே நல்ல பார்வை, தீய பார்வை என்னும் இரண்டும் பெறப்பட்டுச் சுக துக்கங்களை யுண்டுபண்ணுமென் றோர்க. "என்ன குளிர்ந்த பார்வையாகப் பார்க்கிறான்" என்றும், "அவனென்ன சுடுகிறதுபோற் பார்க்கிறான்" என்றுங் கூறும் உலகியலைக் கண்டமைக. Mesmerism, Hypnotism, மூர்மார்க்கட்டில் மாலையில் நடக்கும் கண்மயக்கு வித்தையால் ஆளை மூர்ச்சையடையச்செய்வதையுங்காண்க.

ஆகவே "திருஷ்டி தோஷங் கிடையாது" என்று கூறுவது ஆராய்ச்சியற்ற மடவோர் கூற்றாய் முடிதல் காண்க. இன்னும் பார்ப்பதே கூடாதெனின் புலையர் முதலாயினோர் உராய்தலும்

தீண்டலுஞ் சமபந்தி போஜனஞ் செய்தலும், ஆலயப்பிரவேசஞ் செய்தலுங் கலப்பு விவாகம் புரிதலும் எவ்வாறு மேலோர்க்குகக்கும் கடவுளுக்கு முகக்கும் என்பது யாங்கூறவும் வேண்டுமோ? ஓர்போதும் உகக்காது உகக்காது. இதனால் (க)ம் இலக்கத்திற் கூறிய பூர்வபட்சம் பலவற்றிற்குச் சமாதானம் பெறப்பட்டமை காண்க. நந்தனார், கண்ணப்பர் விஷயம் பின்னர்க் கூறுதும். ஆனால், நாயைப் பல பார்ப்பாரும் வளர்க்கின்றனரே யென்றால் அவர்கள் வைதிகர்களாகார். கேவலந் துவிஜ பந்துக்களேயாம். இனி, கோமாமிசம், மதுபானம், பிணமறுத்தல் முதலியவற்றை அவர்கள் கைக்கொண்டால் அவற்றை யெல்லாம் நீக்கச் சட்டங்கோண்டு வருவதே சால்புடைத்து. அதை விட்டுப் பழிபாவத்திற்கஞ்சாது வீண் விஷயத்திற்குச் சட்டம்புகுத்தப் பார்ப்பது பகவானுக்குகக்காது. குற்றத்தைக் குணமாய்க் கொள்ளற்க. இவ்விஷயத்தைக் குறித்துத் தமிழில் வெளிவந்துள்ள சிவதருமோத்தரம் என்னும் உத்தமோத்தம நூலினும் பரக்கக் காண்க. நாயனாரும் சிற்றினஞ்சேராமை என்ற அதிகாரத்தால் விளக்கல் காண்க.

## (க0) சண்டாளர் என்னும் பதம் தீண்டாதாரையே குறிக்குமெனல்

திவாகீர்த்திமுதக்யாஞ்ச பதிதம் ஸூதிகாம் ததா ।
ஶவம் தத்ஸ்ப்ருஷ்டிநஞ்சைவ ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநேந ஶுத்யதி ॥

என்று மனுஸ்மிருதி(ரு)ம் அத்தியாயம் (அரு)ம் சுலோகம் சொல்லுகின்றது. அதன் பொருளாவது :—பறையன், தூரஸ்திரீ, பதிதன், பிரசவித்தவள், பிணம், பிணத்தைத் தொட்டவன், இவர்களைத் தெரியாமல் தொட்டால் ஸ்நானஞ் செய்தாற் பரிசுத்தனாகிறான் என்பதே.

பதிதசண்டாலஸூதிகோதக்யாஶவஸ்ப்ருஷ்டிதத்ஸ்ப்ருஷ்ட்யுபஸ்பர்ஶநே ஸசைலோதகோபஸ்பர்ஶநாச்சுத்த்யேத் ।

என்று கௌதம ஸ்மிருதியுங் கூறுகின்றது.

இதன் பொருள் :—“பதிதன், சண்டாளன், பிரஸவ ஸ்திரீ, தூரஸ்திரீ, பிணம் இவர்களைத் தொட்டவன், தோட்டவனைத்தோட்டவன், இவர்களைத் தொட்டால் வஸ்திரத்துடன் ஜலத்தில் ஸ்நானஞ் செய்தாற் சுத்தனாவான்” என்பதே. இன்னும் பல ஸ்மிருதி கர்த்தாக்கள் சிவாகமத்திற்குவிரோதமின்றியே கூறுகின்றனர்.

ஆனாற் கலியுகத்திற் பின்பற்ற வேண்டிய பராசர ஸ்மிருதியில் தீண்டாமையைக் குறித்து யாதேனும் விதிக்கப்பட்டுளதாவெனச் சிலர் உசாவக்கூடும். அதனையுஞ் சற்றாராய்வாம்:—

ஶ்வபாகம் வாபி சாண்டாலம் விப்ர: ஸம்பாஷதே யதி ।
த்விஜைஸ்ஸம்பாஷணம் குர்யாத் ஸாவித்ரீம் து ஸக்ருஜ்ஜபேத் ॥ கூ-௨௨

சக்கிலி, சண்டாளன் இவர்களோடு பிராமணன் பேசினாற் பிறகு பிராமணர்களோடு பேசியுங் காயத்ரியை ஒருதரம் ஜெபித்தும் சுத்தனாகிறான்.

சாண்டாலதர்ஶனே ஸத்ய ஆதித்யமவலோகயேத் ।
சாண்டாலஸ்பர்ஶனே சைவ ஸசைலம் ஸ்நானமாசரேத் ॥ கூ-௨௩

சண்டாளனைப் பார்த்தவுடனே சூரியனைப் பார்க்க வேண்டும். அவனைத் தொட்டால் துணியுடன் ஸ்நானஞ் செய்ய வேண்டும்.

சாண்டாலேன ஸஹ ஸுப்த்வா த்ரிராத்ரமுபவாஸயேத் ।
சாண்டாலைகபதம் கத்வா காயத்ரீஸ்மரணாச்சுசி: ॥ கூ-௨௪

சண்டாளனுடன் தூங்கினவனுக்கு மூன்று நாளுபவாஸத்தை விதிக்க வேண்டும். சண்டாளனுடன் வழி நடந்தவன் காயத்ரியை ஸ்மரித்தாற் சுத்தனாகிறான்.

சாண்டாலகாதவாபீஷு பீத்வா ஸலிலமக்ரஜ: ।
அஜ்ஞாநாச்சைகபக்தேந ஹோராத்ரேண ஶுத்யதி ॥ கூ-௨௫

சண்டாளனால் வெட்டப்பட்ட நடவாபிகளில் தெரியாமற் பிராமணன் தண்ணீர் குடித்தால் ஒருநாள் ஒரே வேளை போஜனத்தினாற் சுத்தனாகிறான்.

சாண்டாலபாண்டஸம்ஸ்ப்ருஷ்டம் பீத்வா கூபகதம் ஜலம் ।
கோமூத்ரயாவகாஹாரஸ்த்ரிராத்ராச்சுத்திமாப்நுயாத் ॥ கூ-௨௬

சண்டாளன் பாத்திரம் பட்ட கிணற்று ஜலத்தைக் குடித்த பிராமணன் மூன்று நாள் கோமூத்திரத்தையும் யவ அரிசி மாவையும் புசித்துச் சுத்தனாகிறான்.

சாண்டாலகடபாண்டஸ்தம் யத்தோயம் பிபதி த்விஜ: ।
தத்க்ஷணாத் க்ஷிபதே யஸ்து ப்ராஜாபத்யம் ஸமாசரேத் ॥ கூ-௨௭
யதி ந க்ஷிபதே தோயம் ஶரீரே யஸ்ய ஜீர்யதே ।
ப்ராஜாபத்யம் ந தாதவ்யம் க்ருச்ரம் ஸாந்தபனம் சரேத் ॥ கூ-௨௮

சண்டாளனுடைய பாண்டத்திலிருக்கும் ஜலத்தைக் குடித்த பிராமணன் பதிதனாவான். அந்தப் பிராமணன் பிரஜாபத்ய கிருச்ரத்தைச் செய்யக் கடவன். இந்தப் பிராயச்சித்தமானது அப்படிக்

குடித்த ஜலத்தை வாந்தி பண்ணினால்தான். அந்த ஜலம் சரீரத்திற் செரித்து விட்டால் ஸாந்தபனமென்கிற விரதத்தைச் செய்யவேண்டும்.

அஜெ ஹாந்தவநம்விஷ: ஜாஜாவதெநக்ஷ: ।

தவயெ அஜெ வெஸ்யுஃ வாஒம் ஷூஷூதாவயெஃ ॥

பிராமணன் குடித்தாற் சாந்தபனமும் க்ஷத்திரியன் பிரஜாபத்யமும் வைச்யன் அதிற் பாதியும் சூத்திரன் அதிற் காற் பாகமும் பிராயச் சித்தஞ் செய்ய வேண்டும்.

ஹாணஸஹஜாநாம்தஜமெஒயிவயஃ விபெஃ ।

ஹாஹணஃ க்ஷத்ரியொவெயூஸூ ஊவெவவஒாகதஃ ॥ சூ-௩0

ஹக்ஷெஜாவவாஷெநவிஜாதீநாம்தநிஷ்ஜகிஃ ।

ஸூஷவெஷூவாஷெநதயாதாநெநஸூகிதஃ ॥ சூ-௩௧

சண்டாளனுடைய பாத்திரத்திலிருக்கும் ஜலம், தயிர், பால், இவைகளைச் சாப்பிட்ட மூன்று வர்ணத்தாரும் பிரம்ம கூர்ச்ச பானத்துடன் உபவாஸ மிருக்க வேண்டும். சூத்திரனுக்கு உபவாஸத்துடன் சக்திக்கேற்பத் தானம் செய்வது பிராயச் சித்தம்.

ஹெஜூநாவிஜஸெஷஸணாமூாஞாகயம்அந ।

மொஊதயாவகாஹாரொமாஸாதெணஸூஜ்யதி ॥ சூ-௩௨

அறியாமற் சண்டாளன் அன்னத்தைப் புசித்த பிராமணன் பத்து நாள் யவமென்கிற அரிசியைக் கோ மூத்திரத்துடன் சாப்பிட்டுச் சுத்தனாகிறான்.

ஷணெகெக ஹாஸஉஷியாஜொஊதயாவகஸூஅ ।

உபாஷம்நியஉஷஸ்ஷவதம்கதஉம் விநிஜிஷெஃ ॥ சூ-௩௩

முற்கூறியவாறு அன்னத்தைப் புசித்தவன் கோ மூத்திரத்துடன் யவ அரிசியைத் தினம் ஒன்றுக்கு ஒரு கவளமாக நியமத்துடன் புசித்து விரத மிருக்கவேண்டும்.

அணாமொஷஹஷம்வக உம் ஊாஷம்ஊாஷாய ஜெவவா ।

மொஊதயாவகாஹாரொஊாஷாயெஉநவிஸூஜ்யதி ॥ சூ-௩௪

ஒரு மாதமாவது அரை மாதமாவது சண்டாளரோடு சகவாஸம் நேர்ந்தால் யவ அரிசியினாலும் கோ மூத்திரத்தினாலும் அரை மாதம் போஜனஞ் செய்து சுத்தனாகிறான்.

ஆகவே இந்தச் சுலோகங்களைக் கண்ட உத்தமர் கழிபேரு

வகை பூப்பர். மத்திமர் தாங்கள் இதுகாறுஞ் செய்துவிட்ட காரியத்திற்குத் துக்கித்துப் பிராயச்சித்தஞ் செய்து கொள்வர். அதமர் இதெல்லாம் நம்மால் முடியாதென்று இனிச் செய்யாமலிருப்பர். அதமாதமர், 'கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார்ச் சொற் கூற்றம்' என்னும் ஔவைப் பிராட்டியார் வாக்குக் கிணங்கப் பிடிவாதமாய் வீண் பிரசாரஞ் செய்து தாமுங் கெட்டுப் பிறரையுங் கெடுத்துக் குருடுங் குருடுஞ் சேர்ந்து குழியில் விழுந்தவாறே என்று நரகப் படுகுழியில் வீழ்வர். இது சத்தியமென்பது இவ்வளவு சுலோகங்களை யெடுத்தெடுத் தூட்டிய பின்னும் உணர முடியவில்லையா! ஐயோ பரிதாபம்!

𑌪𑌾𑌦𑍁𑌕𑌸𑍍𑌥𑍋 𑌨 𑌭𑍁𑌂𑌜𑍀𑌤 𑌪𑌰𑍍𑌯𑌂𑌕𑌸𑍍𑌥𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 ।
𑌶𑍍𑌵𑌾𑌨𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌦𑍃𑌷𑍍𑌟𑍌 𑌭𑍋𑌜𑌨𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௯-௯௯

"பாதக் குறட்டி லிருந்துகொண்டும் கட்டிலிலிருந்துகொண்டும் நின்றுகொண்டும், நாய் சண்டாளனிவர்களைப் பார்த்துக்கொண்டுஞ் சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிடுஞ் சாப்பாட்டை விட வேண்டும்". ஆகவே பூட்ஸ் போட்டுக்கொண்டும் சோபாவின்மேற் சாய்ந்துகொண்டும், போதாக் குறைக்குக்கூட நாயை வைத்துக் கொண்டுந் தீண்டாதாரோடு சமபந்தி போஜனஞ் செய்துகொண்டுங் கலப்பு விவாகஞ் செய்துகொண்டுங் காலத்தைக் கழிப்போர் கதி அதோ கதியென்பது யாமெடுத்துக் கூறவும் வேண்டுமா?

𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍀𑌂 𑌵𑌾 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍀𑌂 𑌵𑌾 𑌅𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌯𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑍁𑌪𑌵𑌾𑌸𑍀 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌾𑌤𑍍 ॥ ௧௦-௫
𑌸𑌶𑌿𑌖𑌂 𑌵𑌪𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌗𑍋𑌦𑍍𑌵𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌦𑍍𑌧𑌿𑌂 𑌪𑌾𑌰𑌾𑌶𑌰𑍋𑌽𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥ ௧௦-௯

"பிராமணன் சண்டாள ஸ்திரீயையாவது சக்கிலி ஸ்திரீயையாவது புணர்ந்தாற் பிராமணர்களுடைய அனுமதிபெற்று மூன்று நாள் உபவாஸம் (உண்ணாவிரதம்) இருந்து சிகை (குடுமி)யுடன் மொட்டை யடித்துக்கொண்டு இரண்டு பிரஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுத்துச் சுத்தியடைகிறானென்று பராசரர் சொன்னார்". இதைக் கேட்ட பிறகுமா கலப்பு விவாகத்திற்குக் கனவு காண்பது! பசுவைத் தானஞ் செய்ய வேண்டுமென்றால் அதைவிட்டுப் பசு மாம்சம் உண்பாரோடா விவாகம்! பேஷ். நன்றாயிருக்கிறது ஞாயம்! இது பெருங் கலிக்கூத்தே! இதைப்பற்றிக் கோவதப் பிராயச்சித்தப் பிரகரணத்திற் பின்னாற் பேசி அக்காரணத்தானும் அவர்களோடு சம்பாஷிப்பதுந் தீண்டுவதும் பெரும் பாதகமென்று ஸ்தாபிப்பேம். சற்றுப்

பொறுமின். இதர மதஸ்தர்களைப்பற்றி எமக்கு அவசியமில்லை. அவர்களுக்குச் சொன்னாலுங் கேளார்கள். "இந்துக்கள், சநாதன தர்மிகள்" என்று "ஆசை வெட்கமறியாது" என்னும் பழமொழிக்கிணங்கப் பெரும் பேரை வைத்துக்கொண்டு சநாதன தர்ம சட்ட திட்டத்திற்குட்படாமல் வேர் புழுவாகவும், கோடரிக் காம்பு குலத்திற்கீனம் என்பதுபோன்றும் நடந்துகொள்ளுங் கூட்டத்தைப் பார்க்கத் தான் மனக்கசப்பதிகரிக்கிறது. கூழுக்காசை மீசைக்கு மாசையா! சண்டாளர்களைத் தொட்டவர்களைத் தொட்டவர்களையே தீண்டக் கூடாதென்று முன்னரேயே சுலோகங்களெடுத்துதகரிக்கப்பட்டதென்றால் அத்தீண்டாதார்களை வளர்ப்பவர்களும் அவர்களோடு உண்பவர்களும் அவர்கள் வீட்டிற் சாப்பிடுபவர்களும் கலப்பு விவாகஞ் செய்பவர்களும் எப்படி இந்துக்களாவர்! எப்படிச் சநாதன தர்மிகளாவர்! இவர்களையெல்லாம் இந்துக்களல்லவென்று வொதுக்கவே சட்டம் பிறப்பித்தலாவசியகமாயிருக்கிறது இந்து மதத்தின் புநிதத்தை இவர்களன்றோ கெடுக்கின்றனர். இவர்களன்றோ கலிகாலக் கொடியோர்! அந்நிய மதத்தினரை நோவானேன்? அத்தகைய போலி ஹிந்துக்களே ஆலயப் பிரவேசஞ் செய்யக் கூடாதென்று சட்டம்பிறப்பித்தல் அரசாங்கத்தார் கடனேயாம். ஆகவே இப்பேர்ப்பட்டவர்களுங் கன்ம சண்டாளர்களாய் விடுகிறபடியால் ஜாதிச் சண்டாளர் மாத்திரமன்று. இவர்களும் இனி ஈஸ்வரன் கோயில் போது என்றுசொல்லவு மிடமில்லை, நுழையவுமிடமில்லையென் றுணர்வாராக. குரானுக்குக் கட்டுப்படாதவன் மகம்மதியனுவனோ! பிராமணர்கள் மாத்திரந் தானே சண்டாளரோடு கலப்பு விவாகஞ் செய்யக் கூடாதெனச் சுலோகங் காட்டப்பட்டது. "நமக்கென்ன நாம் தாராளமாய்ச் செய்து கொண்டு கோயிலுள் நுழையலாம்" எனப் பிறர் வாய் திறப்பராயின் கீழ்வருஞ் சுலோகங்கள் அன்னாருக்கு வாய்ப்பூட்டிடுகின்றன.

க்ஷத்ரியோவாயவைஸ்யோவா சண்டாலீம் கச்சதி ।
ப்ராஜாபத்யத்வயம் க்ருத்வா தத்யாத் கோமிதுநத்வயம் ॥ க0-எ

க்ஷத்திரியனாவது வைச்யனாவது சண்டாள ஸ்திரீயைப் புணர்ந்தால் இரண்டு பிரஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரிஷபங்களோடு கூடின இரண்டு பசுக்களைத் தானம் செய்ய வேண்டும்.

ஸ்வபாகீம்வாய சண்டாலீம் ஸூத்ரோவா யதி கச்சதி ।
ப்ராஜாபத்யம் சரேத் க்ருச்ரம் சதுர்கோமிதுநம் ததேத் ॥ க0-அ

சூத்திரன் சக்கிலி ஸ்திரீயையாவது சண்டாள ஸ்திரீயையாவது புணர்ந்தால் பிரஜாபத்ய கிருச்ரத்தைச் செய்து இரிஷபங்க

ளோடு கூடின நான்கு 'கோதானஞ் செய்ய வேண்டும்." ஆகவே வர வர அபராதம் முட்டையிட்டுக் குஞ்சு பொரித் ததிகரித்தற் காண்க. நாலு காசு பாலுக்கே கஷ்டப்படுஞ் சூத்திரன் நாலு பசுக்கள் எருதுகளுக் கெங்கிருந்துபோவன்! இரண்டு பிரஜாபத்ய கிருச்ரத்தை எவ்வாறு செய்து முடிப்பன்! ஒருதரம் புணர்ந் தாலே இவ்வளவு வெகுமானமென்றாற் கலப்பு விவாகமா? மாடு தின்னும் புலையரோடு மணத்தலா! இன்னும் பராசர ஸ்மிருதி முத லியவற்றால் நான் காஞ் சாதியாகிய சூத்திரருக் கன்னியமாகச் சண் டாள ஜாதி பெறப்பட்டவாறுங் கண்டமைக. ஆலயப் பிரவேசங் கூடாதென்பது நந்தனார் சரித்திரத்தாலும் நன்கு வலியுறுத்தப்படும் நிற்க, தாயோடேனும் தங்கையோடேனும் மகளோடேனும் எவன் மோகித்துப் புணர்கிறானோ அவனுக்குப் பெரும் பிராயச் சித்தம் விதித்திருத்தலின் ஆணவத் தடிப்பையும்இந்திரியங்களின் சேஷ் டையு மடக்கவே தீண்டாமையேற்பட்டது பேருபகார மாதற் காண்க. ஆகவே பராசர ஸ்மிருதி மூச்சுவிடா வண்ணம் மூக்கைப் பிடித்தல் காண்க. இதுவே அமையுமாகலின் மற்றைய ஸ்மிருதி களை விரிவஞ்சி விடுத்தாமென்க.

ஆனால் நம்மோடு அவர்கள் பழகினால் நாகரீகமடைந்து மாடு தின்பதையும் பசுக் கொலையையும் பறக்கூத் தாடுதலையும் விட்டு விடுவரென்றால் நவ நாகரீகமடைந்த ஐரோப்பியர் அமெரிக்கர் பர் மியர் ஜப்பானியர் சீனர் மகம்மதியர் முதலாயினர் மாடு தின்பதை விட்டனரா? உருசி கண்ட பூனை விடுமா? பழக்க வாசனை போகுமா? மகம்மதியர் நீங்கலாக மற்றவர் குடித்துவிட்டு ஆணும்பெண் ணுங் கைகோர்த்துக் கட்டிக் கொண்டாடுவதை (Dance) விட்ட னரா? சினிமாக் காட்சி சிரிப்புக்கிடமா யிருக்கிறதே. மூன்று இரண்டா ஆயிரக்கணக்கான ஐரோப்பிய அமெரிக்க ஸ்திரீகள் வெட் கத்தை விட்டு வெளிக்கிளம்பி முக்கால் நிர்வாணத்தைக் காட்டி அர சாங்கத்தார் இடம் விட்டாற் போதும் முழு நிர்வாணத்தையுங் காட்டிக் காசு பறிக்கலாமென்ற பேரவாவுற்றுடுகின்றனரே! இது தானா நாகரீகம்! வீண் கல்வியைக் கற்று வேலைக்குத் திண்டாட்ட முற்றுக் கடைசியில் ஆணும் பெண்ணும் ஆலிங்கனஞ் செய்து காட்டி வயிறு வளர்க்கிறதே பெருந் தொழிலாகக் கொள்ளல்தானா நாகரீகம்! இப்போதே உலக முழுதுங் கெட்டதுபோற் புனிதமாய பரத கண்டமும் அவர்களைப் பார்த்து (Copy யடித்து) நாளடை வில் வெகு வேகமாகப் பல விஷயத்திலுங் கெட்டுக்கொண்டே போகிறது. இதுதானா முன்னேற்றம். இல்லை இல்லை. இது பின் னிறக்கமே. என்னை? நவ நாகரீகமானது அதாவது சினிமா காட்சி முதலியவை திருட்டுத் தொழிலையும் மோசஞ் செய்தலையும் நம்பிக்கைத் துரோகஞ் செய்தலையுங் குடித்தாடுதலையும் வியபி

சாரஞ் செய்தலையுமே விருத்திசெய்து சிறுவர் சிறுமிகளையும் வெகுவாய்க் கெடுத்து விடுகின்றது. இந்தச் சினிமா காட்சி முதலியவற்றைக் குறித்து இன்னும் பின்னால் விஸ்தரிப்போம், ஆகவே எல்லோரையுங் கெடுக்குஞ் சினிமா காட்சி முதலியவை காட்டக் கூடாதென்றே சட்டம் பிறப்பித்தலாவசியகம்! அதற்குப் புண்ணியங் கட்டிக்கொள்ளக் கூடாதா பிரபுக்களே! ஐயோ அநியாயமாய் நம் நாடு எடுத்ததெற்கெல்லாம் முன்னேற்றம் முன்னேற்றமென்றுளறிச் சற்றும் முன்னேற்றமின்றிப் பின்னிறக்கமடைந்து ஒரே யிறக்கமாய் நரகக்குழியில் எல்லாரையும் இறக்கி மேலே யெழாவிடாமற் கல் தூக்கி வைக்கப்படுகின்றதே. கண் தெரியவில்லையா! கெடுமதி கண்ணுக்குத் தோன்றுமா! கண்ணைத் திறவுங்கள் திறவுங்கள்! போலி நாகரீகமுற்ற மேனாடு எல்லாவற்றிலும் வயிற்றுப் பிழைப்புக்காகக் கல்வி கற்றுங் கோடிக்கணக்கான பேர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் அதனாற் கலகமும் விளைவதைக் கவனியுங்கள். ஜீவகாருண்ணியமற்ற நாகரீகம் நாகரீகமேயாகாது. அது வீண் மயக்கமே. அது எம் போலியரை மயக்கத் தக்கதன்று. ஆகவே இந்துமதம் போதிக்கிற மாதிரி வேதாகமங்கட்குக் கட்டுப்பட்டுக் கூடியவரையிலொழுகி இந்திர பதவி சந்திர பதவி பிரம்ம பதவி வைகுண்ட பதவி கைலாய பதவி சிவலோக பதவி சுத்தாத்வைதமுத்தி முதலியவற்றை யடைந்து பேரின்பத்தினை நுகர முன்னேற்றமடைதல் வேண்டுமா? இல்லைச் சிற்றின்பத்தினையே கருதி நவ நாகரீகமாகிய போலி நாகரீகத்திலீடுபட்டுப் பின்னிறங்க வேண்டுமா? யாது வேண்டுங் கூறுமின். மாங்கனியோ எட்டிக் கொட்டையோ எது இஷ்டஞ் சாற்றுமின். ஆகவே நவ நாகரீகத்தைப் பின்பற்றினால் ஓர் காலத்தும் ஈடேற முடியவே முடியாது. பின்னால் நம் கதி அதோ கதிதான். அது சத்தியமே. கைப்புண்ணுக்குக் கண்ணாடியா! இறுதியாக நம் பாராசர ஸ்மிருதியானது,

[illegible] ।
[illegible] ॥ கஉ.ருந

"பதிதர்களுக்கு ஒரு நுகத்தடியும் மாதவிடாயானவட்கு இரண்டும் பிரசவித்தவட்கு மூன்றுஞ் சண்டாளனுக்கு நான்கு நுகத்தடியும் விலக வேண்டும்" என்றும்,

[illegible] ।
[illegible] ॥

"முற்கூறிய அளவைவிடக் கிட்டே நெருங்கினால் உடுத்த துணியுடன் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். மேற்கூறியவர்களைத்

தெரியாமற் தொட்டால் அப்படி ஸ்நானஞ் செய்வதோடு சூரி யனைத் தரிசிக்க வேண்டும்" என்றுங் கட்டளையிட்டு விச்சிராந்தி யடைகின்றது.

## (கக) சண்டாளர் என்போர் யார் என்பது

ஸ்மிருதிகளிற் சூத்திரனுக்கும் பிராமண ஸ்திரீக்கும் பிறந்த வன் சண்டாளன் என்று கூறப்பட்டிருப்பது பலரும் அறிந்த தொன்றே. அவ்வாறே அமரகோஷமும், ஶூத்ராத்ப்ராஹ்மண்யாம் ஜநிதோ ப்ராஹ்மணீஸம்வரஷணே நய: | "சூத்திரனுற் பிராமண ஸ்திரீக் குப் பிறந்தவன் சண்டாளன் ஆவான்" என்று கோஷிக்கின்றது. வாசஸ்பத்யமும், ஜாதிஹெஸெள ஶூத்ரப்ராஹ்மண்யாம் வாதிதெஸம்கீண ஜவணெஜ | "சூத்திர ஆணும் ப்ராஹ்மணப் பெண் ணுங் கலந்துண்டாக்கிய கலப்புச் சாதி. அதொரு ஜாதி" என்று கூறுகிறது.

ஆட்சேபம் :—இப்போதிருக்குந் தீண்டாதாரெனப்படுவோ ரெல்லாம் அவ்வாறே உண்டானவரா?

சமாதானம் :—இப்போது பிரத்தியட்சமாக ஐரோப்பியருக் கும் இந்தியாவிலுள்ள தீண்டாத ஸ்திரீகளுக்கும் உற்பத்தியாய் விட்ட ஒரு நூதன ஜாதி, பறங்கிக்காரர், சட்டைக்காரர் (East Indians) என்றழைக்கப்பட்டு அந்த வம்சத்தில் அளவற்றவர்க ளாக ஆய்விட்டது போன்றும், பரத கண்டத்தைவிட்டு மேற்கே போய் விட்டவர்களெல்லாம் யவனர்களாகி, டியூடானிக் சாதியின ராகிக் கிரீக், ரோமன், ஜெர்மன், பிரஞ்சு, சாக்சன், ஜியூட், ஆங் கில்ஸ் என்றாகிச் செல்டிக் ஜாதியினராகிப் பூர்வீகத்திற் பிரிட்டனி லிருந்த பிரிடன்களோடு சேர்ந்து ஆங்கிலோசாக்ஸன் ஜாதியாகி மொத்தத்தில் ஆங்கிலேயர் என்ற பெயரை யடைந்து இப்போது எண்ணிறந்தவர்களாய்ப் பெருகி விட்டது போன்றும் சண் டாளர்கள் பெருகிவிட்டார்களென்று கொள்ளத் தக்கது. இந்தியாவைவிட்டு மேற்கே போய் ஆசாரங் கெட்டு மாட்டிறைச்சி முதலியவற்றை யுண்டு பலவகையாகக் கலந்துபோனவர்களெல் லாம் எப்படி மிலேச்சர்களென்றும் ஹூணர்களென்று மழைக்கப் படுகின்றனரோ அவ்வாறே ஈண்டுந் தீண்டாதார்கள் அனாதி காலத் திருந்து பெருகிச் சண்டாளர் என்றழைக்கப்படுகின்றனர். பிற் காலத்திலுண்டாகியவரே பெருகிவிட்டன ரென்றால் முற்கா லத்துண்டாகிய சண்டாளர் ஏராளமா யிருக்கக் கேட்பா

னேன்? எப்போது சரித்திர ஆராய்ச்சிக்கு வந்தோமோ அப்போது உள்ளதை உள்ளபடி யன்றே வெளிப்படுத்தல் வேண்டும். மறைத்தால் மோசஞ் செய்வதாகாதோ? ஆகவே அனாதிகாலந் தொட்டு அந்தச் சண்டாளர் எனப்படுவோர் எல்லோரும் இயல்பாயுள்ள காமப் பெருக்காற் சூத்திர ஆண்களுக்கும் பார்ப்பினிகட்கும் உண்டாகி விட்ட பிரதிலோமக் கலப்புச் சாதியாகி அவர்களுக்குள்ளேயே பல பாஹிய ஜாதிகளாகிப் பிரிந்து, கொள்வன கொடுப்பனவெல்லாம் அவர்களுக்குள்ளேயே வைத்துக் கொண்டு சேரியிலோர் புறம் ஒதுங்கி வாழ்ந்து உயர்ஜாதி இந்துக்களைத் தீண்டாதிருந்துவரல் காண்க. இன்னும் ஆங்கிலேயர் முதலாயினோர் பர்மா சீனு மலேயா முதலிய எந்நாட்டுக்கேகினும் சிலர் அந்நாட்டு ஸ்திரீகளை மணந்து மக்களைப் பெற்று ஆனந்தித்து வருதலும் பிரத்தியட்சம். இதை ஒருவரும் மறுக்கமுடியாது. அவ்வாறே சென்னை முதலியவிடங்களில் மகம்மதியர் தீண்டாதாரிடம் ஒரு விஷயத்திற் பேதமற்றவராய் அத்தீண்டாதார் வகுப்பு ஸ்திரீகளைத் தங்கள் வீட்டில் ஜலந்திரட்டல் சமைத்தல் முதலிய வேலைகளில் அமர்த்திக்கொண்டு நெருங்கிப் பழகுவதாற் காமமேலிட்டு அப்பெண்களுக்குக் காதை நிறையக் குத்தித் துலுக்க ஸ்திரீகளாக்கிக் கலந்து நாளடைவில் அநேக பிரஜைகளை உண்டாக்குவதும் பிரத்தியட்சமே. இவர்களெல்லாம் பிறகு மகம்மதியர்களாகி விடுகிறார்கள். ஐதர் திப்புக்கலகத்தாலும் அரங்கஜிப்பின் கொடுமையாலும் அக்பரின் நயபலத்தாலும் தென்னிந்தியாவிலுள்ள அநேக தமிழர் தெலுங்கர் மலையாளிகள் மகம்மதியர்களாகிவிட்டபோதிலும் பூர்வீக பாஷையே பேசுகிறார்கள். அவ்வாறே வட நாட்டிலும் அநேகர் மகம்மதியர்களாகி விட்டு இந்துக்களின் பழக்க வழக்கங்களை உடையவர்களா யிருத்தலின் ஆரிய சமாஜத்தார் மீட்டும் இந்துக்களாக்கி விடுகிறார்கள். சென்னையிலும் அவ்வாறே அடாத பிரசாரஞ் செய்து வருகின்றனர். இம்மாதிரியாகப் பலவிதகலப்புண்டாகாமலிருக்கும்போருட்டே தீண்டாமை யேற்பட்டதென்றறிக. மாங்காயிலும் பல தினுசுகளும் உருசிபேதங்களுங் குணபேதங்களும் அவ்வாறே நாய்களிலும் பலவகை பேதங்களும் ஏற்பட்டு உயர்ஜாதி மாம்பழம் உயர்ஜாதி நாய் முதலியன ஏற்பட்டிருப்பதுபோல மனிதர்களிலும் உயர்வு தாழ்வு பூர்வீக கன்ம பேதத்தாலுண்டாதல் நிச்சயமாதலின் பேதங் கிடையாதென்பது பேதமையே யென்க. உயர்வு தாழ்வின்றி உலகத்தில் ஓர் காரியமும் நடைபெறாமை அநுபவத்தாலும் நன்கு காண்க. எல்லாப் பிராணிகளுங் கன்மத்திற் கீடாகவே ஈசனால் உயர்வு தாழ்வாகப் படைக்கப்பட்டமையும் பிரத்தியட்சமே யென்க. சிருஷ்டியைப் பார்த்தாலே அளந்த விறபேதமாகக் காண்பது பிரத்தியட்சம். ஒருவர் முகம்

போல் மற்ருெருவர் முகமில்லை. நால்வகை யோனி எழுவகைப் பிறப்பு (அசு) லட்ச யோனி பேதங்களாதலையும் ஆராய்ந்தறிக, ஆகவே பேதமில்லையென்பது யாண்டையதென்க.

## (கஉ) வேதத்திற் சண்டாளர் என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டமை

சாந்தோக்யம். 5-10 :— கஅய இஹ கபூயசரணா அஹ்யா ஸோஹயதே கபூயாம் யோநிமாவஶெய்ரந் ஶ்வயோநிம்வா ஸூகர யோநிம் சண்டாலயோநிம்வா. "எவர்கள் இங்குக் கெட்ட நடத்தையுடையவர்களோ அவர்கள் அடுத்த ஜென்மத்தில் இழிந்த பிறப்பாகிய நாயகவோ, பன்றியாகவோ, சண்டாளனாகவோ பிறக்கிருர்கள்."

பிருஹதாரண்யகம். 4-3-22:— அத்ர ஸ்தேநோ ஸ்தேநோ ஹவதி ப்ரூணஹா ப்ரூணஹா ஹவதி சண்டாலோ சண்டால:। "இந்த (ஸுஷுப்தி) நிலையிலிருப்பவன் திருடனுயிருந்தாலும் திருடனல்ல. சிசு வதை செய்கிறவனுயிருந்தாலுஞ் சிசு வதை செய்கிறவனல்ல. சண்டாளனுயிருந்தாலும் சண்டாளனல்ல.

ஸ்ரீருத்திரம். 4ம் அநுவாகம்:— நம: வ்ராஜிஷேஹ்யோ நிஷாதேஹ்யஶ்வ வோ நம: । "பக்ஷிகளின் கூட்டங்களை அடிப்பவர்கள் உருவமாயும், நாயையடிக்கும் நிஷாதர்கள் உருவமாயும் (இருக்கிற) உங்களுக்கு அடிக்கடி நமஸ்காரம்

நம: ஶ்வஹ்ய: ஶ்வபதிஹ்யஶ்வ வோ நம: நாய்கள் ரூபமாய் இருப்பவராயும் நாயகளுக்கு யஜமானர்கள் உருவமாய் இருப்பவராயும் (இருக்கிற) உங்களுக்கு அடிக்கடி நமஸ்காரம்." நிஷாதபதமும், ஶ்வபதி என்கிற பதமும் சண்டாளன் என்பதற்குப் பரியாய நாமமாதலைக் கீழ்வரும் அமர நிகண்டாற் காண்க.

சண்டாலப்லவ மாதங்க திவாகீர்த்தி ஜநங்கமா: ।
நிஷாத ஶ்வபசா வந்தேவாஸி சாண்டால புக்கஸா: ॥

"சண்டாள, ப்லவ, மாதங்க, திவாகீர்த்தி, ஜநங்கம:, நிஷாத, ச்வபச, அந்தாவாஸீ, சாண்டாள, புல்கஸ.

## (கரு) தமிழிலுஞ் சண்டாளன் என்னும் பதம் புலையன் முதலியோரைக் குறிக்குமெனல்

"குணுங்கர் வங்கர் கவுண்டர் கருகதரிழிஞர் கொலைஞர் புலைஞ ரென்றுங் கிசையும் பெயர் சண்டாளர்க்கெய்தும்." திவாகரம். "குணுங்கர் புலைஞர்கீழோ ரிழிஞர் அணங்கு சண்டாளர்க்கபிதா னம்மே." பிங்கல நிகண்டு.

"கொலைஞரே கனைஞர் வங்கர்
குணுங்கர் மாதங்கரோடு
புலைஞரே யிழிஞ ரேழ்பேர் பொருந்து
சண்டாளர்நாமம்." சூடாமணிநிகண்டு
குணுங்கர் தோற் கருவிமாக்கள் குயிலு
வரிழிஞர் முப்பேர் " சூடாமணி.

புலைஞர் - ஈனர், சண்டாளர், பறையர். (அகராதி)
புலைச்சேரி - பறைச்சேரி, புலைப்பாடி. (அகராதி)

பறையன்-பறை யடிப்போன், பறைசெய்வோன். அதாவது மேளமடிப்போன், மேளஞ் செய்வோன். இதை விளக்கும் பொருட்டே, வைஜயந்தி நிகண்டுங் கீழ்வருமாறு கூறுகின்றது:—
அணாமொஙஷூஸீகஷெஷாவஷீ—உகணொஉஜூஂஹஸொக ।

"சண்டாளன் இடுப்பிற் கச்சை கட்டிக்கொண்டு அல்லது கழுத்திற் தோலைக் கட்டிக்கொண்டு தப்பட்டை யடிப்பவன். அவன் மலத்தை யெடுத்துச் சுத்தி செய்வான். வருஜஹாநாக்ஷாத—அணாமூா— தாவஸாயிநா ॥ சண்டாளன் அந்தாவசாயி யெனும் இவர்கள் வனத்தையுஞ் சுடுகாட்டையுங் காப்பார்கள். இவ்வாறு சண்டாள ருக்குள் பல பிரிவுகளைக் காட்டல் காண்க.

## 14 கண்ணன் உபதேசத்திற்குங் காந்தியின் கூற்றுக்குங் கடலுக்குங் கால்வாய்க்கும் போல் பெரும்பேதமெனல்

(1) கொடியோனாகிய துரியோதனன்கூட துரோணாசாரியரி டஞ்சென்று, "ஆசாரியரே உமதுபுத்திசாலி சிஷ்யனான த்ஷ்டத்யும் னனால் வியூகஞ் செய்யப்பட்டுள்ள பாண்டவ சேனையைப்பாரும்." (1-3) எனக்கூறியதாற் கீதையின் ஆரம்பத்திலேயே குருசிஷ்யக் கிரம மேற்பட்டு உயர்வுதாழ்வு என்கிறதார தம்மியம் நிலைத்தது.

(2) துருபதன்முதல் உபபாண்டவர்கள் ஈறாகப்பலபேர் மஹாரதர்கள் என்று (1-4,5)ல் கூறப்பட்டுளது. மஹாரதன் என்றால் தனியாகப் பதினாயிரம் வில்லாளிகளோடு யுத்தஞ்செய்பவனாகையால் அதிலே யே இவர்க்குச் சந்தேகம் பிறந்து கீதையுங் கலப்புநூல் என்றற்குப் பின்னிடையார் போலும் (3) துரோணரும், கிருபரும், அசுவத் தாமரும் பிராமணர்களா யிருந்தும் தருமயுத்தஞ் செய்யத்தலைப் பட்டார்களென்பது (1-8)ல் பெறப்பட்டது. யுத்தஞ் செய்தவர்க ளெல்லாம் க்ஷத்திரியர்களாகவே காணப்படுதலின் வைசிய சூத்தி ரர்களுடைய பிரஸ்தாபமே காணேம். சண்டாளர்களை எப்படிச் சேர்ப்பர்! ஏகலைவன் என்கிறவேடன் குரு விசுவாசத்தால் வில் வித்தையிற் சமர்த்தனாகியுங் குரு காணிக்கையாக வலக்கைச்சுட்டு விரல்வாங்கப்பட்டது யோசிக்கத்தக்கது.

(4) "நான் கெட்ட சகுனங்களையுங் காண்கிறேன்" என (1,31) ல் அர்ச்சுனவாக்கியம் பெறப்பட்டது. சகுனம்பார்ப்பதில்இவருக்கு நம்பிக்கையுண்டோ இல்லையோ! (5) அர்ச்சுனன் யுத்தகளத்திற் பந்துக்களைப் பார்த்துப் பரிதபித்துச் சிவத்தினுட் கிடையறியாம லே ஜீவசுபாவத்தால் துக்கிக்கும் விஷயம் (1-28)ம் சுலோகமுதல், (1-45) வரையிற் பெறப்படுகிறது. "என்னைக் கொல்வார்களானால் மிகவும் நலம் (1,46) என்று கூறி வில்லை யெறிந்துவிட்டு ரதத்திற் சாய்ந்தான்." என்றதாற் காந்தியும் அதைப்பின்பற்றுகிறார் போலும். ஆனாற் சிவோகம்பாவனையுற்ற கண்ணனே புன்சிரிப் புற்று அர்ச்சுனனைத்தேற்றி "நீ கொண்டது போலி அஹிம்சா தருமம், மேலுக்கு ஞானம் போல் தோன்றும் வார்த்தைகளைப் பேசுகின்றனை, ஆழ்ந்து பார்த்தாயில்லை, ஆன்மாக்களெல்லாம் அநா தியே. ஈசுவரனும் அநாதியே. பாசமும் அனாதியே. ஒரேதேகத்திற் குழந்தைப்பருவமும், யௌவநமும், கிழத்தனமும் எவ்வாறோ அவ்வாறே இத்தேகத்தை ஆன்மாவிட்டாற் புதுச்சட்டைமாட்டிக் கொள்வதுபோல் மற்றோர் தேகத்தை யடைகிறான் ஆகையினால் ஆன்மா இறப்பதேயில்லை, இறந்தானென்பதுபசாரம். ஒவ்வொரு வனும் அவனவன் ஜாதிதருமத்தைச் செய்வதே உத்தமம். க்ஷத்திரி யன் அவசியம் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தம் யுத்தஞ் செய்ய வேண்டியது வேதத்தில் விதித்த தருமம் (2-31,32) நீ இந் தத் தர்ம யுத்தஞ் செய்யா விடில் பாவத்தையடைவாய் (2,33) யுத் தஞ் செய்தால் பாவமடையாய் (2-38) ஞானியாகிய ஜனகரும் கர் மத்தைச் செய்து சித்த சுத்தியடைந்தார் (3,20) சர்வலோக நாயக னாகிய எனக்குச் செய்ய வேண்டிய தொன்று மின்றேனும் உலக க்ஷேமத்திற்காக யானுங் கர்மஞ்செய்கின்றேன் (3,22) ஏனெ னின்மேலானவன்எதைச் செய்கின்றானோ அதையேஉலகமுஞ்செய் கின்றது (3,21) நீகொல்லப்பட்டாலோ ஸ்வர்க்கத்தை யடைவாய்

ஜெயித்தால் உலகத்தை யாள்வாய்” ஆகையினால் யுத்தஞ்செய் எனத் தேற்றி விசுவரூபத்தைக் காட்டி அதில் முன்னமேயே எதிரிகளெல்லாம் வந்து வீழ்ந்திறப்பதை யுங்காட்டி 11-29,30) “பூமியில் அவதரித்து மனிதர்களை சம்ஹாரஞ் செய்து பூபாரத்தை நீக்கும் காலன்யான் ”, (11-32) “என்னாலேயே முன்னமே எல்லோருங் கொல்லப்பட்டுப்போனார்கள் நீ (கோபுரந்தாங்கிபோற்) காரணனாக மாத்திரமிரு” (11-33) எனப்போதித்து யுத்தஞ்செய்யச் செய்து (18) அக்குரோணி சேனைகளையும் மாள்விக்கின்றார். எனவேசாதுக்களைக் கோல்வதுதான் ஹிம்சையாகுமே யன்றிப்போர்க்களத்தில் யுத்தஞ் செய்வது ஹிம்சையாகாதேன்பதூஉம் அது,களைபிடுங்குவது போன்றும் கோயாகம் போன்றும் வைத்தியன் சத்திரமிட்டுக்குழவியின் தலையிலுள்ள கட்டியை யறுப்பது போன்றும் பேருபகாரமா மென்பதூஉம் பெறப்பட்டது. எதையுஞ் செய்கை வகையானன்றிக்கருத்து வகையாலறிய வேண்டும். இல்லாவிடிற் பிரதிதினமுங் கடவுள் கணக்கற்ற பேரை மாய்த்தலும் ஹிம்சையாக முடியும். காந்தியின் கருத்துப்பிரகாரங் கொண்டாற் கண்ணனையும் இராமனையுங் கூட எத்தனையோ கோடி நரகத்தில் வீழ்த்த வேண்டிவரும். பளாபளா! காத்தற் கடவுளுக்கே தாம்பூலம் பிடிக்கின்றார்கண்டீரிவர் ! இன்னும்,

குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலதர்மா: ஸநாதநா: ।
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமதர்மோ(அ)பிபவத்யுத ॥ க-௪0

ஒருகுலம் நாசமடைந்தால் அநாதியாயிருக்கிற குலதர்மங்கள் முழுதும் நாசமடையும், ஆசாரங்கள் கெட்டால் குலமுழுவதும் அதர்மங்கள் வியாபிக்கும்;

அதர்மாபிபவாத்க்ருஷ்ண ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய: ।
ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர: ॥ க-௪க

ஹே கிருஷ்ண அதர்மம்மேலிட்டாற் குலஸ்திரீகள் கெடுவார்கள்கற்பழிந்து விடுவார்கள். பெண்கள் கெட்டால் ஜாதிக்கலப்புண்டாகும்,

ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்ய ச ।
பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோதகக்ரியா: ॥ க-௪உ

“ஜாதிக் கலப்பானது குலநாசஞ் செய்தவர்களுக்கும் குலத்திற்கும் நரகத்தையே யுண்டுபண்ணும், இது வன்றியும் இக்குல

நாசத்தை யடைந்தவர்களுடைய பிதுருக்கள் பிண்டோதகத்தை யிழப்பதால் நரகத்தில் விழுவார்கள்.

𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥ ௧-௪௩

குலத்தைக் கெடுத்தவர்களுடைய ஜாதிக்கலப்பைச் செய்த இந்தப் பாவங்களால் அநாதியாயுள்ள வர்ணாச்ரமதர்மங்களுங் குலாசார தர்மங்களும் அழிந்துபோய் விடும்," என்கிற கீதாவாக்கியங்களாற் குலதர்மத்தை விடுவதாலும், வியபிசாரத்தாலும் ஜாதிக் கலப்புண்டாகிப்பல வித கீழ்ச்சாதிகளேற்பட்டு நரகத்திற் காளாகின்றனர் எனப் பெறப்படுவதே யாகக் கலப்புச்சாதி கிடையாதென்பதும்ஸ்திரீகள் கர்புத்தன்மைகெட்டுப்புனர்விவாகஞ் செய்து வியபிசார தோஷமடைந்து நரகத்திற்காளாகச் செய்வதும் ஹிம்சையோ அஹிம்சையோ, இது தான் கீதையோ! மேற்கூறிய அர்ச்சுன வாக்கியமிருக்கக் கண்ணனும்,

𑌉𑌤𑍍𑌸𑍀𑌦𑍇𑌯𑍁𑌰𑌿𑌮𑍇 𑌲𑍋𑌕𑌾 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌚𑍇𑌦𑌹𑌮𑍍 ।
𑌸𑌂𑌕𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍁𑌪𑌹𑌨𑍍𑌯𑌾𑌮𑌿𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 ॥ ௩-௨௪

"நான் கர்மத்தைச் செய்யாமற்போனால் இந்த ஜனங்களும் (என்னைப்பார்த்துக்) கெட்டுப் போவார்கள் (அதனால்) ஜாதிக்கலப்புக்குங் கர்த்தா ஆவேன் இந்த ஜனங்களைக் கெடுத்தவனாவேன்," என்பதுங்காண்க இன்னும்,

𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃 ।
𑌤𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑌵𑍍𑌯𑌯𑌮𑍍 ॥ ௪-௧௩

"ப்ரஹ்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரரென்கிற நான்கு வர்ணங்களும் என்னாலே குணங்கள் கர்மங்களாகிய பலவித பாகத்தினால் உண்டுபண்ணப்பட்டன அந்தக்குணகர்ம பாகமாகிய சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய நான் கர்த்தாவல்லவென்றும் நாசமற்றவனென்றும் அறி" என்கிறார், எனவே ஆன்மாக்களின்கர்மத்தின்பேதத்தினாலேயேநான்குஜாதிவித்தியாசமாகச்சிருஷ்டித்தேன், என்னுடைய இஷ்டம் போல் அக்கிரமமாகக் குரங்குசேஷ்டை செய்யமாட்டேன் என்பதும்ஆதிசிருஷ்டியில் நான்கு ஜாதிகளேயென்றும்ஆனால் ஆன்மக்களுக்கநாதியான ஆணவமலத்தினாலும் அதனாலுண்டாகிய காமக் கொழுப்பாலும் பின்னர் பலவிதகலப்புச்சாதி உண்டாகி விட்டதென்றும் பெறப்படுதல்காண்க. இதைப்பின் வருஞ்சுலோகங்களால் ஸ்தாபிக்கின்றார்:—

மாம் ஹி பார்த்த வ்யபாஶ்ரித்ய யே(அ)பி ஸ்யு: பாபயோநய: ।
ஸ்த்ரியோ வைஶ்யாஸ்ததா ஶூத்ராஸ்தே(அ)பி யாந்தி பராம் கதிம் ॥

ஹே அர்ச்சுனா! பெண்களும் வைசியர்களும் சூத்திரர்களும் அப்படியேஎவர்கள்நீசஜன்மங்களுடையவர்களாவரோஅவர்களுங் கூட என்னை விசேஷமாகச் சேவித்து உத்தமமான பதவியை நிச்சயமாயடைகிறார்கள். கூ-ஙஉ

கிம் புநர்ப்ராஹ்மணா: புண்யா பக்தா ராஜர்ஷயஸ்ததா ।
அநித்யமஸுகம் லோகமிமம் ப்ராப்ய பஜஸ்வ மாம் ॥ கூ-ஙங

"அதற்கே யப்படியானால் புண்யவான்களாயும் பகவத் பக்தியுடையவர்களாயுமுள்ள ப்ராஹ்மணர்களும் அப்படியே இராஜரிஷிகளும் தியானாப்யாசத்தால் உத்தம கதியை யடைவார்களென்று சொல்லவும் வேண்டுமோ? அநித்யமானதும் சுகமற்றதுமான இந்த லோகத்தில் புருஷார்த்த சாதனமாகிய இம்மானிட ஜன்மத்தை (அத்ருஷ்ட வசத்தால்) நீ அடைந்ததால் என்னைச் சேவிப்பாயாக." இவ்விரண்டு சுலோகங்களால் நான்கு ஜாதிகளும் அவற்றிற்கு வேறாகப் பாபயோனியிலுதித்த ஐந்தாம் ஜாதியும் நன்கு பெறப்பட்டமை காண்க. பாபயோனியென்பது ஸ்ம்ருதியால் விளக்கப்படுகின்றதாதலின் சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றி ஈண்டு விரிக்காதொழிந்தாரென்க.

புருஷ: ப்ரக்ருதிஸ்தோ ஹி புங்க்தே ப்ரக்ருதிஜாந் குணாந் ।
காரணம் குணஸங்கோ(அ)ஸ்ய ஸதஸத்யோநிஜந்மஸு ॥ கங-உஉ

பிரகிருதியைத் தானாக எண்ணியிருக்கும் ஜீவன் தேகத்தினாலுண்டாகிற குணங்களை அனுபவிக்கிறானல்லவா? (நான், எனதென்னும் அகங்கார மமகாரங்களாலுண்டாகும்) சுக துக்க முதலிய விஷயாசக்தி இந்தச் சீவனுக்குப்புண்ய பாபங்களான யோனிகளிற் பிறப்பை யடையக் காரணமாயிருக்கிறது," என உயர்குல இழிகுலப் பிறவிப் பேதத்திற்குக் காரணத்தையுங் காட்டிவிட்டார். இன்னும் பேதமில்லையென்று வாய் திறக்கலாமா?

ரஜஸி ப்ரலயம் கத்வா கர்மஸங்கிஷு ஜாயதே ।
ததா ப்ரலீநஸ்தமஸி மூடயோநிஷு ஜாயதே ॥ கச-கரு

இராஜச குண மேலிட்டகாலத்து மரணமடைபவன் காம்ய கர்மத்திற் பற்றுள்ளவர்களிடம் ஜனிக்கிறான். அப்படியே தாமசகுணம் மேலிட்டகாலத்து மரணமடைந்தவன் மூடர்களான மூர்க்கர்களுடைய கர்ப்பங்களிற் பிறக்கிறான் என்றார். ஆனால் (14 - 14)ம்

கலோகத்தினுற் சத்வகுண மேலிட்டகாலத்து மரணமடைபவன் உத்தம ஞானிகளுடைய பரிசுத்தமான உலகங்களை யடைகிருன் என்ருர். இம்மூன்று சுலோகங்களாலும் ஜாதி பேதங்களையும் உயர்வு தாழ்வுகளையும் நன்கு காட்டுகின்ருர். வேலும் இம்மூன்று சுலோகங்களால் மரண காலத்தில் அருகே யிருப்பவர்கள் மரிப்பவனுக்குச் சத்வகுணங் கிஞ்சித்தும் அழியாதபடி கடவுளின்மேற் பலவித ஸ்தோத்திரங்களைச் சொல்லிச் செவியிற் பஞ்சாட்சரத்தையோ அஷ்டாட்சரத்தையோ ஓதல் வேண்டுமென்றும் அழக்கூடாதென்றும், "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கென் கடவேன்" என்றபடிமரணகாலத்தில்எமவாதைமற்றெல்லாவற்றினுங் கொடிதாயிருக்குமாதலின் ஓர் தொந்தரவுஞ் செய்யக் கூடாதென்றும் அருகிலிருப்பவர்கள் அசுத்தர்களாயுங் கொடும் பாவிகளாயுமிருந்தால் அவர்கள் மேற்பற்று சென்ருலும் ஈனப் பிறவிகளை யடைவார்களென்றும் இன்னும் ஈனர்களுடைய பலநாட் சகவாசத்தால் அவர்களுடைய உருவமே மரண காலத்துந் தோன்றி அடுத்தாற்போல் நரகமனுபவித்துப் பிறகு அந்த இழிந்த ஜென்மத்தையு மடைவரென்றது சத்தியமென்றும் அது ஜட பரதர் சரிதையால் நன்கு விளங்குமென்றும் ஆகவே தீண்டாமை அவசியமென்றும் ஸ்தாபித்தாராயிற்று. புழுவானது ஒன்றைப்பற்றிக் கொண்டு மற்றொன்றைவிடுஞ் சம்பிரதாயமும் ஈண்டுக் கவனிக்கற்பாலது. இந்த நுட்பங்களெல்லாம் இதர மதங்களில் இல்லாமையும் அறியத்தக்கது. மேலும் ஐரோப்பியர்களோ அவர்களது சர்ச்சு (Church) களிலேயே பிணத்தை வெகுநேரம் வைக்கின்றனர். பிணத்தீட்டு அவர்களுக்கில்லை. குளிப்பதுமில்லை. குளிக்காமலே பூட்ஸ்காலோடு சர்ச்சுக்குப் போய் விடுகின்றனர். குளிர் என் செய்வது பாவம்! சீனர், பர்மியர் முதலியோருக்குந் தீட்டில்லை. மகம்மதியர்களோ பிணத்தை ஒருவர் மாற்றி யொருவர் தூக்கிச் செல்கின்றனர் டிராம் வண்டியிலும் அருகிலும் சர்வஞ் செகநாதமாய் விடுகிறது. இதற்குக் கேள்வி முறையில்லை. சட்டமுங் காணும், ஐரோப்பிய ஸ்திரீகள் முதலாயினர் உருதுகாலத்தில் வீட்டுக்குத் தூரமாயிருப்பதில்லை. தீட்டுமில்லை. குளிக்காமலே ஏதோ பஞ்சைவைத்துக்கொண்டு கவுனை (gown) மாட்டிக்கொண்டு தொப்பியைக் கவிழ்த்துக்கொண்டு, பாவங் கஷ்டத்தோடு வேலைக்கேகி வயிற்றுப் பிழைப்புக்காகப் பாடுபடுகின்றனர். நம்முடைய பெண்களும் அந்த அனுசாரத்தைப் பின்பற்றி அவதிக்குள்ளாகி புருஷன் சம்பாத்தியத்திற் சுகமாய்ச் சாப்பிட்டு நல் விஷயங்களை ஆராய்வதை விட்டுத் தாங்களுங் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துப் புருஷனை உட்கார வைத்து அவனுக்குச் சோறு போடாவிடில் உதை குத்து வாங்கப் பார்க்கின்றனர்போலும். வேலை யகப்படாவிடிற் சினிமாவில்

நாய்போல் இழுத்துத் திரிந்து மானத்தைச் சற்றுக் காட்டி வயிறு வளர்க்கப் பார்க்கின்றனர்போலும்! ஏனோ இந்தக் கஷ்டம்! விநாச காலே விபரீத புத்தி' என்பது பொய்க்குமா! ஆனால் நம்முடைய ஆசாரம் எப்படிப்பட்டதென்றால் எடுத்ததற்கெல்லாந் தீட்டு தான். பிணத்தைத் தொட்டால் தீட்டு, (தொத்து வியாதி யணுகாமலிருக் கும்பொருட்டு.) சுடுகாடு சென்றால் தீட்டு, (பிணப்புகைமுகத்திற் படாமலும் பிணம் வேகும் நாற்றம் மூக்கிலேறி நோயணுகாமலிருக் கும்பொருட்டும்.) நம்முடைய கோயில்களிலோ பிணத்தை வைக்க லாகாது, பிணம்போனாலே கதவை யடைத்துவிடுவர். நங்கோயி னுள் ஸ்நானஞ் செய்யாமலும் வண்ணான் சலவை யுடுத்திக்கொண் டுஞ் சட்டை யிட்டுக்கொண்டுஞ் செல்லலாகாது. அதுவுங் குளிர் காலமாகிய மார்கழி மாதத்தில் அதிகாலையில் உஷத் காலத்தில் ஸ்நா னஞ் செய்து கடவுட்பூசை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் கொழுப்புச் சற்று நீங்கும். நம் ஸ்திரீகள் தீட்டாய்விட்டால் நாலாம் நாள் ஐந்தாம் நாள்தான் ஸ்நானஞ் செய்துவிட்டுப் புருஷன் முகத் திலோ சூரியனையோ தரிசித்தல் வேண்டும். வேறு முகத்தில் விழித் தாற் கற்புத்தன்மை கெடும். பிறக்கும் பிள்ளையும் வேறு உருவத் தையுங் குணத்தையு மடையும். ஸ்நானஞ் செய்த பிறகு பால் நெய் முதலிய சாத்துவிகப் பொருள்களை யுண்டாற் பிறக்கும் பிள் ளைக்குஞ் சத்துவ குணமேலிடும். விதையொன்று போட்டாற் சுரை யொன்று முளைக்குமோ? நாலாம் நாள் உள்ளே வரலாமென்றது சூதகம் நீங்கிவிடும் அல்லது தணிந்துவிடும் என்பதன்பொருட்டே. சூதகமிருக்கும்போதே மூன்று நாளைக்குள் குளித்துவிட்டு உட் சென்றாற் புருஷனுக்குக் கெடுமதி கண்ணுங்குத் தோன்றாமற் கட் டாயப்படுத்திப் புணர்ந்து ஜன்னி பிறக்கிறது. ஒருவேளை தப்பித் துக்கொண்டாலும சீக்கிரமாக ஆணுக்கோ பெண்ணுக்கோ பல ரோகங்களுண்டாகிப் பல்லுஞ் சீக்கிரம் விழுந்துபோகிறது. பிறக்கும் பிள்ளையும் அங்கஹீனமாய்ப் பிறக்கும். பகலென் றும் இரவென்றும் இல்லாமற் கண்டபோது நாய்கள்போல் இழுத்துத் திரிந்தால் வைத்தியசாலைகள் பெருகக் கேட்பானேன்! ஐரோப்பியர்களுக்கு அதி சீக்கிரத்திற் பல்நோ யேற்படுகிறதும் பல் விழுகிறதும் பல் கட்டுகிறதும் பல் வைத்தியசாலைகள் எங்கே பார்த் தாலும் ஏற்படுகிறதும் பெரும்பாலும் முற்கூறிய காரணத்தினாலே யாம். பெருந் தீனியும் நெடுந் துயிலும் பெருங்குடியு மேற்கொண் டாற் பகலென்று பார்க்குமோ இரவென்று பார்க்குமோ இரண் டாம் நாளென்றடங்குமோ! இதனாற்றான் விதவா ஸ்திரீகள் ஒரு வேளை சுத்த போஜனஞ் செய்து பாயிலுறங்காமற் றரையிற் படுத் துப் பகவானையே நினைந்து பகவானுடைய புகழையே கேட்டுப் பக வத் கைங்கிரியத்திலேயே ஈடுபட வேண்டுமென்று வைத்தது. அது

வன்றி மூன்று வேளை நான்கு வேளை முட்டையை விழுங்கி மித மிஞ்சிய தீனி தின்றால் மூன்று புருஷனையுந் தேடும் நான்கு புருஷனை யுந் தேடும். விதவா விவாகத்தையும் விரும்பும். அதோடு விதவை, சினிமா, கூத்து முதலாயின பார்த்தாற் காமம் பெருகக் கேட்பா னேன்! மொட்டை யடித்துக்கொள்ளச் சொன்னது அழகு நீங்கினால் ஆண்கள் சட்டை பண்ணார்கள் தொந்தரவு செய்யார்களென்பதன் பொருட்டேயாம். சூதகமற்ற பிறகு கருதரிக்குங் காலமாகிய ஐந்தா நாள் முதற் பதினாறு நாள் வரையில் உள்ள பன்னிரண்டு நாட்களுள் இரட்டித்த நாட்களிற் புணர்ந்தால் ஆண் குழந்தையும், ஒற்றித்த நாட்களிற் புணர்ந்தாற் பெண் குழந்தையும் பெறலாமென் பது நிச்சயம். இந்துக்களின் பூர்வீக சாஸ்திர சூட்சுமங்களை யறி யாமலே உலகம் முன்னேற்றமடையாமற் பின்னிறங்கி நாகரீகமற் றுப் போகிறது, ஐயோ என்ன விபரீதம்! மேலும் ஆண்களும் பெண்களுந் தீண்டாமல் ஒதுங்கிப் போகவேண்டுமென்பது காமக் கோதிப்புண்டாகாமலிருக்கும்பொருட்டேயாம். அதுவன்றி அர சாங்க கலாசாலை (Presidency College) முதலிய விடங்களில் வய துற்ற ஆண்களும் பெண்களுங்கூடிப் படித்தாற் காமம் பெருகுமோ கல்வி பெருகுமோ' விரிக்கிற் பெருகும். பின்னுற் பார்ப்போம். மேலும் நங்கோயிலுக்குப் போகும்போது செருப்பு முதலியன கூடாதென்பது வழியிலுள்ள எச்சில் மல முதலியவற்றோடு உட் புகாமலிருக்கும்பொருட்டேயாம். கோயிற் குளத்திற் குளித்துட் புக வேண்டுமென்றது வழியிற் படிந்த புழுதி நீங்கும்பொருட்டும் வேர்வை நாற்றம் நீங்கும்பொருட்டும் மண்டை குளிர்ச்சியடைந்து சத்வகுண மேலிட்டுப் பரம்பொருளை ஒருமை மனதுடன் தியா னிக்கும் பொருட்டேயாம். ஆகவே குளத்திலும் கோயிலிலும் மாடு தின்னும் மற்ற மதஸ்தர்கள் நுழையக் கூடாதென்றதுபோல் புலையரும் நுழையக்கூடாதென்று விதி முன்னேயே ஏராளமாய்க் காட்டப்பட்டது. அப்படிச் செய்வதால் வேற்று மதத்தினராகிவிடு கின்றனரால் அப்படி அவர்களுக்குள் உறுதி வாய்ந்தவர்கள் செய் யார்கள். இந்து மதத்தைவிட்டு இதர மதத்தினுழைந்தால் மோட் சத்திற்கு வெகுதூரம் போய்விடுவர். விரிக்கிற் பெருகும். அப் படிப் போய்விட்டாலும் நமக்கோர் பாதகமில்லை. அவர்களுக்கே கெடுதி. இந்துக்கள் ஜனத்தொகை குறைந்து பலங் குறுகிவிடு கிறதே யென்றாற் சிறிய தீவிலுள்ள ஆங்கிலேயர் பெருந்தொகை யினரை யடக்கி யாள்வதும் காந்தி ஒருவரே ஏமாந்த பலரைத் தன் வசப்படுத்துவதுங் கண்டமைக. ஆனால் அறுபான்மும்மை நாயன் மார் உற்சவம் கருடோற்சவம் முதலியவற்றில் ஜனங்கள் குளித்து விட்டுப் பய பக்தியோடு நடந்து செல்லாமல் டிராம், பஸ் முதலிய வற்றிலேறித் தோட்டி முதற் றெண்டைமான் வரையிற் றீண்டி

அசுசியடைவது அநாகரீகமன்றோ? நாட்டுப்புறங்களில் டிராம் முத லியதுகள் இல்லாததால் பத்து மைலானாலும் உற்சவ முதலியவற் றிற்கு நடந்தே செல்வர். மதமுமடங்கும் பக்தியும் பெருகும் கண்டதைத் வழியில் வாங்கித் தின்றுகொண்டு செல்லலுங் கூடாது, அதுவும் வயிற்று வலி முதலியவற்றைப் பெருக்குமாதலின்.

நிற்க, இனிக் கீதையை மறுபடியுஞ் சற்றுப் பின் பற்று வாம் :—

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 ।
𑌶𑍁𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥ ரு-கஅ

(இ-ள்) ஞான பண்டிதர்கள் கல்வியும் வணக்கமுமுள்ள பிராஹ்மணனிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் ச்வபாகேச (சண்டாள)னிடத்திலும் ஒரேவித மாகப் பிரகாசிக்கும் பிரம்மத்தைப் பார்க்கின்றனர்" என்பதே. 'ச்வபச' என்னும் பதம் சண்டாளனுடைய பரியாயப் பெயரென் பதை முன்னேயே காட்டப்பட்ட அமர நிகண்டின் வாக்கியத்தா லறிக. ஆனால் கீதைக்கு முன்னூலாய்ச் சிவபெருமானால் இராம னுக்குபதேசிக்கப்பட்ட சிவ கீதையிற் சண்டாளன் என்கிற பதத் தைப் பலவிடத்தில் நேரே காணலாம். விரிவஞ்சி விடுத்தாம். இனி இச்சுலோகத்தில் வித்யா விநய சம்பன்னம்,' 'பிராம்மணம்' 'காம்' 'ஹஸ்திநம்,' 'ஸ்வாநம்' 'ச்வபாகம்' என வடமொழி இரண்டாம் வேற்றுமையைப் பிரயோகிக்காது, பலர் எதிர்காலத்தில் அநர்த்தம் பண்ணுவார்களென்ற தீர்க்க தரிசனத்தையுடைய கண்ணன் 'சம் பன்னே,' 'ப்ராஹ்மணே', 'ஹஸ்திநி', 'ஶுநி', 'ச்வபாகேச', என ஏழாம் வேற்றுமையிற் பிரயோகித்தமையாற் சித்தாந்த சைவத் திற்குச் சற்றும் முரணுறாது முற்றும் அரணுற்றமை காண்க. என்னை? அவர் இரண்டாம் வேற்றுமையிற் பிரயோகித்திருந்தால் பிராஹ்மணனையும் பசுவையும் யானையும் நாயையும் சண்டாளனை யும் பண்டிதர்கள் சமமாகப் பார்க்கிறார்கள் என்ற பொருள் நிலை யுறும். இல்லையே யென் செய்யலாம்! மேலும் இவ்வருமையான சுலோகத்திற் சாத்துவித குணமுற்ற கல்வியும் வணக்கமுடைய பிராஹ்மணனையும், பசுவையும், இராசத குணமுற்ற யானையையும் தாமத குணமுற்ற நாயையுஞ் சண்டாளனையும் பாகுபாடு செய்து பிரயோகித்தமையாற் பெரிதும் பேதம் பெறப்பட்டமை காண்க. உயர்வு சிறப்பும்மைகளாலும் பேதங் காண்க. அவர் கருத் துப் பிரகாரம் பிராஹ்மணன், பசு, யானை, நாய், சண்டா ளன் இவர்களைச் சமானமாகக் கொண்டாற் பிராஹ்மணனும் சண்டாளனுஞ் சமம். பசுவும் பன்றியுஞ் சமம். நாயும் நாயை யடிப்போனுஞ் சமம். எல்லாம் ஒன்றே என்றன்றோ கொள்ள

வேண்டி வரும். நாயையும் நாயை யடிப்போனையும் ஒன்றென்று கூறினால் நாயடிப்போன் நாயை யடிக்காமல் எல்லாம் ஒன்று என்றவனையே யடித்துவிடுவான். ஆகவே இவ்வாறு கூறி மரபழித்த லழகோ! "இல்லை எனக்கு ஏழாம் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை யென்ற வியாகரண பாகுபாடு வேண்டாம். உம்மைகளும் வேண்டாம் நான் பண்டிதனல்ல. எல்லாஞ் சமமாகவே கொள்வேன். இலக்கணம் அதாவது இலட்சண பேதம் வேண்டியதில்லை" என்று அவர் பிடிவாதஞ்செய்தால் அது அவருக்கே அவலட்சணமாக முடியும். அப்போது சுயராஜ்யமே பகற்கனவாய் முடியும். பேதம் வேண்டாதவர் சுயராஜ்யக் கூச்சலிடுவானேன்? வெள்ளையரை மெதுவாக ஓட்டிவிட்டு நாமே நாடாள்வோம் என்று விரைதலேன்? இராமனுண்டாலென்ன இலக்குமணனுண்டாலென்ன என்றன்றோ சகோதரபாவம் பூண்போர் மௌனஞ் சாதித்தல் வேண்டும்? பேதமற்றவர் வீண் கலகஞ் செய்வானேன்? பேச்சளவிற் சகோதர பாவமும் செய்கையிற் சத்துருபாவமா? நன்றா யிருக்கிறது! இதனன்றோ உலக சகோதரத்துவம் (Universal Brotherhood) என்பதும் ஊரை யேமாற்றிப் பிடுங்கித் தின்பதேயாம். அறிவாளிகள் மயங்காரென்க. இன்னோர் விஷயம்:—எல்லாம் ஒன்று என்றால் 'மகாத்மா என்கிற பெயரும் எடுபட்டுப் போம். குடியரசிற் பறையனென்றும் பார்ப்பானென்றும் பேதம் பார்க்கக் கூடாதென்றால் ஒருவருக்கு மாத்திரம் மஹாத்மா என்கிற வீண் பட்டமேன்? அவர் மாத்திரம் மஹாத்மாவானால் மற்றவரெல்லாம் அற்பாத்மாக்கள் என்ற தூஷணைக்கன்றோ இடமாகிறது. பேதமில்லை யென்றால் எல்லோரும் மகாத்மாக்களே. ஒருவர் மாத்திரம் அந்தப் பேரைச் சுமக்கக் கூடாது. இறக்கிவிட வேண்டும். இதனால் அவர் விட்டகடா அவரையே திருப்பிக்கொண்டது காண்க. ஆகவே சுயராஜ்யமும் மகாத்மா பட்டமும் வேண்டுமா? இன்றேற்பரராஜ்யமும் அற்பாத்மா என்கிற பட்டமும் வேண்டுமா? எது ஆசை கூறுமின். எதுவும் விருப்பமில்லையென்றாற் பேசாதிருமின் வீண் பிரசாரம் எற்றிற்கு? மேலும், சுயராஜ்யங் கிடைத்தாற்கூட காந்தியே சர்வாதிகாரியாயிருப்பர். பிராமணர் முதலாயினரை "மலம் வாருங்கள் தோற்பதனிடுங்கள், வீதி குப்பையைக்கூட்டுங்கள். சுடுகாட்டுக்காவலிருங்கள். பிணந் தூக்குங்கள், பிணத்தைச் சுடுங்கள். வெட்டியான் வேலையைச் செய்யுங்கள். வேற்றுமை வேண்டாம்" என்று எந்த அரசாங்கமும் இதுகாறுஞ் செய்யத்துணியாத செய்கையை இவர் செய்து துன்புறுத்தத்துணிவர். ஆட்சேபமில்லை. அப்போது, இப்போதே இவர்வாலைப்பின்பற்றும் பலகுட்டிச்சர்வாதிகாரிகள் மாகாணந்தோறும் ஏற்பட்டு அவர்களின் கீழ் அளவற்ற குஞ்சதிகார், களும் நிருவப்பட்டு ஜனங்களைப் படாதபாடு படுத்துவர் கண்டீரி

இது தானு அஹிம்சா தருமம்! அந்த உத்தியோகற்தித்காசைப்படு வோர்தான் "உலகவிடுதலை உலகவிடுதலை" என்று கூச்சலிட்டு வெளி வேஷம் பகல்வேஷம் போட்டாடுகின்றதை வேடிக்கை பாருங்க ளன்பர்களே! அஹிம்சா தருமத்தைப்பின்பற்றுவோர் உள்ளதைக் கூறும் எம்மீதுங்கோபங்கொள்ளலாகாது. அப்போது அஹிம்சா தருமம் பறந்து விடும். மலம்வாரல் முதலிய பாவத்தொழில்களைக் கூசாமற் செய்ய இஷ்டப்பட்டுச் சீவிக்கப் பார்க்கும் ஜாதியினரை அத்தொழிலிற் பிரயோகித்தல் ஹிம்சையா, அன்றிச் சற்றேனும் அத்தொழில்களைச் செய்ய ஓர் போது மனமொப்பாத பிராமணர் முதலாயினரை அத்தொழிலைச் செய்யக்கட்டாயப்படுத்தல் ஹிம் சையா? பாருங்கட்டாயப்படுத்தவில்லையே யென்றாற் சுயராஜ்யங் கையிலில்லை. வந்துவிட்டாற் காட்டாயமேற்பட்டுவிடும். இல்லாவிடிற் சுட்டே விடுவார்கள். இப்போதே சாஸ்திரம் வேண்டாம் என்போர் அப்போது வேதமுதலிய சர்வசாஸ்திரங்களையும் எரித்துவிட்டு முன் னொருவர் கூறியவாறே கோயில்களை யெல்லாம் ருஷ்யாவிற் செய் ததுபோல் வெடிமருந்து (Dynamite) வைத்துச்சரிமட்டமாக்கி விடப்பின்னிடார் கண்டீர். மேலும் வைதீகர்களெல்லாம் வாயிலடித் துக்கொண்டு மாண்டு போகும்படி அநேக கொடுமைகளையுஞ் செய்வர். இப்போது கோயில் கோயில் என்ப தெல்லாம் பெரும் பகட்டேயாம். எந்த அக்கிரமஞ் செய்தாவது சுயாராஜ்யமடையத் தீர்மானித்து விட்டார் கண்டீர்! சுயராஜ்யம் வந்துவிட்டாலோ குதிகுதி யென்போரெல்லாங் கூடக்குதியார். என்னே! காஷ் மீர் ஜம்மு ஆள்வார் முதலியவிடங்களில் இப்போதே சுயராஜ்யத் தை ஸ்தாபிக்கக் கலகஞ் செய்யும்மகம்மதியர்களின் சுபாவம் சாதுவான இந்துக்களை இலேசாய் விடாது கண்டீர். (33) கோடி யில் யாரோ (30) பேர் அலகபாத்திற்கூடி சமாதானம் சமாதானம் என்றமேல் வேஷம் போட்டால் மூலை முடுக்குகளில் இந்தியா முழுதும் நிறைந்திருக்கும் மற்றைய மகம்மதியர்களின் சுபாவத் தை மாற்ற முடியுமோ? இப்போதே இணங்கிவராத அவர்கள் அப் போது சும்மாயிருப்பார? சுபாவம் போகுமா? அவர்களுக்குத் துணையாக ஆப்கானிஸ்தானம் இருக்கிறது. அன்றியும் அரேபியா வும் பாரசீகமும் துருக்கியுமிருக்கிறது ஜாக்கிரதை. அதோடு ருஷ் யாவினுடைய உதவியும் பெறக்கூடும். சந்து விட்டாற்போதுமென் றிருக்கின்றது ருஷ்யாவும். ஜப்பானோ இங்கிலீஷ்கார ரோடிவிட் டால் எமாந்த இந்துக்களை இராஜாளிபுறுவைக்கவ்வுகிறது போற் கவ்விப் பரதகண்டத்தை விழுங்கி ஏப்பம்விட ஏங்குகிறது. பிறகு இந்துக்களெல்லாம் இஞ்சிதின்று இளநாகத்தைக் கையிற்பற்றி மிளகாயுங் கடித்துவிட்டுத்தேளுங்கொட்டித்தீயின்மேற் பாயுங்குரங் கைப்போல் விழிக்க வேண்டியதே. சந்தேகமில்லை. இல்லாவிடில்

அலிசகோதரர்கள் முன்னொருகால், "இந்தியா முழுவதையும் மகம்மதியர்களாக்க வேண்டும். காந்தியை முதல் மகம்மதியனாக்க வேண்டும், அப்போது தான் சுயராஜ்யத்திற் பேதமிராது," என்று உள்ளிருந்தது பொங்கித்ததும்பி வெளிக்கிளம்பிப் பூரணப்பிரவாகமாய்ப்பத்திரிகை தோறும் பரவியதைப்பகற்கனவைப்போல்மறந்துவிட்டீர்களோ. இவர்கள் இவ்வாறு கூறுவது புதிதன்று. அது அவர்கட்குச் சுபாவமென்பதை அரங்கீப், ஐதர், திப்பு, கஜினி முகம்மத், கோரி, நாதர்ஷா முதலியவர்களுடைய சரித்திரத்திலிருந்துந்தெரிந்துகொள்ளலாம். இப்போதும் பஞ்சாப்வங்காளம்சென்னை முதலான விடங்களில் ஏமாந்தவர்களை மகம்மதியர்களாக்குவதுங் கண்கூடே. எல்லோருக்கும் பொதுவானவீதியிற் போகும் சுவாமியின் ஊர்வலம் கலியாண ஊர்வலம் முதலியவற்றில் மசூதியண்டை அக்கிரமமாய் "ஜாரேபான்சோத்மேளத்தை நிறுத்து நம்பிள்கி ஊதரான் இல்லே" என்றுகட்டாயப்படுத்திக்கலகஞ் செய்வதும், திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பூக்கடைச்சமீபத்திலுள்ள மாரியம்மன்கோவில் உற்சவம் நடக்குங்காலத்து லப்பைத்தெருவிலுள்ளார் பெருங்கலகம் விளைத்தலின் போலீஸ் பந்தோபஸ்து வருஷந்தோறும் ஏற்படுவதும் வடநாட்டிற் பக்ரீத்காலத்திற் பசுக்களை மகம்மதியர்கள் வேணுமென்றே கொலை செய்வதாற் கணக்கற்ற இந்துக்கள் மனம்பொறுக்காமற் சண்டேசுர நாயனார்போற் பரிந்துபேசி உயிர்மாள்வதையும் யாரால் மறைக்கமுடியும்? முடியாது முடியாது. ஈஸ்வரன்கோயிலையிடிப்பதும் இலிங்கத்தைத் தகர்ப்பதும் விக்கிரகங்களைக் கொண்டு மாடிக்குப் படிகளமைப்பதும் ஈஸ்வரன் கோயில் பெருமாள்கோயில்களினருகேவேண்டுமென்றேஅவர்கள் இடுகாடு (சுடுகாடு) ஏற்படுத்துவதும், காஞ்சி, திருவேட்டீஸ்வரன் பேட்டை முதலிய விடங்களில் ஈஸ்வரன்கோயில் மண்டபத்தை மசூதியாக்கிக் கொள்வதும், மயிலைக் கபாலீஸ்வரர் குளத்தைத் தாங்கள், அல்லாபண்டிகை காலத்திறங்கி யசுசிப்படுத்துவதும் அதைஅரசாங்கத்தார் தடுக்காதிருப்பதுவும்உலகமறியாதோ? இன்னும், சுயராஜ்யங்கிடைத்துவிட்டால்மாத்திரமமேல் கீழ் என்பது எவ்வாறு ஒழிந்துவிடும். ஒருபோதும்ஒழியாது. உயர்வு தாழ்வில்லாவிடிற் கடவுளுக்கேவேலையில்லாது கையோய்ந்துபோம் கன்மமென்பதே கிடையாது. கன்மமொழியவே காணுவித சிருஷ்டியு மொழிந்துவிடும். உலகமேயில்லை. சுயராஜ்யத்திற்காகப்பாடுபடவேண்டியதேயில்லை. மேலும் சுயராஜ்யங் கிடைத்துவிடிற் போலீசுமிராதா? நீதிஸ்தலங்களிராதா? மூடர்களென்றும் நீதிபதிகளென்றும் பேதமிராதா? எல்லோருக்கும் பேதமின்றிச் சம்பளங் கிடைக்குமா? எல்லோருஞ் சர்வாதிகளாய் விடுவரா? வியபிசாரஞ் செய்பவன் திருடுகிறவன் மோசஞ் செய்கிறவன் அடிப்பவன் குத்துபவன் கொலை செய்பவன் இவர்களுக்குத் தண்டனையேயிராதா?

"'அவர்களைத்தண்டிப்பது ஹிம்சையாகும், ஆகையால் அப்பா நீ திருடாதே. ஓடிப்போ, அப்பா நீ அவன்பெண்டாட்டியைக் கைபிடிக்காதே ஓடிப்போ அப்பா நீ அவனை இனிக்கொலைசெய்யாதே ஓடிப்போ" என்று மன்னித்து ஓட்டிவிடுவரா? அற்றேல் இராணுவாதிகாரம் நமக்கு வேண்டுமென வாதாடுவதும் அடாது. ஆகா இதென்ன அஹிம்சா தருமமோ? யாரையேமாற்றுவதோ! இதனுற்றான் உலகத்தை அவர் வஞ்சிக்கிறார் என முன்கூறினோம். "இப்போது நம்மிடம் துப்பாக்கி, குண்டு (Arms and Ammunition) இல்லாததால் அந்தப்பாட்டைப்படுகிறேன். காரியம் முடிந்துவிட்டாற் பழையபடி எல்லாம் ஏற்பட்டுவிடும்" என்றால் அதுவும் பெருமோசமே. இவர்கருத்துப்படி சத்தியாக்கிரஹமாகாது, ஆகவே சுயராஜ்யத்திலும் எல்லாப்பேததமும் ஏற்பட்டேதீரும். அவனவன் கன்மத்திற்கேற்றவாறே இன்பமுந் துன்பமும் ஏற்படும். தனவந்தன் ஏழை என்றபேதம் இருந்தேதீரும் என்பது ஒருதலை. ஏனெனின் எல்லோருஞ் சர்வாதிகாரியாயிருக்க முடியாது. ஆனால் இங்கிலாந்து ஜப்பான் முதலிய இடங்களிற்றோட்டி யெனப் பிரத்தியேகமாக ஓர் ஜாதியில்லை யென்றால் அந்தந்தத் தொழிலுக்காகச் சிலர் ஏற்பட்டிருப்பதால் அவர்களை யெல்லாம் சக்கரவர்த்தி ஸ்தானத்திலமர்த்த முடியாது, ஜாதியென்று வேறேவேண்டுமோ? கவர்னர் மனைவி முதலியினேரோடு ஸோல்ஜர்கள் கைகோத்து (Dance) ஆடுதல் வழக்கமின்றே, Scavenger, master, servant, mean fellow, idiots fools, Commons, Lords Destiny fate, Rowdy முதலிய ஆங்கிலவார்த்தைகள் அவர்களகராதியிற் காணவேண்டிய ஆவசியகமேயின்று. ஆனால் நம்புனிதபரத கண்டத்திலோ எல்லாங் கடவுளாஞ்ஞைப்படியே யேற்பட்ட பேதமென முன்னமேயே காட்டப்பட்ட வேதாகமஸ்மிருதியாதி வாக்கியங்களாலுணர்ந்து கொள்வாராக. பேதமின்றி உலகம் நடைபெறு தெனத்தெற்றன உணர்க.

காந்தி, கீதை ஒன்றே பின்பற்றுவேன் மற்றைய சாஸ்திரங்கள் வேண்டாமென்றார், ஆனால் இதுகாறுங்காட்டிய கீதாவசனங்களே இவர் கொள்கையை முற்றும் முறியடிக்கின்றன. சாஸ்திரங்கள் வேண்டாமென்றாரே அதையுஞ் சிறிது பார்த்து விடுவோம். வேதங்களுடைய பிரஸ்தாபம், 2-45, 4-32, 6-44, 7-8, 8-11, 8-28, 9-17, 9-20, 21, 10-22,ல் நன்கு காணப்படுகிறது. ப்ரம்ம சூத்திர பிரஸ்தாபம் 13-5, லும் வேதாந்தம் அதாவது உபநிஷத் பிரஸ்தாபம்15-15 லும் விகசிதமாய் வெளிப்போந்திருக்கிறது. இனி,

"எவன் சாஸ்திரோக்தமான விதிகளைத் தூரத்தள்ளித் தன்னிஷ்டப்படி நடக்கிறானே அவன் தத்துவஜ்ஞானத்தை அடைகிறதில்லை இந்த உலகத்திலுஞ் சுகமடைகிறதில்லை, உத்தமமான மோக்ஷத்தையும் அடைகிறதில்லை." என 16-23 ஆஞ்சுலோகம் அறைகி

ற்து. (இதனாற்றான் நரகஞ்சம்பவிக்கும் என்று இடையிடையே காட்டினோம்).

"ஆகையால் உனக்குச் செய்யத்தகுந்தது இன்னது செய்யத் தகாதது இன்னது என்பதை நிச்சயிக்கச் சாஸ்திரமே பிரமாணமா யிருக்கிறது சாஸ்திரவிதிகளிற் பிரமாணமாகச்சொல்லப்பட்டதைத் தெரிந்து கொண்டு இவ்வுலகில் உனது கர்மத்தைச் செய்யத்தகுந்த வனாய் இருக்கிறாய்" என்று 16-24 ஞ் சுலோகம் கூறிற்று. ஆகை யாற் சாஸ்திரம் வேண்டாமென்றதும் அடிபட்டுப்போயிற்று.

"இவற்றை நீஸத்குருபாதமடைந்து சிஷ்யனாகிச் சாஷ்டாங்க நமஸ்காரத்தினாலும் அடக்கமாய்க்கேட்பதினாலுங் கற்றுக்கொள்: ஞானிகளும் தத்துவ தரிசிகளும் உனக்குப் போதிப்பார்கள்" என் றது 4-34 ஞ்சுலோகம். காத்தற் கடவுளாகிய கண்ணனிடம் நேரே கேட்கும்பாக்கியமும் வேறெவரும் பார்க்கமுடியாத விசுவ ரூப தெரிசனமும் பெற்ற அர்ச்சுனனையே அவ்வாறு அவரே கட்டளை யிடுகின்றனரென்றாற் குருவை யடுக்காமலே வாயில் வந்தவாறு பேசுபவர்களை என்னென்றெடுத்துரைப்பது!

"மூடத்தனத்தால் தன்தேகத்தை வறட்சியான உபவாசத்தால் ஹிம்சித்துக் கொண்டும் இதரர்களை நாசஞ் செய்யக்கருதியும் எந் தத்தவஞ் செய்ய படுகின்றதோ அதைத் தாமஸம் என்று சொல்வார் கள்." என்றது 17-19 ம் சுலோகம்.

"அசுராம்சப்பிறவியெடுத்தவர்களுக்குச் சிரௌதஸ்மார்த்த கர்மப்ரவர்த்தி இன்னதென்றும், கர்ம நிவ்ருத்தி யின்னதென்றுந் தெரியாது. அதாவது எதை அனுஷ்டிக்கவேண்டுமோ எதை அனுஷ் டிக்கக்கூடாதோ அதையறியார்கள். அவர்களுக்குச் சுத்தமுங்கிடை யாது. ஆசாரமுங்கிடையாதுசத்தியமுங்கிடையாது," என்றது16-7ஞ் சுலோகம். ஆகவே முற்காட்டிய சுலோகங்களாற் சாஸ்திரவிதிகளுக் குக்கட்டுப்படாமற் தன்னிஷ்டப்படி மற்றவர்களும் வரவேண்டு மென்று கடடாயப்படுத்தவதற்காக உபவாசம் உபவாசம் என்று கூறுவது சாதுக்களைப் பயமுறுத்தும்படி தன்னினத்தாரைத்தூண்டு வதாகிறது. அதனாலே அநேக வைதீகர்கள் மனச்சங்கடமுற்று இராப்பகல் உறக்கமற்று இனியாது சம்பவிக்குமோ, கோயில்கள் என்ன கதியாகுமோ என்று ஏங்கச் செய்வதாற் சந்தேகமின்றிப் பிறரை ஹிம்சிப்பதும் பெருங்கலகஞ் செய்வதுமாகிறது. அநேக இடங்களில் அதாவது சிதம்பர முதலான இடங்களிற் கல்லெறி தல், குருவாயூரில் ஜாமோரின் தலை அராபிக்கடலிற் போய்விழு மெனப்பிரசங்கித்தல், ஸ்திரீகள், பிரசாரர்களை விளக்குமாற்றாலடித் தல், முதலியவற்றிற்குக் காந்திகாரண பூதராகின்றனர். ஆகவே சட் டமறுப்பை யனுமதியாத அரசாங்கத்தார் இந்தப்பெருஞ் சட்ட மறுப்பியக்கத்திற்கும் பிரத்தியட்ச கலகத்திற்கும் எவ்வாறு இடந்

தரலாம்? ஷவுகத்அலி காந்தியோடு பேச அனுமதித்தால் தங்களது அரசாங்கத்திற்கே கஷ்டம் வருமெனச் சந்தேகித்தவர்கள் சிறையிலடைப்பட்ட அவருக்குத்தீண்டாமை, ஆலயப்பிரவேச விஷயமாய் இரண்டுகோரியதரிசிகளை யமைத்துப் பலரும் பேச அநுமதித்தது முழுமோசமாகவே யிருக்கிறது, இரட்டை விஷயங் கட்கு இரட்டைக்காரியதரிசகளோ? உள்ளுக்குள்ளேயே கலகம் பலக்கட்டும் என்கிறதந்திரமோ? ஆகவே கலகம் பிரத்தியட்சமாய்விட்டதால் இனியேனும் அரசாங்கத்தார் அத்தகைய விஷயத்தை யநுமதியாமலிருப்பாராக காந்தியைப்போய்ப்பார்க்க இனிஒருவரையும் விடாமலிருப்பாராக. இல்லாவிடிற்கவர்ன்மேண்டேகலகத்திற்குக் காரணமென்றேற்பட்டுவிடுகிறது. மேலுந் தன்னைத்தான் மாய்த்துக்கோள்வதும் முற்காட்டியசுலோகப்படிஹிம்சையாகிறதாதலாற்றற்கொலை (Suicide)க்கு வேண்டிய தண்டனையும் அவரடைய வேண்டியதே.

இனி மகாத்மா என்கிற பட்டம் [(8, 15லும்,) (9, 13)லும். (11-12)லும்] (11-20,376,50,)லும் (18-4)லும் முறையே உலகபற்றற்ற எல்லாங் கடந்த ஞானிகட்கும்,(24) தத்துவம் வரைக்கும் வியாபித்த விஷ்ணுவின் அவதாரமாகிய கண்ணனுக்கும் அவருடைய உபதேசம் விசுவரூப தெரிசனமிவற்றை நேரே யனுபவித்த அர்ச்சுனனுக்கும் பிரயோகிக்கப்படுவதாற் கண்ணனைப் பின்பற்றுவேன் என்கிற காந்தியும் மஹாத்மா என்கிற பெரும் பாரத்தைச் சுமத்தலுங் கண்ணனையுங் கீதையையுஞ் தூஷித்ததாகிறது. சக்கரவர்த்தியென்று எல்லோரும் பட்டம் வைத்துக் கொள்ளலாமோ? கீதை முற்றிலும் இவரைக் கைவிட்டதாதலின் மஹாத்மா என்கிற பட்டம் செரிக்காது. அப்பர் சுந்தரர் சம்பந்தர் மாணிக்கவாசகரைப் போற் செத்தவரை யெழுப்புவரா? பதிகத்தாற் சாவச் செய்வரா! அரசர்களை யடிமைகளாக்கிக் கொள்வரா? ஊமையைப் பேச வைப்பரா? இவருடைய வயிற்றிலேற்பட்ட அதிக மாம்சம், வலக்கை நோக்காடு சுரம் முதலியவற்றிற்கே பத்து டாக்டர்கள் வேண்டியதா யிருக்கிறதே. என் செய்வது! மேலும் (6–9)ல் "எவன் சிநேகரையும், சத்துருக்களையும், பந்துக்களையும் அந்நியரையும் உத்தமரையும் பாபியையுஞ் சமமாய்ப் பார்க்கிறானோ அவன் சிரேஷ்டன்" எனக் கூறப்படுகிறது. அச்சுலோகப் பிரகாரம் அந்நியர்களாகிய ஆங்கிலேயரிடம் அவர்கள் என்ன கொடுமை செய்தாலுந் துவேஷிக்காது ஊரைவிட் டோட்டப் பார்க்காது சீமைத் துணிகளை நெருப்பு வைத்துக் கொளுத்தாது வைதீகர்களையும் வாசித்தவர்களையும் பாமரர்களேன்ற தூஷிக்காதன்றோ இவர் இருத்தல் வேண்டும்! அக்கண்ணன் கட்டளைக்கே இவர் கீழ்ப்படியவில்லையே. நேர் விரோதியாகவன்றோ இருக்கின்றனர்! ஆதலால் மகாத்மா என்கிற பட்டம் எவ்வாறு புனையலாம்? "யான் புனைந்து

கொள்ளவில்லை. பிறர் தூக்கி என் தலைமேல் வைத்தார்கள். சுமக்க இஷ்டமின்றியே சுமக்கிறேன்'' என்பாராயின், அப்போது சாஸ்திர விரோதமான விஷயத்திற்கஞ்சாது உண்ணாவிரதம் பூண்பவர் "இனி யாரும் என்னை மகாத்மா என்று அழைத்தல் கூடாது. அழைத்தால் உண்ணாவிரத மிருப்பேன்'' என்று சொல்லிவிடவேண்டும். அதற்கு ஒரு உண்ணாவிரதமும், ஆட்சேபணையுமேற்படாததால் இவருக்கும் மகாத்மா என்கிற பட்டம் பூண ஆசைபாக இருக்கிறதென்றேற்படு கிறது. (10-11-32)ல் வெளியான மித்திரனில் "என்னைப் போன்ற மகாத்மாக்கள்'' என்று காந்தியே தன்னைக் கூறிக்கொள்வதாலும் அது நன்கு வலியுறுத்தப்படும். மேலும் இவர் "என் இயக்கத்தை நிறுத்தப் 1000000 பேர்பட்டினி கிடப்பினும் நான் அதை விடமுடி யாது'' என்று 17-12-32-ல் கூறுவதாற் பெரும் பிடிவாதக்காரரென்று நன்கு தொனிக்கிறது. இக்கூற்றுஞ் சாதுக்களை ஹிம்சிக்கிறது. "என க்குக் கடவுளாஞ்ஞை யிட்டார் கடவுளாஞ்ஞையிட்டார்'' எனப் பன்முறை ஏமாற்றுகிறார்.(18-11-32)ல் பத்திரிகைமுதலியவற்றைப் பார்க்கவும். அது உண்மையானால் இவரிஷ்டப்படி வாராத வைதீ கர்களையும், வெள்ளையர்களையும் கடவுளிடம் நேரே பேசி அடக்கி விடுகிறதுதானே? சமுத்திர கலச நியாயமாகச் சிலவற்றையே தொட் டுக்கொண்டு முடித்தோம். பிறவற்றையும் புத்திமான்கள் ஆய்ந் தோய்ந்தறிவார்களாக. (மெய்கண்டார், ஹரதத்தர்), நீலகண்டர், சங் கரர், இராமாநுஜர், மத்துவர் முதலியவர்களே சிற்சில விஷயத்திற் பேதமுறுவரென்றால் வேதாகம விரோத விஷயமாகிய தீண்டாதாரா லயப் பிரவேசம், தீண்டுதல் முதலியவற்றை அறிவாளிகள் எவ்வாறு சகிப்பர்? உலகமெல்லாம் அவரைப்போற்றுகிறதேயென்றால் உலகம் என்பது சாஸ்திரக் கல்வியுடைய உயர்ந்தோர்களையே குறிக்குமாத லின் உலகந் தூற்றுகிறதேயன்றி போற்றவில்லை. சாஸ்திர சம்பிரதாய மறியாதார் கும்புகூடிக்கூச்சலிட்டால்அதை ஏற்கமுடியாது. மேலும் விருட்டி வண்டிக்காரனை நீதிபதியாக அமர்த்தி ஐயாயிரம் ரூபாய் சம்பளங் கொடுங்களென்றால் அவன் சட்ட விஷயம் வாசிக்கவில்லை யென்பர். கவர்னராய் அமர்த்துங்களென்றால் முழு மூடன் அரசி யல் விஷயந் தெரியாதவ னென்பர். குருடனுங் குஷ்டரோகியு மாகிய ஒருவனை மெடிகல் ஆபீசராக அமர்த்துங்க ளென்றாற் குருட்டுக் கண்ணோடும் குஷ்டரோகம் பிடித்த கையோடுங் கண்ட விடத்திற் கத்தியாற் கூறுபோட்டுத் துண்டந் துண்டமாக்கி விடு வனே யென்பர்? அவ்வாறாயின் சாஸ்திரக் கல்வியற்றவர்கள் சட்ட சபையில் வைதீகரை யெல்லாங் கட்டுப்படுத்த சட்டங் கொண்டு வர யோக்கியதை யுடையவரன்று. ஆகவே அரசாங்கத் தாரும் அதை அனுமதிக்கத் தக்கதன்று. மேலும், "யோகிக ளெல்லாம் ஜன சந்தடியற்ற ஏகாந்த ஸ்தானத்திற் செல்லவேண்டும். கூட்டங்

கூடாது'' என்று கண்ணன் பல விடங்களிற் போதித்தலாற் றீண்டாமையையே பழகவேண்டும் எனக் கூறினாராயிற்று. கண்ணன் கட்டளைப்படியே அநேகர் இருக்கிற விடந்தெரியாமற் பக்திசெய்து வருகின்றனர். காந்தியோ அதற்கு நேர்விரோதமாய்த் தீண்டாதார், மகம்மதியர், ஐரோப்பிய ஸ்திரீ முதலாயினாரைத் தீண்டி வளர்த்து எல்லோரையுந் தன் வசப்படுத்திக்கொண்டு பெருங் கூட்டம் போடுகிறார். ஆகையினாலேயே சாஸ்திர நுணுக்கமறியாதாரெல்லாம் அவரைப் போற்றுகின்றனர். உண்மை யறிந்த வைதீகர்களோ தூற்றுகின்றனர். அவர் கூறும் ஹரியையோ உலகத்தாரெல்லாம் போற்றவில்லை. அதனாற் கண்ணன் இவரைவிடக் கீழ்ப்பட்டவரா? அவ்வாறு சொல்ல நாவெழுமா? ஹரிஜனமென்று புதுப்பெயர் கொடுத்தால் ஹரிஜனமல்லாதார் யாரே? பழைய நிகண்டுகளையெல்லாந் தள்ளிவிட்டுக் காந்தி நிகண்டு ஒன்றும் ஆதித்திராவிடர் என்பதற்குத் தியாகராய நிகண்டு ஒன்றும் ஏற்படுத்தல்வேண்டும்போலும்! ஆனால் அவர்களிருவருக்கும் நிகண்டுபாடச் சாதுரியமின்றேயென்செய்வது! முற்கூறிய பல நிகண்டுகளைக் கற்று அவற்றிற்குக் கட்டுப்பட்டால் இந்தப் புது விபரீதம் ஏற்படாது. பழைய காலத்திலிருந்த திராவிடர் என்று தியாகராயர் கண்டு பிடித்துவிட்டதும் வெகு ஆச்சரியம். சாஸ்திரங்கள்தானே பெருஞ் சரித்திரம். சாமானியர்களெழுதியது உண்மைச் சரித்திரமாகுமா. சில வேளைகளில் அரசனது தயவுக்கோ தண்டனைக்கோ பயந்தோ அன்றிப் பணம் பெரும்பொருட்டோ அவனைப் புகழ்ந்து சரித்திரத்தை மாற்றி யெழுதவுங் கூடும். கடவுளும் வியாசரும் பராசரும் சூதரும் பிற ரிஷிகளும் அறுபான்மும்மை நாயன்மார்களும் பிறருக் கடங்கினவரன்று. துறவிக்கு வேந்தன் துரும்பன்றோ? ஆகவே அவர்களது அகச்சான்றுகளே எமக்குப் பிரமாணம் என்பதோடு இவ்விஷயத்தினைப் பூர்த்திசெய்து மேற் செல்லுதும். முதலிற் றீண்டாமையென்பது சாஸ்திரத்திலில்லை யென்பது அவர்களது வீண் கூச்சல். தீண்டாமைக்குச் சாத்திரங் காட்டிவிட்ட பிறகு ஆலயப் பிரவேசத் தடைக்கு ஆகமத்தில் ஆதாரமில்லையென்ற கூச்சல். ஆகமப் பிரமாணங் காட்டிவிட்ட பிறகு சண்டாளர் என்பது பறையரைக் குறிக்காதென்ற கூச்சல். தமிழ் நிகண்டு அகராதிகளாலும் யாம் வஜ்ஜிர ஸ்தம்பம்போல் ஸ்தாபித்துவிட்ட பிறகும் எது கூறினும் ஒத்துக்கொள்ளோம் என்ற பிடிவாதக் கூச்சல்போலும். இப்போது யார் பிடிவாதக்காரர் என்பது அறிஞரறியத் தக்கது. அக்காலத்துச் சமணர் அனல்வாதம் புனல்வாதத்திற் றிருஞான சம்பந்தரிடந்தோற்றார். இக்காலத்துச் சமணர் சாஸ்திர வாதஞ் செய்யத் திறமையற்றே விதண்டாவாதஞ் செய்து தோல்வித் தானமடைகிறார் கண்டீர்! ஆகவே இவர்களும் எவ்வாறு கோயிலில் நுழையலாம்!

## (கரு). தேவர்களுள்ளும் நான்கு ஜாதிகளுண்டென்பது.

த்வம் தேவேஷு ப்ராஹ்மண: । "நீவிர் (சிவபெருமான்) தேவர்களுள்ளேபிராமணர் என்று சாமவேதிய சதபதப்பிராம்மணத்தினும்,

ப்ராஹ்மணோயம் மஹாதேவ: க்ஷத்ரியோ விஷ்ணுரித்யபி ।
(தக்ஷகாண்டம்)

விதாஹ்யஸ்ய வைஶ்யஸ்து க்ஷத்ரிய: பாகஶாஸன: ॥
(பராசர புராணம்)

(தேவர்களுக்குள்ளே) சிவபெருமான் பிராமணர். விஷ்ணு க்ஷத்திரியர். பிரம்மா வைஸியர். இந்திரன் சூத்திரன் என்று புராணங்களிலும்,

விப்ராணாம் தைவதம் ஶம்பு: க்ஷத்ரியாணாந்து மாதவ: ।
வைஶ்யாநாந்து பவேத் ப்ரஹ்மா ஶூத்ராணாம் தைவதேந்த்ர: ॥

பிராமணர்களுக்குச் சிவபிரானும் க்ஷத்திரியர்களுக்கு விஷ்ணுவும் வைசியர்களுக்குப் பிரமாவும் சூத்திரர்களுக்கு இந்திரனுந் தெய்வம் என்று ஸ்மிருதியினும் ஸ்காந்தத்தினுங் கூறப்படுகின்றமையானும், 'வேதியா', 'அந்தணு', 'மறையோனே', என்று திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் சுந்தரரும் அளவுகடந்து அடிக்கடி தமிழ் வேதமாகிய தேவாரத்து வாய்மிரம்ப அருளுதவொலியால் ஸ்துதிக்கின்றமையானும் அவ்வாறே ஸ்ரீமந் மணிவாசகப் பிரபுவும் திருவாசகத்தில் "காப்பாய்.........முதல்வா முன்னே யென்னையாண்ட பார்ப்பானே யெம்பரமாவென்று பாடிப்பாடிப் பணிந்து பாதப்பூப் போதணைவ தென்றுகொல்லோ" என்றுள்ளங் குளிர்ந்தோதுகின்றமையானும் தேவருள்ளும் நான்கு ஜாதியுண்டெனப் பெறப்பட்டுச் சிவபெருமான் பிராமணராகின்றமையால் அச்சிவபெருமானொருவரையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுகின்ற எழுவகைப்பட்ட சைவர்களும் மற்ற தேவதைகளைத் தொழும்படியான சாமானிய பிராமணர் முதலியோர்களைப் பார்க்கினும் எத்தனையோ மடங்குயர்ந்தவர்களாகின்றனர் என்பதும் நன்கு சிந்தித்தது. பின்னால் விஸ்தரிப்போம்.

இனித் தொல்காப்பியத்தும், "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் ஐவகைமரபின் அரசர் பக்கமும் இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும் என்று பொருளதிகாரம் புறத்திணையியல் (20)ஞ் சூத்திரத்தானும் நால்வகைச் சாதியுந் தொழிலும் விரித்தோதப் பட்டிருத்தல் காண்க. இனி நாயனாரும், "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்", " அந்

தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய் நின்றது மன்னவன்கோல்", "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவா னெனின்", என்று கூறுதலுங் காண்க.

## (கக) சண்டேசுர நாயனர் ஆனிரை போற்றினமை.

பசுக்களின் மகிமையனைத்தும் நன்குணர்ந்த மகா சிவஞானி யாகிய சண்டேசுர நாயனர் பசுக்களை மேய்த்த சரித்திரம் வருமாறு:—அறுமுகக்கடவுள் ஆதியிற் சூரபத்மனை மாய்க்கும்பொருட்டு மாகேந்திரக்கடல் என்னும் இந்து மகாசமுத்திரத்திலிருந்த மாகேந்திரபுரிக்குச் சென்றவமயத்து இடையிற்றங்கி ஓர் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூசித்த காரணத்தானே திருச்சேய்ஞலூர் எனத் திருநாமம் வாய்ந்த திவ்ய க்ஷேத்திரத்தின்கண் பிராமண குலத்திற் காசிபகோத்திரத்தில் எச்சதத்தன் என்பாருக்கும் பவித்திரையென்னும் பதிவிரதா சிரோமணிக்கும் ஓர் சற்புத்திர ரவதரித்தனர். அவரது பிள்ளைத்திருநாமம் விசாரசருமனர் என்ப. அவர் ஐந்தாம் வயதிற் சிக்ஷை முதலான வேதாங்கங்களாறும், இருக்கு முதலிய வேதங்கணான்கும் சிவபிரானருளிச்செய்த காமிக முதலிய திவ்வியாகமங்களும் பூர்வ சன்ம விசேடத்தால் ஓதாதுணர்ந்தார். ஏழாண்டடைந்தபோது உபநயனஞ் செய்யப்பெற்று உலகியலை யோம்பற்பொருட்டு வேதியர்பால் வேதாத்தியயனஞ் செய்வாராயினர். அம்மறையவர்கள் வேதங்களையும் மற்றுமுள்ள கலைஞானங்களையும் ஓதுவித்தற்கு முன்னமே அப்பொருளைத் தாமே யறிந்துகொண்டு குசாக்கிரபுத்தியோடு விளங்கும் அப்புதல்வனார்மாட்டு அந்தணர்கள் இறும்பூதெய்தினர். "ஒருமைக்கட்டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து" என்ற நாயனர் கூற்றுப் பொய்க்குமோ? "பலகலை யாகமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசு பாசந்தெரித்தல் பதிபரமே யதுதா, னிலவு மருவுருவின்றிக் குணங்குறிகளின்றி நின்மலமாயேகமாய் நித்த மாகி, யலகிலுயிர்க் குணர்வாகி யசலமாகி யகண்டிதமா யாநந்த வுருவாயன்றிச், செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது தற்சிவமென்பர் தெளிந்துளோரே", என்று ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் சிவப்பிரகாசத்திற் றெரித்தாங்கு, ஏழு வயதுடைய அப்பாலகனார், சர்வ வேதாகமேதிகாச புராண ஸ்மிருதியாதிகள் கூறும் பொருள் பதி (சிவம்), பசு (ஆன்மா), பாசம் (மலம்), என்னுந் திரிபதார்த்த நிச்சயமேயென்றும் அவற்றுட் செம்பொருட்டுணிவாயுள்ளது சிவமேயென்றும் அவ்விஷயத்தினை நன்கு போதிக்குஞ் சித்தாந்த சைவமே சிறப்புடைத்தென்றும் நன்குணர்ந்து, சிதாகாசத்திற் றாக்கியாடுங் குஞ்சித பாதத்தையுடைய நடராஜ வள்ளல் நம்மை யடிமையாக வுடையாரென்னுங் கருத்தால் அக்குஞ்சித பாதத்தையே "மலர்

மிசையேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடூழிவாழ்வார்" என்ற படி தமதுதிருவுள்ளத் தாமரையின்மே லிருத்தி இடைவிடாது தியானஞ் செய்வாராயினர். "கற்றதனாலாய பயனென் கொல்வா லறிவ னற்றா டொழாஅ ரெனின்" "கோளில் பொறியிற் குண மிலவே யென்குணத்தான் றாளை வணங்காத்தலை" என நாயனா ரெடுத்துக்காட்டிய சிவாகமக்கருத்தும் ஈண்டுக் கருதற்பாற்று.

அச்சிறிய பெருந்தகையார் ஓர்நாள் வேதமோதும் பார்ப் பனச் சிறுவர் குழாத்துடன் போகுங்காலத்துப் பசுக்கூட்டங்கள் ஆண்டடைய, ஓர் ஈன்றணிமைத்தான பசுவானது இடையனை முட்ட, அவ்வாயன் அப்பசுவை யடிக்க அவ்விசார சருமர் இடை யனைக் கோபித்து அவனை விலக்கி அவனுக்குச் சற்புத்தி புகட்டுவா ராயினர்:—"இப்பெரிய உலகத்துதித்த எல்லாப் பிராணிகட்கும் மேம்பட்டதாயுங், கங்கை முதலிய தீர்த்தங்கள், தேவர்கள் முனி வர்கள் சிவபிரான் முருகக்கடவுள் முதலியோர் தனது அங்கத்தில் வீற்றிருக்கப் பெற்றதாயும், சிவபிரானுக் கபிஷேகிக்கும் பொருட் டுப் பால் முதலிய பஞ்ச கௌவியங்களையுங் கோரோசனையுங் கொடு ப்பதாயும், அச்சிவபிரானும், விஷ்ணு முதலிய ஏனைய தேவர்களுந் தரிக்கும்படியான விபூதியுண்டாவதற்குக் காரணமாய கோமயத் தைக் கொடுப்பதாயு முள்ளதன்றோ பசு! மேலுஞ் சிவலோகத்தில் வீற்றிருக்கும் இடப தேவருடைய பத்தினிகளாகிய பஞ்ச பசுக் களின் வம்சத்திற் றோன்றியதன்றோ இப்பசுக்கள்? ஆதலால் அப் பசுவை அடித்த நீ அப்பசுக்களை மேய்க்கும் வேலையினின்றும் நீங் கக்கடவாய். யானே இனி அப்பசுக்களை மேய்ப்பேன்" என்றெடுத் துக் கூறினர். அவ்விடையனும் சிவதேஜசோடு ஜொலிக்கும் அப் பிராமணச் சிறுவருக்கஞ்சி அவரைத் தொழுதகன்றான்.

பின்னர் அவ்விசார சருமனார் அப்பசுக்களின் சொந்தக் காரர்களாகிய வேதியர்களது சம்மதம் பெற்று அப்பசுக்களைத் தாமே மேய்ப்பவராயினர். அவர் பிரமசாரியாதலின் அக்கால உத்தம வழக்குப்படி பலாசக்கோலைக் கையிற்றாங்கிக் குழைவான குடுமியலையப் பூணூலில் ஈரங்குலம் அரிந்திடப்பட்ட கருமான் றோலும் பூணூலும் அழகிய சிறிய மார்பிடத்தசையத் திருவரையி லுடுத்த கோவணமும் விளங்க, மண்ணியாற்றின் கரையிற் பசும் புற்றரையில் மேய்த்து மாலைக்காலத்துச் சமித்துக்களும் தீயுண் டாக்கற்குரிய அரணிக் கோல்களையு மெடுத்துக்கொண்டு அப் பசுக்கூட்டத்தினைச் சொந்தக்காரர்கள் இல்லத்திற்குப் போக்குவா ராயினர்.

இவர் இவ்வாறு வெகு அன்பினோடு மேய்ப்பதால் பசுக்கள் மடி பெருத்து முன்னையவிட அதிகமாகப் பாலைச் சொரியப் பிரா

மணர்கள் யாகம் முதலியவற்றை நன்கு நடத்துவாரயினர். அவ் விசாரசருமர் மீதும் வெகு சந்தோஷமுற்றனர். பிறகு அவ்விசார சருமரது பெரிய உபசாரங்களினுல் அப்பசுக் கூட்டங்கள் அளவு கடந்த மகிழ்ச்சியுற்றுக் கன்றுகள் நீங்கி வீட்டிலிருந்தகாலத்தும் விசாரசருமர் சமீபத்திற் சென்று அவரையே கன்முக எண்ணி உங்காரஞ்செய்து ஒருவருங்கறவாமலிருக்கத் தாமே பாலைப்பொழி வனவாயின. அதைக்கண்ட விசாரசருமர் பசும்பாற் கீழே வீணே போகாவண்ணம் குடங்களில் நிறைத்து பதிதர்மஞ் செய்வாராய்ப் பூர்வஜென்மவாசனையால் மண்ணியாற்றின் மணற்குன்றில் ஆற்றி டைக்குறையிலுள்ள ஆத்திமரத்தின்கீழ் மணலாற்சிவலிங்கமமைத்து ஆலயத்தையுங் கோபுரத்தையும் பரிவாரதேவர்களின் ஆலயங்களை யும் மணலினுலேயே வகுத்துப் பலவிதபுஷ்பங்களையும் பறித்துக் கொண்டுவந்து சிவாகமவிதிப்படி அடிக்கடி பாலால்அபிஷேகித்துப் புஷ்பத்தைக் கொண்டருச்சிப்பாராயினர். இவரது உள்ளன்பைக் கண்ட சிவபிரானுஞ் சர்வவியாபகராதலின் அவ்விலிங்கத்தில் அதிஷ்டித்து எழுந்தருளியிருந்து அவர் பூசையை யேற்றுக்கொள் வாராயினர். "தாபரசங்கமங்கள் என்றிரண்டுருவினின்று மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கருளை வைப்பன் நீ பரன்றன்னை நெஞ் சினினை வையேனிறைந்த பூசையாய்ப்பரம் பொருளை நாளுமர்ச்சி நீயன்புசெய்தே", என்ற சிவஞான சித்திச் செய்யுளும் ஈண்டு ஞாப கத்தில் வைக்கற்பாலது. இவ்வாருக விசாரசருமனுர் 'ஒரு நெறிய மனம்' வைத்தோராய் உள்ளமுருகித் திருமஞ்சன முதலான பொருள்களிற் சம்பாதிக்காத பொருள்களை அன்பால் மானசிக மாகப்பாவித்துக் குறைவை நிறைவாக்கிப் பூசையைப் பூரணமாய் முடித்துச் சிவானந்தத்திற்றிளைப்பாராயினுர். பசுக்களோ சிவ பூசைக்கு வேண்டிய பாலையுங்கொடுத்து வீடுகளிலும் வேண்டிய பாலையுங் குறையாமற் சொரிந்தன. விசாரசருமருந் தினேதினே இடைவிடாது நியமமாக இவ்வாறு அபிஷேகித்துச் சிவபூசை செய் தலையே தமக்குச் சிறந்த திருவிளையாட்டாகக் கொண்டொழுகு வாராயினர். அவர் செய்கையைக் கண்ட அயலானொருவன் அவ் வூர் மறையவர்களிடத்துச் சென்று முறையிட்டனன் அவர்களும் அவ்விசாரசருமருடைய பிதாவையழைத்து, "உம்து குமாரன் செய்யுஞ் செய்கையைக் கேட்டீரோ? அக்கினிகோத்திரத்திற்குக் கறக்கின்ற ஓமதேனுக்களை (யாகபசுக்களை) யெல்லாம் அன்போடு மேய்க்கிறேனென்று கூறிக் கூட்டிப்போய் மண்ணியாற்றின்மணலி லே பாலையெல்லா மூற்றித்தன் மனம் போனபடி யெல்லாஞ் செய் கின்முனம். அதைக்கண்ணுற்முனொருவன் வந்து கூறயாங் கேட் டேம்" எனக் குற்றஞ்சாட்டினர்.

அதைக் கேட்டபிதாவாகிய எச்சதத்தன் (யஞ்ஞதத்தன்)

அவர்களைச் சமாதானஞ்செய்து மறுநாள் மண்ணியாற்றங்கரை யணுகி ஆண்டுள்ளதோர் குராமரத்திலேறி ஒளித்துக்கொண்டு கவனிப்பானாயினன். விசாரசருமரோ வழக்கம் போற் சிவலிங்க மமைத்துத் திருமுடிமேல் மலரிட்டுப்பாலைக் குடங்குடமாயெடுத் தபிஷேகஞ் செய்வாராயினர். அதைக்கண்ணுற்ற பிதா, கோபித்து மரத்தினின்று மிழிந்து ஓடோடியும் வந்துகோலால் திருக் குமாரரின் முதுகிற்றுக்கினைதனன். சர்வபாவங்களையும் போக்கவல்ல சிவலிங்கபூஜாதுரந்தரரான விசாரசருமனார் சிவபூசையிலேயே மனோ வாக்குக் காயங்களாகிய திரிகரணங்களையுஞ் செலுத்தி வேறொன் றுங்காணாதிருந்தமையாற்றந்தையடித்ததையும் வைததையும்உணர்ந் தாரில்லை. (இதுதான் திரிகாண சுத்தியோடு கூடிய பூசை யெனப் படும். இத்தகையபூசை எம்போன்ற சாமானியர் செய்தலரிது.)நிற்க, தந்தைமட்டும் மீட்டும் பன்முறை மைந்தனைப் புடைத்தும் அதை அவருணரவில்லை. அவர்தேகப்பற்று விட்டமகானாதலின், 'மெய்வருத் தம்பாரார்....கருமமேகண்ணாயினார்" என்று பிற்காலத்துக்குமரகுருபரர் கூறியாங்கு, சிந்தையும் மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகிய சிவத்தினிடத்திலேயே சிந்தையை நிறுத்துஞ் சமர்த்தராய்ச் சிவ பூசை யொன்றிலேயே நாட்டமுற்றிருந்தனர். அதைக்கண்ட கொடி யோனாகிய எச்சதத்தன் மிகவுஞ்சினந்து பாற்குடத்தைக்காலா லெற்றிக் கவிழ்த்தனன். அபிஷேகிக்குங்குடம் தடைபட்டுருண் டதைக் கண்ணுற்ற கண்ணுதலடியார் அத்துஷ்டகாரியஞ் செய்த வன் தன் தந்தையென்றே தெரிந்து, சிவனடியார் சிவாபராதம் பொறாராதலினாலும், சாவலோகங்கட்கும் பரமபிதா 'ஆதிபகவனாகிய' சிவபிரானாதலினாலும் உடனே எச்சதத்தனது காலைத்துணிக் குங்கருத்தால் தமது திருமுன்னிருந்த ஓர் கோலை எடுத்தலும், அது அவ்வடியாரெண்ணப்படி 'முதல்வனே முன்னின்றால் முடி யாததொன்றுளதோ' என்றவாறு சிவபிரான்றிருவருளால் மழுவாக மாறலும் அவ்வாயுதத்தால் எச்சதத்தனது காலை வெட்டலும் அவ னுங் கீழ்வீழ்ந்திறந்தனன்.

"தந்தையார் தாயார்" என்றும் 'எந்தாயரெந்தந்தை' என்றும் திருநாவுக்கரையர் திருவாய் மலர்ந்தருளி யாங்கு பந்தத்தினின் றும் முன்னமேயே விடுபட்ட விசார சருமனார் பாசுபதாஸ்திரம் போன்ற மழுவாயுதத்தாற் றந்தை மாய்ந்தவுடன், (தீண்டாதா ராலயப்பிரவேசஞ் செய்தாற் கதவடைபட்டு அவர்கள் நீங்கியபின் கதவு திறக்கப்பட்டுச் சிவாலய பூசை கிரமப்படி நடத்தல்போல), சிவ பூசைக் கிடையூறு நீங்குதலின் முன்போற் சிவபூசை செய்ய வாரம் பிக்க, அது தரியாராய்ச் சிவபிரான் ஜெகன் மாதாவாகிய அம்பிகை யோடு தருமதேவதையாகிய இடபத்தின் மேலெழுந்தருளிச் சப்த முனிவர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் வேதவாக்கியங் களாற் றம்மைத் துதிக்கக் காட்சி கொடுத்தருளினார்.

[ஞானிகள் அகப்பற்றுப் புறப்பற்றற்றுத் தற்போதங்கழன்று சிவபோதமாக நிற்பவராதலினாலும் 'உற்றாரை யான் வேண்டேன்' என்றபடி பந்தத்துவம் நீங்கிய பெரியோராதலினாலும், எனவே அவர் தஞ்செய்கையெல்லாம் சிவன் செயலாமாதலினாலும், நெருப்பிற் பழுக்கக் காய்ச்சிய இரும்பு மற்றொன்றைக் கொளுத்திவிட்டால் அது நெருப்பின் செய்கையேயன்றி இரும்பின் செய்கையன்றாதலினாலும், பேயாற் பிடிபட்டானது செய்கையனைத்தும் அவன் செய்கையாகாது பேயின் செய்கையேயாதலினாலும் சிவ கரணமுற்ற விசாரசருமனார் தன் தந்தைபாற் செய்தது பாதகமாகாது, மகா பாதகத்தினு மேம்பட்ட அதிபாதகமாகிய சிவாபராதத்திற்குப் பெரும் பிராயச்சித்தமாய் எச்சதத்தனை எமதண்டனையினின்றும் நீக்கிய பேருபகாரமாய் முடிதலை உய்த்துணர்க. இதனாற்றான் திருக்களிற்றுப்படியாரிலும், "பாதகமென்றும் பழியென்றும் பாராதே தாதையை வேதியனைத் தாளிரண்டுஞ்-சேதிப்பக் கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே தண்டீசர் தன் செயலாற்றான்" என்று திருக்கடவூர் (நாமெல்லாம்) உய்ய வந்த தேவநாயனார் கிளர்ந்தெடுத்தோதலுங் கண்டமைக. இத்தகைய சமாதானத்தையே திருஞான சம்பந்தர் மதுரையிற் சமணரைக் கழுவேற்றியதற்கும், போதிமங்கையில் புத்தநந்தி தலையிடறச் செய்ததற்குங் கொள்ள வேண்டுமென்றாகித்துணர்க.]

இது நிற்க, கண்ணுதற் பெருமானாற் காட்சியளித்தவுடன் விசாரசருமனார் ஆனந்தம் பொங்கித் ததும்பிச் சிவபிரான் றிருவடிக் கமலத்திற் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். சிவபெருமானுந் தமது திருவடியில் வீழ்ந்தெழுந்திராத ஆண்டில் இளையோரும் அறிவின் முதியோருமாய அப்பாலகனாரைத் தமது அதிதிவ்ய திருக்கரத்தாலெடுத்துப் (பரிசதீட்சை செய்து), கிருபா நோக்கம் புரிதலாகிய கட்சு தீட்சை செய்து, "நம்பொருட்டு உன்னைப்பெற்ற பிதா இறக்கும்படி கால்களை வெட்டினையாதலின் இனி உனக்குரிய தந்தையாமே" என்று (வாசக தீட்சை செய்து), தமது திருமார்பில் அணைத்து முதுகைத்தைவந்து உச்சி மோந்து மகிழ்ந்தருளினார். விசாரசருமருஞ் சிவமயமாகிச் சிவசாரூப்பியத்தையடைந்து திருவருள் வெள்ளத் துட்டிளைத்துப் பிரமன் முதலிய தேவர்கள் தம்மைத் துதிக்கத் திவ்ய சிவதேஜசோடு ஞானசூரியனாய் விளங்கினார்.

"அண்டர்பிரானுந் தொண்டர்தமக் கதிபனாக்கி யனைத்து நாம் உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோ மென்றங்கவர் பொற்றட முடிக்குத் துண்டமதி சேர் சடைக்கொன்றை மாலை வாங்கிச் சூட்டினார்" எனச் சேக்கிழார் பெரியபுராணத்திற் செப்பியவண்ணம், சிவபிரானும் அவத்ரை

தொண்டர்களுக்குத் தலைவராக்கி அவரை நோக்கி "நாம் உண்ணப்பட்ட பரிகலமும் தரிக்கப்பட்ட பரிவட்டமும் சூடப்பட்ட மாலை முதலியனவும் எல்லாம் உனக்காகும்படி சண்டீசர் பதத்தையும் உனக்குக் கொடுத்தோமென்று கூறித் தமது திருமுடியிலுள்ள கொன்றை மாலையை எடுத்துச் சூட்டினார். சண்டேசுர நாயனார் எனத் தீட்சாநாமமுற்ற விசாரசருமருந் தேவர்கள் பூமாரிபொழிய அடியார்கள் ஹரஹரவென் றாரவாரிக்க, வேதங்கள் துதிக்க பல வாத்தியங்கள் முழங்கச் சிவபிரானை வணங்கிக்கொண்டே அவர் பின் சென்று சிவலோகமடைந்தனர். எச்சதத்தனும் சண்டேசுரர் திருக்கரத்தால் வெட்டுண்டபடியாற் பாதகம் நீங்கி நரகமடையாமற் றன் சுற்றத்தினரோடு சிவலோக மடைந்தனன்.

சண்டேசுர நாயனாரும் மானுட தேகமே சிவசொரூபமாக மாறுதலடையச் சிவபிரானது திருக்குமாரராயினார். (விநாயகக் கடவுள் மூத்த பிள்ளையாரெனவும், சுப்பிரமணியக் கடவுள் இளைய பிள்ளையாரெனவுஞ் சண்டேசுர நாயனார் திருச்சேய்ஞலூர்ப் பிள்ளையாரெனவும் பெயர் பெறுதல் காண்க.) அடியார்கள் செய்யும் அவமுந்தவமாதல் இச்சரித்திரத்தினாற் பெறப்பட்டது. "அரனடிக்கன்பர் செய்யும் பாவமு மறமதாகும் பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்", என்ற அருணந்தி சிவாசாரியார் வாக்கும் ஈண்டு ஆராயற்பாற்று.

சிவாலய வழிபாடு செய்வோர் கடைசியிற் சண்டேசுரரையடைந்து வணங்கி மும்முறை யடக்கத்துடன் கைகொட்டி "எம்பெருமானே சிவபூசாபலத்தைத் தந்தருளும்" என்று பிரார்த்தித்தல் வேண்டும். இன்றேற் சிவபூசை நிஷ்பலம். ஆன்மார்த்த சிவபூசை செய்வோரும் அவ்வாறே சண்டேசுரரைக் கடைசியிற் பிரார்த்திக்கின்றனர். ஆனாற் சிலர் அசட்டையாய் அவரைப் பாராமலும் வணங்காமலுங் கைதட்டுகின்றனர். சிலர் கை நொடிக்கின்றனர். சிலர் செவிட்டுப் பிள்ளையாரென்கின்றனர். ஈதெல்லாம் அறியாமையினாலுண்டாகும் பாதகங்களாமென்றஞ்சி யகற்றுக. பக்தியோடு அவரைப் பணிக, சிவப்பிரசாதம் பெறுக. சுபம்.

நிற்க, இப்புண்ணிய சரிதையாற் போந்த பயன் இன்னுமொன்றைப் புத்திமான்கள் யூகிக்க வேண்டியது. அதாவது சிவனடியார்கள் பசுவைக் கோலினா லடித்தலையே பொறுக்காமல் அதுபற்றி வந்த தந்தையையுங் கொலை புரிவரெனின், பூர்வ கன்மத்தாற் கோஹத்தி செய்து கோமாமிச முண்ணுங் குலத்திற் சனித்து விட்டவர் கோயிலுட் புகப் பிறர் சம்மதிப்பரோ கூறுமின். கோஹத்தி செய்வோர் சிவாலயத்துட் சென்று சண்டேசுர நாயனாரையடைந்து வரம் பெறுகிறதென்றாற் பெரு

வியப்பும் விடாநகைப்புமன்றோ விளைகின்றது! ஆசை வெட்கமறியாதென்னும் பழமொழிக்கிணங்க ஆலயப்பிரவேசஞ் செய்தலாகிய அடாத காரியஞ் செய்தாற் படாதபாடு படுவர் என்பதைக் கடைப்பிடிக்க. தண்டிக்கச் சிவபெருமான் வேண்டியதில்லை. பசுக்களைக் கோலாலடித்ததையே பொறுக்காத சண்டேசுர நாயனுர் தந்தையை வெட்டிச் சாய்த்ததுபோற் கோஹத்தி செய்வோர் கோயிலுக்குள் நுழைந்தால் பெருந்தண்ட மியற்றுவாரென்பதுஞ் சத்தியம். அவர் கையில் மழுவாயுதம் வைத்துக்கொண்டு பாவிகளைக் கோபிப்பதுங் கவனிக்கத்தக்கது. நரகத்திற்கஞ்சுக. குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொள்ளற்க. சிவாலய விதிக்குக் கட்டுப்படாதார் சிவாலயப்பிரவேசஞ் செய்வதாற் போந்த பயன் யாதோ? பயன் நரகப் பிராப்தியே. இவர்கள் வெருகாலமாகக் கடவுளுக்குப் பயந்து ஆலயப்பிரவேசஞ் செய்யக் கனவிலும் நினையாமல் வெளியிலிருந்தே வணங்கி வந்தனர். ஏனெனின் கோபுரம் ஸ்தூல லிங்கமாதலின் அதனைத் தூரத்திருந்தே கைகூப்பித் தொழுதலே அவர்களுக்கேற்பட்ட விதியாதலினென்க. ஆனல் இப்பொழுதோ 'விநாசகாலே விபரீத புத்தி' என்றபடி இவர்களுக்கேற்ற கலியுக போலிக் குருவாய்க் காந்தி யேற்பட்டு அவர்களை வீணே தூண்டுதலின் சிலர் விபரீதப் போக்குடையாராயினர். ஆனல் உத்தமர்கள் அவரைப் பின்பற்றுர் என்க.

## (களா) நந்தனரையிழுத்தல், நெருப்பைப் பிடித்துக்கொண்டு நெய்க்கிணற்றி லிறங்கியதை யொக்குமெனல்.

மகா ஞானியாகிய எமது நந்தனாம் பெருநெருப்பைப் பூர்வ பட்சிகள் பிடித்தணைத்துக்கொள்ள ஆசைப்படுவானேன்? நந்தனரைக் கோயிலுள் விடவில்லையா யென்பானேன்? பெரிய புராணம் அவரைக் குறித்து யாது செப்புகின்றது? அதனைச் சிறிதாராய்ந்தலசிப் பார்ப்போமாக:—சோழநாட்டில் ஆதனூரில் புலையர் குலத்திலவதரித்த நந்தனரெனப் பெயர் வாய்ந்த அப்பெருமான் ஊர்ப்புலையனென்னுந் தொழிலுடையவரா யிருந்தனர். இருப்பினும் 'எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலு முத்தர் மனமிருக்கு மோனத்தே' என்றபடி, இருப்பினும் நிற்பினும் ஏகினும் கிடக்கினும் சதா சிவபிரானிடத் தன்புபூண் டொழுகுவாராயினர். இதன்றி அவர் பிறக்கும்போதே அந்தப் பூர்வ வாசனையோடவதரித்தவர். மறந்தும் பிற தெய்வங்களைத் தொழார். அரனைப் பாடும் வாயால் நரனைப்புகழார். சிவாலயங்கள்தோறுஞ் சென்று வாயிலின் புறத்தே நின்று மெய்யன்போடு வணங்கி அவ்வன்பின்

மிகுதியானே ஆனந்தக்கூத்தாடுவார், பாடுவார், குதிப்பார். ஓர் நாள் திருப்புன்கூருக்கேகித் திருவாயிலினின்று சுவாமியை இப் புலைச்சென்மத்தானே நேரே தரிசிப்பதற்கில்லையேயென ஏங்கினூர். உடனே சிவபெருமான் நந்தியை விலகும்படி யருளித் தரிசனங் கொடுத்தனர். அப்போதுகூட தற்போதத்தால் இறுமாப்புடன் உள்ளே நுழையாமல் வாயிலுக்கு வெளியே நின்று தற்சுதந்தர மிழந்து வணங்கிக் கோயிலின் வெளியே வலம் வந்து நடனஞ் செய்து திரும்பினர்.

இவ்வாறே பலச் சிவாலயங்களையும் வெளியிலிருந்தே வணங் கித் தம் ஜாதிக்கேற்ற பல தொண்டுகளைச் செய்துவருபவர் பூர்வீக புண்ணியத்தாற் சிதம்பரத்தைத் தரிசிக்க வேண்டுமெனும் பேரவா தம்முள்ளத்தில் அடிக்கடி உதிக்க யாது செய்வாராயினர்!

“ அன்றிரவு கண்டுயிலார் புலர்ந்ததற்பின னங்கெய்த
ஒன்றியணை தருதன்மை யுறுகுலத்தோ டிசைவில்லை
யென்றிதுவு மெம்பெருமா னேவலெனப் போக்கொழிவார்
நன்றுமெழுங் காதன்மிக நாளைப்போ வேனென்பார் ”

என்றபடி, அன்றிரவிற் கண்டுயிலாது விடிந்தபிறகு, “ அந்தச் சிதம்பரத்தை யடையலாமெனின் அவ்வூரில் உட்புகுந்து தரிசித் தற்கு நாம் பிறந்த ஜாதி யிடங்கொடாது. இதுவும் எம்பிரான் றிருவருளே ”, யென்று அங்கு போகக்கூடாதவரா யிருந்தனர். ஆனால் அவர் அவ்வாறிருந்தும் அவரை யாட்கொளுஞ் சிவபிரான் அவரை வாளா விடுவரோ? அங்கு போகவேண்டு மென்னும் பே ரவாவை நெருப்பி னெய்விட்டதுபோற் றூண்டுங்காலத்தெல்லாம் நாளைப்போவேன் நாளைப்போவேன் என்பார். இவ்வாறு பன்முறை யுங் கூறிப் பலநாள் கழியப் பிறவிச்சாகரத்தைத் தாண்டும்பொருட்டு ஓர்நாள் புறப்பட்டுச் சிதம்பரத்தின் சமீபத்தில் வந்து சேர்ந்தார். உடனே வணங்கி எழுந்து தில்லை மூவாயிரவர்களாகிய பிராமணர் கள் யாகஞ்செய்வதால் மேலெழும் புகையையும் அவர்கள் செய் யும் வேதாத்தியயனத்தையும் மடங்கள் நெருங்கியிருக்கின்ற சிறப் பையும் பார்த்துத் தமது இழிவான குலத்தை நினைத்து அச்ச முற்று அங்குச் செல்லாமல் நின்றுவிட்டார்.

பிறகு எல்லையை இரவும்பகலும் பலநாள்வலம்வந்து உள்ளே தைரியமாய் நுழைவோம் என்று அகங்காரமற்றவராய் நடராஜாது ஆனந்த நடனத்தைத் தரிசிப்பது எப்படியென்றேங்கி அத்துய ரோடு நித்திரை புரிந்தனர். அவரது திருவுள்ளத்தில் அமர்ந்திருக் கும் நடேசப்பிரான் அடியார்க் கெளியராதலின் அவர் கனவிற் றோன்றிப் புன்சிரிப்புடன் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்:—

"இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணைவா யெனமொழிந்த
அப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னாருளி யம்பலத்தே மேவினார்".

"இந்த இழிந்த பிறப்பு நீங்க நீ நெருப்பில் முழுகியெழுந்து தில்லை மூவாயிரவருடன் நம்மை வந்து தரிசிப்பாய்"யென அருளிச் செய்து அவ்வாறே தில்லை மூவாயிரவர்களுக்குந் தீயை யமைக்கச் சொல்லி மறைந்தனர். அவர்களுந் தெற்குத் திசையிலுள்ள மதிலின் புறத்திற் கோபுர வாயிலின் முன்னே அக்கினி குண்டத்தை யமைத்தார்கள். நந்தனாரும் நடேசப்பிரானுடைய குஞ்சித பாதத்தைத் தியானித்துக்கொண்டே அக்கினியை வலம்வந்து நெருப்பில் மூழ்கினார்.

மயக்கத்திற் கேதுவான பொய்ம்மையோடு கூடிய சரீரம் நீங்கித் திருமேனியிற் பூணூற் பிரகாசிக்கப் பிரமனைப்போற் சடைமுடியோடெழுந்தார். தேவர்கள் பூமாரி பொழிந்தார். தில்லை மூவாயிரவர் தொழுதார். பிறகு நந்தனார் அவர்களோடே எழுந்தருளிக் கோபுரத்தை வணங்கிக் கனகசபையி னெல்லையை யடைந்தார். பிறகு அவரை யாருங்கண்டிலர். எல்லோரு மாச்சரியமுற்றனர். தோத்திரஞ் செய்தனர். நடராஜருந் தவராஜரைத் தந்திருவடிகளைத் தொழுதிருக்கும்படி யருள் சுரந்தனர். சுபம்.

எனவே அகங்கார மமகாரமற்ற தவத்தின் மிக்காரம் நந்தனாரையே தீயில் மூழ்கச்செய்து ஆண்டருளினரென்றால், பிறர் தூண்டுகோலாலுந் தற்போதத்தாலுங் கோயிலுள் நுழையவேண்டுமென்பார் செய்யற்பாலதி யாது? சிவாலயத்துள் நுழையவேண்டுமென்பது சிவப்பிரசாதம் பெறற்கோ சிவகோபத்திற்காளாகி நரகில் விழுவதற்கோ? நுழைய வேண்டுமேன்றாற் கடவுளருள் பெற்று நெருப்பிற் குதித்துத் தெய்வீக வடிவுற்றுத் தாராளமாய் நுழையலாமே. அதுவன்றோ அவனருள் பெறும் வழி. அவ்வாறு செய்யின் யாமும் நந்தனாரைச் சிவமெனவே கொண்டு வணங்கல்போல் வணங்குவோமே. அதைவிட்டுப் பழிபாவத்திற்கஞ்சாதடாதது செய்தல் அழகோ! நல்லவர் மனம் புண்படும்படியுங் கடவுள் கோபத்திற் காளாவதுந்தானோ அஹிம்சா மார்க்கம்! நல்ல குரு! நல்ல சிஷ்யர்கள்! பளா பளா! நந்தனார் தீயிலிறங்கிப் பிறகு நுழைந்தமை உலக முழுது மறிந்திருக்க மூடர்களை ஏமாற்றும் பொருட்டு நந்தனார் சிதம்பராலயத்துள் நுழைபவில்லையாயென்பது கண்மூடிக்கபோதி கூறும் வார்த்தையன்றோ? முழு பூசனியைச் சோற்றின் மறைக்க முடியுமா? முடியவே முடியாது. அடாது செய்பவர் படாது படுவர்.

## (கஅ) முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்த மோன வள்ளலாராய உமாபதி சிவாசார்ியார் மகிமை.

நந்தனர் மோட்சமடைந்த ஸ்தலமாகிய சிதம்பரத்திலேயே பிற்காலத்தில் தில்லைவாழந்தணருள் ஒருவராய உமாபதி சிவாசாரியார் என்னும் உத்தம குரு சிகாமணி யொருவருளரானர். அவர்க்குச் சமையல் செய்வோரிடம் பெற்றான் சாம்பான் என்னுந் தீண்டாதார் குலத்தி லவதரித்த பெரியாரொருவர் விறகு கொண்டுவந்து கொடுப்பது வழக்கம். இவர் மகா பரிபாகியாதலால் உமாபதி சிவாசாரியாரிடந் தலையன்பு பூண்டாராய் 'எங்கே நாம் செய்யும் இத்தொண்டு தெரிந்தாற் காசு பெறாமல் ஏன் இவனிடம் விறகு வாங்குகின்றீர்களெனச் சமையற்காரரைக் கோபிப்பரோ' என எண்ணி உமாபதி சிவத்திற்குத் தெரியாமலே தினே தினே அத் திருத்தொண்டைச் செய்து வருவாராயினர். ஒருநாள் சமையல் சீக்கிரம் நடைபெறாமலிருக்கக் குருமூர்த்திகள் பாகஞ் செய்வோரை வினவுங்கால் "பெற்றான் சாம்பான் என்பானொருவன் பிரதிதினமும் விறகு கொணர்ந்து கொடுப்பான். இன்று மழையினால் வரவில்லைபோலும். விறகிற்குக் கூலி கொடுப்பினும் வாங்குகிறானில்லை" என்றனர். "அவன் வரின் என்னிடம் அனுப்புக" எனப் பணித்தனர் குருராயர். சாம்பான் வரலும் சமையலாளர் அவ்வாறே பணித்தனர். சாம்பான் நமக்கு நற்காலம் பிறந்துவிட்டது, எனக் குதூகலித்தாராய்ச் சிவனார்பாலேகி அடியற்றபனைபோல் வீழ்ந்து தண்டஞ் சமர்ப்பித்தனர். சிவனார் சாம்பானை நோக்கி "விறகு தினந்தோறுங் கொடுக்கின்றாயாம். கூலி பெறுகிறதில்லையாம். காரணமென்னே" என வினவலும், அதற்கு அவர் "சுவாமீ! தேவரீரிடம் அருள்பெறுமாறு வெகுநாளாய்க் காத்துக்கொண் டிருக்கிறேன். தீக்ஷையின்றி மோட்சமில்லை. ஆதலின் அடியேற்குச் சிவதீக்ஷை புரிந்து ஆட்கொள்ளல் வேண்டும்" எனப் பிரார்த்தித்தனர். அதற்கு அவர் "நீ நடராஜரிடமிருந்து ஓர் திருமுகம் வாங்கி வருவாயேல் தீக்ஷைசெய்யத் தடையில்லை' என்றனர். சாம்பானும் ஓடோடியும் வந்து நடராஜப் பெருமானது சன்னிதி வீதியிலே போய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து தமது குறையைக் கூறிக் கடவுளருள் புரியும் வரையில் எழுந்திராமல் அவ்வாறே படுத்திருந்தனர், இதுவன்றோ சத்தியாக்கிரகம்! முரட்டுத்தனமாய் அசத்தியாக்கிரகஞ் செய்வதால் யாது பயன்? நிற்க, அவரது உழுவலன்பைக் கண்ட கண்ணுதலாரும் அன்பர் வேண்டி யாங்கருளுந் திருவருட் பிரகாச வள்ளலாராதலின் ஓர் திருப்பாசுரத்தை வரைந்து அத்திருமுகத்தினை அர்த்தசாமத்திற்

கொடுத்தருளினார். அதை அவர் கொண்டுவந்து சிவனார் சந்நிதானத்தில் வைத்து நமஸ்கரித்தனர். சிவனார் திருமுகத்தை இரு கைகளாலும் நேத்திரத்திலே ஒற்றிச் சிரத்தின்மீது வைத்து ஆனந்த நிர்த்தனம் புரிந்து அதனைத் திறந்து பார்க்குங்கால்,

“ அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை”.

என எழுதியிருந்தமை கண்டுப் பரவசமுற்றுப் பெற்றான் சாம்பானுக்குச் சட்சுதீக்ஷை புரிந்து உடனே முத்தியடையச் செய்தனர். இதைக் கேள்வியுற்ற பெற்றான் சாம்பான் மனைவியும் தன் கணவன் இறந்துபட்டானென அரசனிடம் முறையிட அரசனும் உமாபதி சிவாசாரியரையழையாமல் தானே அப்பெரியாரின் சந்நிதானத்தையடைந்து சந்தேகத்தை நீக்குமாறு வேண்டலுஞ் சிவனார் தாம் பிரதிதினமும் ஆன்மார்த்த சிவபூசை செய்யும் அபிஷேக ஜலம் வீழ்ந்து பரிபக்குவமுற்ற முள்ளிச்செடியைத் திருநோக்கஞ் செய்தருளி அது சோதி சொரூபமாய் ஆகாயத்திலெழுமாறு செய்து முத்தியளித்தனர். அரசன் முதலாயினோர் சந்தேகந் தீர்ந்து ஸ்வாமிகளை வணங்கிப் போயினர்.

இதனாலறியக் கிடக்கின்றதியாது? பெற்றான் சாம்பானைப் போன்ற பெரிய பரிபாகியாயிருப்பினும் கடவுளது ஆஞ்ஞைபெற்ற பிறகே சிவனார்போன்ற மகான்களால் ஆட்கொள்ளப்படுவரென்பதும் அதுவும் மீன் தன் கண்ணாற் பார்த்துச் சினையைக் குஞ்சாக்குவதுபோல் தீண்டாமலே சட்சு தீட்சையாகிய கண்ணாற் பார்த்து அருள்செய்து மோட்சமளிப்பாரென்பதும், பெற்றான் சாம்பானைப் போன்ற பெரியாரும் குருமூர்த்திகளது திருவுள்ள முவக்குமாறு அடக்கம் பூண்டு திருப்பணி செய்வார்களென்பதும் ஞான குருவின் கிருபாகடாட்சமின்றி மோட்சமில்லையாதலின் அவர் மூலமாகவே அதனைப் பெறுமாறு முயற்சிப்பதல்லாது தற்போதத்தால் கோயிலுள் நுழைய மாட்டாரென்பதும் வீதியிலேயே தற்போதங் கழன்று படுத்துக் கிடந்து சிவனருள் பெறுவரென்பதும் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதி னுணரக்கிடக்கின்றது.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।

“ஹே! பிராஹ்மணோத்தமர்களே எலி

முதலானதுகளாலாவது தீபத்தாலாவது அக்னியினாலாவது, வேறு ஜாதிகளாலாவது இலிங்கம், விக்ரஹம் இவைகள் தொடப்பட்டாலுந் தூஷிக்கப்பட்டாலும் பிராயச் சித்தஞ் செய்யவேண்டும்." எனச் சிவபெருமான் இருஷிகளைப் பார்த்து (காமி-உத்தர-174) ஞ்சுலோகத்தாலாஞ்ஞையிடுவாரானால் மற்றவர்கட்குக் கேட்பானேன்? மேலும் அறிவற்ற பிராணியாகிய எலி ஏறுகின்றதால் மனிதனும் ஏறி உட்காரலாம் எனக் கூறும் புத்திமானெவனோ? ஆழ்ந்தாலோசிக்க.

தேகம் ஸ்தூலம். தேகத்தை வியாபித்து உள்ளிருக்கும் ஜீவான்மா சூட்சுமம். ஜீவான்மாவை வியாபித்து இருதயத்தில் வீற்றிருக்கும் பரமான்மா அதி சூட்சுமம். அவ்வாறே உலகம் ஸ்தூலம். கோயில் சூட்சுமம். சிவலிங்கம் அதி சூட்சுமம். இவ்விலிங்கத்திலேயே சர்வ வியாபகராகிய சிவபெருமான் அஸ்தகமஸ்தகசையோகத்தாலும் மந்திர பலத்தாலும் அதிஷ்டித்துப் பசுவின் பால் முலைக் காம்பின் வழி வெளிப்படல்போல், பக்குவான்மாக்களுக்கு வெளிப்பட்டருள் புரிவர். சூரியன் அல்லது தீபத்தின் உஷ்ணமும் வெளிச்சமும் வெகுதூரம் பரவுகிறது. வெளிச்சத்தையோ கிரணத்தையோ ஒருவரும் அசுத்தப்படுத்த முடியாது. விளக்கு அல்லது சூரிய வெளிச்சத்தில் மலஜலங் கழித்தால் அவை அசுத்தப்படா. ஆனால் விளக்கு அல்லது சூரியன்மீது அசுத்தஞ் செய்யலாமோ? அவைகளின் அருகே செல்லச் செல்ல உஷ்ணமும் வெளிச்சமும்அதிகரிக்கும். அவ்வாறேஇலிங்கத்தினின்றுங் கோயிலெல்லை வரையில் மூர்த்திகரமதிகம். மேலும் அரசனை மனைவியணையலாம், மக்கள் தீண்டலாம். மந்திரிகள் நெருங்கலாம். சிப்பாய்கள் தூரஇருக்கலாம். மற்றவர் வெகுதூரம் இருத்தல் வேண்டும் அரசனது ஆஞ்ஞை யெங்கும் வியாபித்து எல்லோருக்கும் பொதுவாயிருப்பினும் உலகத்திலுள்ளோரெல்லாம் அரசனைத்தீண்டலாகாது நெருங்கலாகாது. அவ்வாறே ஆலயத்துள்ளும் இன்னார் இன்னார்தான் செல்லலாம் இங்கிங்கே நிற்கலாம். இன்னார் செல்லக் கூடாதென விதி முன்னரேயே காட்டப்பட்டது. விரிக்கிற் பெருகும்.

தென் தேசத்திலேதான் ஆசாரம் அதிகமென்கிறார்கள். அது வாஸ்தவமே.இக்காரணத் தானேசர்வலோகைகநாயகனாகிய ஸ்ரீமத் நடராஜ வள்ளலும் வடக்கேயுள்ள கைலையினின்றுங் கிளம்பித் தென்தேயத்திலுள்ள திருவாலங்காட்டு இரத்தின சபையிலும்,பின்னர்த் தில்லைக்கண்ணுள்ள கனகசபையினும் பிறகு மதுரைக்கண்ணுள்ள இரசித சபையினும், பின்னர்த் திருநெல்வேலியிலுள்ள தாமிர சபையினுந் திருக்குற்றாலத்திலுள்ள சித்திர சபையினும் வந்து வந்தாடுகின்றனர். அத்திருக்கூத்தைத் தரிசிக்கத் தேவர்

களும் மூவர்களும் ஓடியோடி விரைகின்றனர். இன்னும் வட தேயத்துப் பண்டிதர்கள் ஆகமம் என்கிற பெயரே யறியாதவர்கள். ஆலயப் பிரவேச மியக்க மேற்பட்ட இரண்டுமாத காலமாகத் தான் ஆகமம் என்கிற சப்தம் அவர் காதில் விழுகிறது. இனி ஆகமத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டார்களானல் பிறகு ஆலயப் பிரவேச விஷயமாக ஒன்றும் வாய் திறவார்கள். ஆகமச் சுலோகங்களை நன்கு பிரகாசப்படுத்திவிட்டோ மாதலின் அவர் களும் ஒத்துக்கொள்ள வேண்டியதே, இன்றேற் பண்டிதராகார். மேலும் :—

சுஞ ஶ்ரூதகாபஹிஶெஶ்வாஸ்ஸஹாஜெஷூஅவெஷ்ணவா: ।
உதூ்ஂஜாஂஸ்ஞீநஞஜ-ாூாவெஜய-நஜெவது ।
ஸநதவஞஜகாஶ்ராஸ்ூ-ஜெஊாக்ஷஊாஹியமெயமெ ।

(ஸ்காந்தம்)

என்றபடி கவுதம சாபப் பிரகா்ரம் யுகந்தோறும் வட தேயத்திலும் பிற விடங்களிலும் சில பண்டிதர்கள் மத்தியம் (கள்), மாமிசம், மீனம், முத்திரை, மைதுனம் என்னும் பஞ்சமகாரத்தையும் (இரவிலே) உடையவர்களாய், உள்ளே சாக்த பைரவ மதத்தினராய், (பகலிலே) விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்து வெளிவேஷ மாத்திர முடையோராய்ச் சிவபக்தி யின்றிச் சபையிலே வைஷ்ணவ மதத்தினராய் உண்டாட்டுக் களியாட்டு வெறியாட்டுக் கிரீடாட்டுடைய அநுசிதர்களா யொழுகுகின்றனரெனப் பெறப்படுதலின் அத்தகையார் வாக்கும் பிரமாணமாகாதெனத் தெற்றென உணர்க. சுபம்.

"தீண்டாதாராலயப் பிரவேச நிக்ரஹம்" என்னும் இச்சச் சாஸ்திரம், சர்வ சமயாதீத சுத்தாத்வைத சத்தியதரிசன சித்தாந்தசைவப் பிரசாரக, மா, நீலகண்ட சித்தாந்தியாரால் உலக க்ஷேமார்த்தம் கலி 5034 ஆங்கிரச-ஞு மார்கழி-மீ இயற்றப் பட்டது.

சுபம். சுபம். சுபம்.

---

The Kabeer Printing Works Triplicane, Madras.